Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

வாரவெளியீடு

THINAKKATHIR WEEKLY

தினக்கதிர்

5 நிமிடத்தில் CD
உங்கள் கையில்
CDயும்,பதிவுக்கும் 150/= மட்டுமே
ஒரே நாளில் கசட் ஒலிப்பதிவு
கட்டணம் 55/= மட்டுமே
CD சென்டர்
H.I.Motors,
பீச்ரோட்,
காத்தான்குடி.
Advt

ஒளி - 02 - கதிர் - 121 19.08.2001 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள் - 16 விலை - ரூபா 10/=

# பதுளை – கொழும்பு எக்ஸ்பிரஸ் ரயில் விபத்து

## 15 பேர் பரிதாப மரணம்;80 பேர் காயம்

(நமது நிருபர்)

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ' உடரட்டமெனிக்கே' கடுகதிப் புகையிரதம் தடம் புரண்டதில் பதினைந்து பேர் பலியாகியுள்ளனர். 80க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் குருநாகல், அளவை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.மேலும் பலர் புகையிரதத்தின் இடிப்பாடுகளுக்குக் கீழ் சிக்கியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

நேற்று அதிகாலை 5.55 மணியளவில் பதுளையில் இருந்து புறப்பட்ட இந்தப் புகையிரதம் அளவை பொலிஸ் பிரிவில் உள்ள யக்கல்கொட புகையிரத நிலையத்திற்கு சமீபமாகாத் தடம் புரண்டுள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களில் 45 பேர் குருநா

(8ம் பக்கம் பார்க்க)

# கட்டுநாயக்காவில் மற்றொரு மிக் 27 விழுந்து நொறுங்கி விமானி பலி!

## மாடிவீடு நாசம்;மூன்று வீடுகள் சேதம்; ஏழுபேர் காயம்

(கொழும்பு)

கொழும்பு கட்டுநாயக்க விமானப்படைத்தளத்திலிருந்து வடக்கே 2கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள சீதுவ என்னுமிடத்தில் ரஸ்ய தயாரிப்பான மிக் 27 குண்டு வீச்சு விமானம் விழுந்து நொறுங்கியுள்ளது. இச்சம்பவம் நேற்று நண்பகல் 11.20 மணியளவில் நடைபெற்றது.

பயிற்சியில் ஈடுபட்டிருந்த ரஸ்ய விமானியும் பலியாகி யுள்ளார். இயந்திரக்கோளாறே இந்த விபத்திற்கு காரணம் என விமானப்படையினர் தெரிவித்துள்ளனர்.

கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மீது தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் முதல் தடவையாக இந்த விமானம் நேற்று பயிற்சியில் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.



### வீடுகள் சேதம், 7பேர் காயம

இலங்கை விமானப்படையின் இந்தக் குண்டு வீச்சு விமானம் சர்வதேச விமான நிலையத்துக்கு சமீபமாக விழுந்து நொருங்கியத்தில் உக்ரேனிய விமானப் பயிற்சியாளர் பலியானதுடன் பொது மக்கள் ஏழுபேர் காயமடைந்தனர்.

வீடுகளின் மீது இந்த விமானம் விழுந்து நொருங்கியதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் சனத் கருணாரத்தின தெரிவித்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

## தாக்குதலுக்கு தலைமைதாங்கிச்சென்ற ராசிக்குழு உறுப்பினர் சுட்டுக்கொலை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு நகருக்கு மேற்கே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்துவதற்கு தலைமைதாங்கிச்சென்ற இராணுவ தேசிய துணைப்படையான ராசிக்குழுவைச் சேர்ந்த குட்டி என்று அழைக்கப்படும் செம்பாப்போடி மேகநாதன் (37வயது) என்பவர் இன்று சனி அதிகாலை 2 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தின் நீண்டகால உறுப்பினராவார்.

கடந்த 4 மாதங்களுக்கு முதல் விடுதலைப்புலிகள் இயக்

(8ம் பக்கம் பார்க்க)

### உள்ளே

- எஸ்.எம்.ஜி எழுதும் அரசியல் தொடர்
- சஞ்சயன் பாக்கம்
- ஒரு ஆத்மாவின் இராகம்
- இரசாயன ஆயுதங்கள் பெற்றது உண்மை
- தினக்கதிர் சினிமா

## பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுக்கு 2 இளைஞர்கள் பலி

(அலுவலக நிருபர்)

மட்டக்களப்பு நகருக்கு தெற்கே 6 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள மஞ்சந்தொடுவாயில் நேற்று முன்தினம் இரவு 7மணியளவில் இரு தமிழ் இளைஞர்கள் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் மஞ்சந்தொடுவாய் என்னுமிடத்தில் காத்தான்குடி பொலிஸ் நிலையம் உள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

### எங்கட ஊருக்குள்ள

ஆட்சியை தக்கவைக்க ஜனாதிபதிக்கு உதவுவது எங்கள் கடமை

பிரதி அமைச்சர் கணேசமூர்த்தி



எங்கட உடம,உரிம எப்படிப் போனாலும் பறவாய் இல்ல உங்க கடமைய விட வேண்டாம் தம்பி

கடந்த கால நினைவுகளை மீட்டுப்பார்க்க பதிய சரித்திரத்தில் உதயமாகிறது.

மிலேனியம் கலர்லேப்

நீண்டகால தேவையை கிழக்கு மண்ணில் பூர்த்தி செய்யசர்வதேச விருது பெற்ற 'பியூஜி' நிறுவனத்தின் அனுசரணையுடன் இம்மாதம் 20ம். திகதி மீன்பாடும் தேனாடாம் மட்டுநகரில் மொட்டு விடுகிறது

மிலேனியம் கலர்லேப்

மட்டுநகரில் புகழ்பெற்ற ராஜா கென்ஸ்ட்றக்டர் நிறுவனத்தின் மற்றொரு நிறுவனமாய் மலர்கிறது.

உலகில் மிகப் புகழ்பெற்ற இயற்கையான நிறங்களைக் கொண்ட ஒரே புகைப்பட நிறுவனமான 'பியூஜி' சேவை மட்டுநகர் மக்களின் காலடிக்கு வந்துள்ளது.

ஒரு மணிநேரத்தில் உங்கள் வர்ணப் படங்களை கழுவி எடுத்துக் கொள்ள,

எந்நேரமும் உங்கள் வாழ்வின் இனிய நிகழ்வுகள் என்றென்றும் மனங்களில் நிலைத்திருக்க இம்மாதம் 20ம் திகதி காலை 11.00மணிக்கு உதயமாகிறது.

அதி உயர் தொழில் நுட்ப சாதனங்கள் மூலம் 'பிரின்ஸ்' செய்து கொள்ள நாடவேண்டிய ஒரே நிறுவனம்

MILLENIUM COLOUR LAB
42/1A TNINCO ROAD
BATTICALOA

## விமான தாக்குதலுக்கு கண்டனம்!

(க.ஜெகதீஸ்வரன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்மூடித்தனமான தாக்குதலை மட்டக்களப்பு மாவட்ட உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் கண்டித்து அறிக்கையொன்றை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது மட்டக்களப்பு

(8ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் பிரபுக்கள் சபை வல்லுநருக்கு விசா வழங்க மறுப்பு

(லண்டன்)

இங்கிலாந்தின் பிரபுக்கள் சபையின் கௌரவ உறுப்பினரும் இங்கிலாந்து வேல்ஸ் சட்ட வல்லுநர் சபையின் முன்னாள் தலைவருமான பிரன்னர் பிரபு இலங்கை வருவதற்கு லண்டனிலுள்ள இலங்கை தூதரகம் மறுத்து விட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுநலவாய நாடுகளின் உறுப்பு நாட்டைச் சேர்ந்த இவருக்கு விசா வழங்குவதற்கு மறுக்க முடியாததால் பிரன்னர் பிரபுக்கு விசா வழங்குவது சம்பந்தமாக பிரபுவின் உதவிச் செயலாளர் கொழும்பில் வெளிவிவகார அமைச்சருடன் தொடர்பு கொள்ள

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் பேசும் மக்களின் குரலாக ஒலிக்கின்றது

தினக்கதிர்
த.பெ. இல: 06
155, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 22554
E-mail :- tkathir@snet.lk

## ''வல்லவனுக்கு வல்லவன்!

''பிரம்மாஸ்திரம்,நாகாஸ்திரம், வர்ணாஸ்திரம், அக்னியஸ்திரம்''

இப்படிப் பல பெயரில் ஒன்றையொன்று மிஞ்சிய சக்தி வாய்ந்த அஸ்திரங்கள் பற்றி மகாபாரதம், இராமாயணம், கந்தபுராணம் போன்ற பல இதிகாச புராண நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இன்றும் இன்னமும் சில கோவில்களில் இந்த காப்பியங்களும், புராணங்களும் அவை வசன நடையில் எழுதப்பட்டிருந்தாலும் ''கதை படிப்பவர்கள்'' ஒருவித இராகத்துடன் படிப்பார்கள்.

இந்தக்கதை படிப்பதைக் கேட்பவர்கள் கதையில் வரும் வீரநாயகர்கள் தங்களுக்கிடையே நடத்தும் போரை திரையில் காண்பது போல் உணர்ந்து கொள்வர்.

இதெல்லாம் புராணக்கதை. இப்படி நடைபெற முடியுமா என்று பகுத்தறிவு வாதிகள் கேட்பதுண்டு.

சில வருடங்களுக்கு முன்பு இந்த விஞ்ஞான யுகத்தில் ஈரான் - ஈராக் போர் நடந்தது. இவற்றுக்குப் பின்னணியில் வல்லரசுகள்!

இருதரப்பிலும் ஏவுகணைகள் சீறிப்பாய்ந்தன. ஒரு நாட்டின் ஏவுகணை மற்ற நாட்டுத்துருப்புக்கள் மீது ஏவப்பட்ட போது அந்த நாடு ஏவிய ஏவுகணை அதை அழித்து வேறொருகணையை ஏவியது. இவைகளும் அஸ்திரங்கள் தான்; ஆங்கிலப் பெயர்களில்!

இவை புராணக்கதைகளல்ல! இந்தப் போர் எண்ணை வளத்தால் செல்வாக்குப் பெற்ற நாடுகளுக்கிடையில் விஞ்ஞானத்தில் வளர்ச்சி பெற்ற வல்லரசுகளின் உதவியும் ஆதரவும் அனுசரணையுடனும் நிகழ்ந்தவை.

வளர்ச்சியடையாத அன்றாட வாழ்க்கைக்கே அல்லாடுகின்ற இலங்கையில் தமது சொந்த மண்ணில் சுதந்திரமாக கௌரவமாக, பாதுகாப்பாக வாழ்வதற்காக தமது தாயக பூமியாகிய வடக்கு கிழக்குப் பகுதியில் மேற் கொள்ளப்பட்டுள்ள ஆக்கிரமிப்பை எதிர்த்து இளைஞர்கள் வேறு வழியின்றி ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கி இருபதாண்டுகளாகின்றன.

இந்தப் போராட்டத்தை ''பயங்கரவாதம்'' என்று முத்திரை குத்தி இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் இன ஒழிப்பை சர்வதேச அங்கீகாரத்துடன் நிறைவேற்றுவதற்கு உலக நாடுகளிலிருந்து வலிமை பொருந்திய அஸ்திரங்களுடன் அனுதாபதையும் பெற அயராது பாடுபடுகின்றனர்.

ஒரே நேரத்தில் நாற்பது குழல்கள் பாயும் எறிகணையுடன் களம் இறங்கியவர்களுக்கு அதை விட அதிகமான குழல்கள் பாய்ந்து தாக்கித்திணறடித்து விட்டன.

அவர்களிடம் (விடுதலைப் புலிகளிடம்) 66 குழல்கள் பாயும் எறிகணைகள் இருக்கின்றன என்று யாழ்ப்பாணப் படைத் தளபதியே பின்னர் சொன்னார்!

அஸ்திரத்துக்கு அஸ்திரம் என்று தொடங்கி எறிகணைக்கு எறிகணை என்றாகி விட்டது.

இப்பொழுது ரஷ்யாவிடமிருந்து ரசாயன ஆயுதங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறதாம். (இதை இல்லையென்று இலங்கை அரசு மறுத்திருக்கிறது).

இதற்கு மாற்றீடாக இதை விடவும் வலிமையான கெடுதியான ஆயுதங்கள் மற்றவர்களிடமும் வரக்கூடும் அல்லது இருக்க கூடும். இந்நிலை ஏற்பட்டால் நாடே காடாகுமா?

''வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு'' என்பது முது மொழி.

ஆனால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அழிவு தானேயன்றி ஆக்கம் எதுவுமில்லை!

# சிங்கள வாக்குறுதிகளும் தமிழ் அரசியலும் 7



அரிசி ஹர்த்தாலில் ஏற்பட்ட இரண்டொரு உயிரிழப்புக்களும் நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மையும் டட்லியை வெகுவாகப்பாதித்தது. பதவிவிலகி அரசியலிலிருந்து சிறிது காலம் ஒதுங்கியிருக்கும்படி சிலர் கூறிய யோசனையை ஏற்று அவர் பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்து ஒதுங்கிக் கொண்ட போதுதாம் பிரதம மந்திரியாக வருவதற்குத்தமக்கு ஆதரவாகவும் உதவியாகவும் இருந்தவர்களின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்க முடியாமல் போய்விட்டது.

சேர்ஜோண் பிரதமராகப்பதவியேற்றதும் ஜி.ஜி.பொன்னம்பலத்தையும் சேர்லலிதா ராஜபக்சவையும் அமைச்சர் பதவிகளை ராஜினாமாச் செய்துவிட்டு வெளியேறும்படி கூறினார். அதன்படி அவர்களிருவரையும் வெளியேற்றி விட்டார்.

சேர் கந்தையா வைத்தியநாதனை நிர்வாக சேவையிலிருந்து அமைச்சர் பதவி கொடுத்து அரசியலுக்குள் இருந்து விட்டாயிற்று.

இன்னும் ஒரு முக்கியமானவர் பெரிய பொறுப்பான பதவியிலிருக்கிறவர் அவரையும் அப்பதவியிலிருந்து வெளியேற்றி அனுப்பிவிட்டால் எல்லாத் தொல்லை களையும் ஒழித்துக் கட்டியதாகி விடும் என்று சேர் ஜோண் கருதினார்.

இலங்கையின் ராணியாக இருந்த இங்கிலாந்தின் மகாராணி எலிஸபெத் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் புறப்படும் காலம். இலங்கைக்கும் மகாராணியை அழைக்க வேண்டுமென்று சேர் ஜோண் விருப்பம் தெரிவித்தார்.

மகாராணியாருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. மகாராணியும் இந்த அழைப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.



1954 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் இங்கிலாந்தின் எலிசபெத் மகாராணியார் தமது கணவருடன் இலங்கைக்கு வந்தார். மகாராணியையும் பரிவாரங்களையும் ஏற்றிக் கொண்டுவந்த கப்பல் கொழும்புத்துறைமுகத்தையடைந்தது. மகாராணியார் கப்பலிலிருந்து இறங்கிய துறைக்கு அப்பொழுது எலிசபெத்ராணி இறங்குதுறை, என்று பெயர் சூட்டப்பட்டது.

மகாராணியார் இலங்கையில் கால் வைப்பதற்கு பல மாதங்களுக்கு முன்னரே மகாராணியார் எங்கு வந்து இறங்குவது எப்படி வரவேற்பு அளிப்பது, யார் யார் அவரை எப்படி எப்படி வரவேற்பது மகாராணியார் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் என்னென்ன? கணவர் எடின்பர்க் கோமகன் தனியாகக் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் எவை? என்பவை பற்றி இங்கிலாந்து அதிகாரிகளும் இலங்கை அரசாங்க அதிகாரிகளும் ஆராய்நது விவாதித்துத் திட்டம் போட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

சில நிகழ்ச்சிகள் ரத்துச் செய்யப்பட்டும் சில மாற்றம் செய்யப்பட்டும் நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. எலிஸபெத் மகாராணியின் வரவேற்புக்காக அழைப்பிதழ்களும் அச்சடித்து வெளிநாட்டு ராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டுப் பிரமுகர்களுக்கும் அனுப்பப்பட்டிருந்தன.

கொழும்பு நகர மேயருக்கும் இந்த அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருந்தது.அப்பொழுது கொழும்பு நகர மேயராக இருந்தவர் டி.உருத்திரா என்ற தமிழர்.

மகாராணியாரை ஏற்றி வரும் கப்பல் துறைமுகத்தில் வந்து நின்றபின் எத்தனை மணிக்கு அவரை வரவேற்பதற்கு வரவேற்பாளர்கள் வரவேண்டும். எவர் எவர் எந்த எந்த [illegible] வர வேண்டும் எந்த ஒழுங்கில் [illegible] ஆசனங்களில் அவர்கள் போய் அமரவேண்டும் என்பதெல்லாம் ஒழுங்கு செய்யப்பட்டு அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டிருந்தன.

மகாராணியை கொழும்பில் வரவேற்கும் நிகழ்ச்சியில் கொழும்பு நகரமேயருக்கு அளிக்கப்படவேண்டிய ஒழுங்கு முறை வரிசை முறை சரியாகப் பின்பற்றப் படாமல் பின் தள்ளப்பட்டிருந்தது.

இந்த ஒழுங்கு முறை கொழும்பு நகர மேயரை அவமதிப்பதாகும் என்றும் இதை தன்னால் ஏற்று மகாராணியாரை வரவேற்க முடியாதென்றும் மேயர் உருத்திரா அறிவித்தா.

இதுபற்றி மேயர் உருத்திராவுடன் இலங்கை-இங்கிலாந்து அதிகாரிகள் சமரசம் பேசினர். இதில் சமரசத்துக்கு இடமில்லையென்றார். கொழும்பு நகர மேயருக்கு உரிய கௌரவம் அளிக்கப்படாமல் அகௌரவப்படுத்துவது கொழும்பு மாநகர மக்களை அவமானப்படுத்துவதாகும் என்று கூறி விட்டார்.

**எஸ்.எம்.ஜி**

இந்த சம்பவம் கொழும்புப்பத்திரிகைகளில் சில தினங்கள் வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியது. வரவேற்பு ஒழுங்கு முறைகளில் மாற்றம் செய்யப்பட்டு கொழும்பு மாநகர மேயருக்கு உரிய இடமளிக்கப்படாவிட்டால் தாம் துறைமுகத்தில் மகாராணியாரை வரவேற்பதற்குச் செல்லப்போவதில்லையென்று மேயர் உருத்திரா உறுதிபடச் சொல்லி விட்டார்.

ஆனால், மகாராணியாருக்கு கொழும்பு மாநகரசபை அளிக்கும் வரவேற்பில் மகாராணியாரை வரவேற்றுக் கௌரவிப்போம் என்றும் மேயர் உருத்திரா அறிவித்தார்

எலிஸபெத் மகாராணியார் திட்டமிட்டபடி உரிய தினத்தில் உரிய நேரத்தில் கொழும் புத்துறைமுகத்தில் வந்திறங்கினார். அழைப்பிதழில் அறிவிக்கப்பட்டிருந்த ஒழுங்கு நிரலின்படி பிரமுகர்கள் துறைமுகத்தில் நின்று மகாராணியாரை வரவேற்று உபசரித்தனர். கொழும்பு மாநகரமேயர் உருத்திராமட்டும் அங்கு நிற்கவில்லை.

இதன்பின் கொழும்பு மாநகரசபை மகாராணியாருக்கு அளித்த வரவேற்புபசாரத்தின்போது மகாராணியாரை வெளிவாசலில் நின்று மேயர் உருத்திரா வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார். உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டது.



மகாராணியாரை அவமானப்படுத்தலாமா என்று சிலர் கொழும்புப் பத்திரிகையில் கேள்வி எழுப்பியிருந்தனர். இதற்கெல்லாம் கொழும்பு மாநகர சபையின் வர வேற்பின் மூலம் உருத்திரா பதிலளித்திருந்தார்! மகாராணியார் மலையகத்துக்கும் அழைத்துச் செல்லப்பட்டார். விருந்துபசாரங்கள் வரவேற்புகள் எல்லாம் சிறப்பாக நடை பெற்றன.

இலங்கை அமைச்சரவையில் டி.எஸ்.சேனநாயகா காலத்திலிருந்து ஒருவர் அமைச்சராக இருந்தார். இவர் எந்தத் தொகுதியிலும் தேர்தலில் போட்டியிட்டதில்லை. மேல்சபையான செனட் சபையில் அங்கம் வகிப்பார். அல்லது பிரதிநிதிகள் சபையில் நியமன உறுப்பினராக இருப்பார். இரண்டாவது உலகயுத்த காலத்தில் இலங்கையில் உணவுப் பஞ்சம் ஏற்படாமல் காப்பாற்றியதற்கு இவரது மூளைதான் காரணமென்று சொல்வார்கள்.

தலையில் ஒரு முடியையும் காண [illegible] ஒரே வழுக்கை, பேசும் [illegible]தும் தொடக்கத்தில் அல்லது இடையில் கொன்னை தட்டும். திக்குவாய், ஆனால் பேசத் தொடங்கிவிட்டால் தடையின்றிப் பேசுவார். அவர் பெயர் சேர் ஒலிவர் குணதிலகா. இவர் தான் இலங்கை அமைச்சரவைகளில் பெரும்பாலும் உணவு அமைச்சர் பதவிவகித்தவர். இவரது அமைச்சில் நிர்வாக சேவையில் உணவு ஆணையாளராகவும் மற்றும் முக்கிய பதவிகளையும் வகித்தவர் கோ.ஆழ்வாப்பிள்ளை என்ற தமிழர். இவர்



பெயரிலிருந்தே வடமராட்சிக்காரர் என்று சொல்லி விடலாம்! சேர் ஒலிவர் மூளைசாலி அசகாயசூரர் என்று பாராட்டும் புகழும் பெற்றதற்கு ஆழ்வாப்பிள்ளை பின்புலமாக இருந்தார். என்று அப்போது சொல்லப்பட்டதுண்டு!

எலிஸபெத் மகாராணியார் இலங்கை வருவதற்கு இலங்கையின் கவர்னர் ஜெனரலாக இருந்த சோல்பரி பிரபு பெரிதும் காரணமாக இருந்தார்.

இதேசமயம் முதல் பிரதமர் கிழவன் சேனநாயகா செத்துப் போனதும் பிரதமராக வந்திருக்க வேண்டிய தன்னை ஒதுக்கித் தள்ளிவிட்டு கிழவனின் மகன் பொடியன் டட்லி சேனநாயகாவை பிரதம மந்திரியாகப்பதவியேற்கச் செய்த சோல்பரி மீது சேர் ஜோண் கொத்தலாவைக்கு உள்ளூர் ஆத்திரம் இருந்து வந்தது.

எலிஸபெத் மகாராணியாரின் இலங்கை விஜயத்தின் போது அவரது சகல வசதிகளையும் கவனிக்கும் நலன் பேணும் அமைச்சராக சேர் ஒலிவர் குணத்திலகாவே நியமிக்கப்பட்டிருந்தார். இதனால் மகாராணியார்



செல்லுமிடங்களுக்கெல்லாம் சேர் ஒலிவர் செல்லவும் மகாராணியாரின் நலன்களைக் கவனிக்கவும் மகாராணியாரிடம் தினமும் நலன் விசாரிக்கவும் வாய்ப்புக்கிடைத்தது.

மகாராணியார் இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு புறப்படும் சமயம் இலங்கையின் கவர்னர் ஜெனரலாக இலங்கையர் ஒருவரையே நியமிக்க வேண்டுமென்ற இலங்கை மக்களின் விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

அதாவது சோல்பரிப்பிரபு நீண்ட காலமாக இலங்கையின் கவர்னர் ஜெனரலாகப் பணியாற்றியிருக்கிறார். இனி இலங்கையர் ஒருவரை இலங்கையின் கவர்னர் ஜெனரலாக நியமிக்க வேண்டுமென்று இலங்கையின் பிரதம மந்திரி சேர் ஜோன் கொத்தலாவ மகாராணியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

மகாராணியும் இதற்குச் சம்மதம் தெரிவித்தார். இலங்கையிலிருந்து மகாராணியார் புறப்பட்ட சமயத்தில் இலங்கையின் புதிய கவர்னர் ஜெனரலாக சேர் ஒலிவர் குணத்திலகா நியமிக்கப்படுவதான மகாராணியாரின் அறிவிப்பு வெளி வந்தது.

டி.எஸ்.சேனநாயகாவின் மறைவைத் தொடர்ந்து தாம் பிரதமர் பதவிக்கு வருவதற்கு இடையூறாக இருந்த அல்லது மாறான அபிப்பிராயம் கொண்டிருந்த அமைச்சர்கள் அரச அதிகாரிகள் ஆகியோரை ஓரங்கட்டியதுடன் வெளிநாட்டிலிருந்தபடியே பிரதமர் பதவி நியமனம் நான் வந்து பார்த்துக் கொள்கிறேன் என்று தகவல் கொடுத்து நேரில் வந்து தன்னை ஒதுக்கிவைத்து டட்லியைப் பிரதமராக்கிய சோல்பரி பிரபுவையும் கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து அகற்றி பிரிட்டனுக்குத் திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்து விட்டார் சேர் ஜோண்.


(வளரும்........)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் கண்களை தமிழரை நோக்கி திருப்பிய

# கட்டுநாயக்கா

தமிழர்களுக்கு எதிராக சிறீலங்கா அரசு மேற்கொண்டு வரும் 18 வருடகால யுத்தத்தின் மிகமோசமான பலாபலனை கடந்தவாரம் அது அனுபவித்தது. தனது தலைநகரின், நாட்டின் ஒரேயொரு சர்வதேச விமான நிலையம் மற்றும் விமானப்படையின் தலைமையகம் போன்றவைகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதில் மிகப்பெரிய இழப்புக்களை



அது அடைந்துள்ளது. சிறீலங்கா வருடம் ஒன்றிற்கு செலவிடும் தொகையின் அரைவாசியை ஆறு மணி நேர தாக்குதலின் பின் அது இழந்துள்ளதென பொருளாதார ஆய்வாளர்கள் கணிப்பிட்டுள்ளனர். சிறீலங்கா தனது விடாப்பிடியான யுத்த மூலமான தீர்வு என்பதில் இருந்து உடனடியாக இறங்க வேண்டும் என்றும் நடந்து முடிந்த தாக்குதல்களுக்காக அரசு உடனடியாக பதவி விலகவேண்டும் என்றும் சிறிலங்காவின் அரசியல் தலைவர்கள் பரவலாக கருத்து வெளியீட்டுள்ளனர்.

*இத் தாக்குதலின் போது வெளி நாடுகளின் விமானங்கள் தாக்கப்படக் கூடாது என்பதிலும், வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் விமான நிலையத்திற்கு மிகக் குறைவாக வரும் ஓர் தினத்தைத் தேர்ந்தெடுத்ததிலும் அவர்கள் மிகவும் தெளிவாகச் செயற்பட்டுள்ளனர். கொழும்பு விமான நிலையத்திற்கு வருவதும், உல்லாசப் பயணிகளின் வருகை குறைந்திருப்பதும் தாக்குதல்களை திட்டமிட்டவர்களால் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டுள்ளது.*

சிறீலங்காவின் தலைநகர் என்றுமில்லாத பரபரப்பையும் பதட்டத்தையும் 24ம் திகதியின் பின் அடைந்துள்ளது. விமானப் படையினரும் இராணுவத்தினரும் பொலிசாரும் கூட என்றுமில்லாத ஒரு பயப்பீதியுடன் செயற்படுவதாக கூறப்படுகிறது. இப்படியான பெரும் இழப்புக்களையும், பாதுகாப்பில் கேள்விக்குறியையும் ஏற்படுத்திய தாக்குதல் பற்றி நாம் சற்று ஆராயலாம்.

சிறீலங்காவின் வர்த்தகத் தலைநகர் கொழும்பில் இருந்து 30 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள சர்வதேச விமான நிலையத்தின் அருகில் செயற்பட்டு வரும் அந்நாட்டின் விமானப்படையின் தலைமையகம் கடந்த 24ஆந் திகதி அதிகாலை தாக்குதலுக்கு உள்ளாகியது. அத்துடன் அத்தளத்தின் அருகே அமைந்திருந்த விமான நிலையத்தில் நின்றிருந்த பயணிகள் விமானங்களும் அழிக்கப்பட்டன. இத் தாக்குதல்களை சர்வதேச செய்தி ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன. இத்தாக்குதல்களை தமிழ்ப் பிரிவினைவாதிகள் மேற்கொண்டனர் என சில ஊடகங்களும், இவ்விதமான பிரமிப்பூட்டும் தாக்குதல்களை நடத்தக் கூடியவர்கள் விடுதலைப்புலிகள் மாத்திரமே என்று சில செய்தியூடகங்களும் கூறியிருந்தன. இத்தாக்குதலின் பின் விடுதலைப் புலிகளிடம் இருந்து உத்தியோகபூர்வமாக எவ்வித அறிக்கைகளும் வராத போதிலும் அனேகமான உளளூர் செய்திச் சேவைகள் மற்றும் பத்திரிகைகள் அத் தாக்குதல்கள் விடுதலைப்புலிகளின் விசேட தாக்குதல் அணிகளால் தான் மேற்கொள்ளப்பட்டது என கூறியுள்ளன. எப்படியிருந்த போதிலும் நிச்சயமாக தமிழர்கள் மீது குண்டுகளை ஏவும் சிங்களத்தின் விமானத்தளம் மீதான தாக்குதல்களை தமிழர்கள் தான் மேற்கொண்டிருக்க முடியும். இதனை உறுதியாகக் கொண்டு நாம் மேற்கொண்டு செல்லலாம்.

சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள கட்டுநாயக்காவிற்கு அருகே சிறீலங்காவின் விமானப்படைத் தலைமையகமும் அமைந்துள்ளது. இங்கு புதிதாக Ten Squadran எனப்படும் புதிய விமானப் படையணியொன்று நிலைகொண்டுள்ளது. இப்படையணி மிக வேகமாக




விரிவாக்கம் கண்டு வருகின்றது. இப்படையணிக்காக 13 கிபீர் ரக குண்டு வீச்சு விமானங்களும் எட்டு மிக்.27 ரக விமானங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த படையணியின் விரிவாக்கம், நடந்து முடிந்த தாக்குதல்களால் முறியடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அப்பகுதியில் நிலை கொண்டிருந்த விமானப்படையின் மற்றைய அணிகளின் தாக்குதல் விமானங்கள் பயிற்சி விமானங்கள் போக்குவரத்து உலங்கு வானூர்திகள், தாக்குதல் உலங்குவானூர்திகள் அழிக்கப்பட்டுள்ளன.


இந்த பிரமிப்பூட்டும் தாக்குதல் எப்படி நடத்தப்பட்டது என்பதில் இன்னமும் தெளிவான விளக்கங்கள் அளிக்கப்படவில்லை. அரசாங்கம் ஏராளமான விசாரணைக்குழுக்களை அமைத்துள்ளது. அத்துடன் பாதுகாப்பு படையினர் பல பிரிவுகளாகப் பிரிந்து இத் தாக்குதலின் முறைகள், வழிகள் போன்றவற்றை ஆராய்ந்து வருகின்றனர். இவை எல்லாவற்றையும் விட தாக்குதல் நடத்தப்பட்ட முறை அதற்காக தெரிவு செய்யப்பட்ட நாள், நேரம் போன்றவைகள் மிகவும் நுண்ணியமாக கணிப்பிடப்பட்டமை உலகையே வியப்பிற்கு உள்ளாக்கியுள்ளது. இராணுவம் மீதான தாக்குதல்கள் நடாத்தப்படும் போது பொது மக்கள் இழப்புக்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதில் போராளிகள் கவனமாக இருந்துள்ளனர். இத் தாக்குதலின் போது வெளிநாடுகளின் விமானங்கள் தாக்கப்படக் கூடாது என்பதிலும், வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் விமான நிலையத்திற்கு மிகக் குறைவாக வரும் ஓர் தினத்தை தேர்ந்தெடுத்ததிலும் அவர்கள் மிகவும் தெளிவாகச் செயற்பட்டுள்ளனர். கொழும்பு விமான நிலையத்திற்கு செவ்வாய்க்கிழமைகளில் வெளிநாட்டு விமானங்கள் வருவதும், உல்லாசப் பயணிகளின் வருகை குறைந்திருப்பதும் தாக்குதல்களை திட்டமிட்டவர்களால் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்தே அத்தினம் தாக்குதலுக்காக தெரிவு செய்யப்பட்டது என அவதானிகள் கூறுகின்றனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு வரும் வழியெங்கும் ஏராளமான சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன். அவற்றிலும் இறுதி 500 மீற்றர் பகுதியில் 3 சோதனைச்சாவடிகள் மண்மூடைகள் அடுக்கப்பட்டு விமான எதிர்ப்பு பீரங்கிகள் சகிதம் காவல்காக்கப்படுகின்றன. மேலும் விமானப்படை தலைமையகப்பகுதியில் சுமார் 360 படையினர் பகலிலும் 560 படையினர் இரவிலும் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இப்பகுதியில் 90 பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. 24 மணி நேரமும் ரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்படியான மிகக் கடுமையான பாதுகாப்புடன் சுமார் 600 ஏக்கர்கள் நிலப்பகுதியில் அமைந்துள்ள விமானப்படைத்தளத்தில் முழுமையாக 3000 வரையிலான படையினர் நிலை கொண்டுள்ளனர். இந்த தளத்தின் மீதே சுமார் 20 பேர் இருக்கலாம் என நம்பப்படும் போராளிகளால் கடுமையான தாக்குதல்கள் எதிர்பாராத வேளையில் நடத்தப்பட்டன. படைத்தளத்திற்குள் ஊடுருவி தாக்குதல்களை நடாத்தும் வரை விமானப்படையினர் தூங்கிக் கொண்டிருந்தனர் என சிறீலங்காவின் செய்தியூடகங்கள் கேலி செய்துள்ளன. மிகப் பலமான பாதுகாப்புக்களுடன் கூடிய இத்தளத்திற்குள் எப்படி தாக்குதல் அணிகள் ஊடுருவின என்பது பற்றி பலவிதமான ஊகங்கள் இல்லாதுவிடினும், தாக்குதல் ஆரம்பித்த வேளையும், அது நடத்தப்பட்ட முறையும் குறித்து ஒன்றுக்கு ஒன்று முரணான தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனாலும், நம்பத் தகுந்த சில செய்தியூடகங்களின் படி முன்னிரவில் முகாமின் வேலிகளினூடாக உள்நுழைந்த போராளிகள் பின்னிரவில் தாக்குதலை நெறிப்படுத்தி அதிகாலை ஆரம்பித்தனர் என தெரியவருகின்றது. இதற்காக கொழும்பிற்கும் கட்டுநாயக்காவிற்கும் இடையில் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கெந்தளைப் பகுதியில் ஓர் வீட்டில் இருந்தே தாக்குதலில் ஈடுபட்டவர்கள் கிளம்பியதாயும் அவர்களது அணியில் 20 முதல் 25 வரையிலானோர் இருந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

*தாக்குதலில் ஈடுபட்டவர்கள் காவலில் இருந்த விமானப் படையினரையும் அப்பகுதி மக்களையும் திசை திருப்புவதற்காக சில தினங்களுக்கு முன்பிருந்தே அங்கு நடமாடத் தொடங்கியிருந்தனர் எனக் கூறியுள்ளது.*

*தாக்குதல் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன் அதாவது உம் திகதி இரவு 8.30 மணியளவில் 10 முதல் 16 வரையிலான இளைஞர்கள் சொகுசு வாகனம் ஒன்றில் குராண மைதானத்தை வந்தடைந்தனர்.*

இவர்கள்




குளிரூட்டப்பட்ட சொகுசு பேருந்து ஒன்றில் படைத்தளத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கதிரான குராண பகுதிக்கு வந்ததாயும் குராணவிலுள்ள மேஜர் ராஜ் பெர்னாண்டோ மைதானத்தில் இறங்கி அங்கு பொழுதைக் கழித்தனர் என்றும், சரளமாக சிங்களத்தில் உரையாடினர் என்றும் சிங்களப்பாடல்களை ஒலிக்க விட்டு நடமாடினர் என்றும் அப்பகுதி மக்கள் கூறியுள்ளனர். ஒரு அணி பேருந்தில் வந்து இறங்கிய அதே வேளை, மற்றொரு அணி தொடருந்தில் வந்து கட்டுநாயக்காவிற்கு முதல் தொடருந்து நிலையத்தில் இறங்கி தொடருந்து பாதையூடாக விமான நிலைய பின்புறத்தில் அமைந்துள்ள கிம்புலப்பிட்டியவை அடைந்தனர் என்றும் கூறப்படுகிறது. எப்படியிருந்த போதிலும், இத் தாக்குதலில் இரண்டு அணிகள் ஈடுபட்டமை நம்பகமாக தெரிகின்றது. ஒரு அணி விமான நிலையப் பகுதியில் இருந்து இராணுவத்தினரை திசை திருப்பும் தாக்குதலை நடாத்த, மறு அணியே பிரதான செயற்பாடுகளை மேற்கொண்டது என ஒரு தகவல் கூறும் அதே வேளை, மற்றுமொரு தகவல், இவ்விரு அணிகளையும் இன்னும் வெளியே நின்றவாறு மற்றுமொரு அணி வழிநடாத்தியது என்றும், தாக்குதலில் ஈடுபட்ட இரு அணிகளும் உள் நுழைந்ததன் பின் பல சிறு அணிகளாக பிரிந்து தாக்குதல்களை மேற்கொண்டன என்றும் கூறுகின்றது.

சிறீலங்காவில் நடைமுறையில் இருந்துவரும் மின்வெட்டினை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தாக்குதல் அணிகள் உள் நுழைந்தன என கூறப்படுகிறது.கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள ஏடொன்று இத் தாக்குதல் தொடர்பான தனது கட்டுரையில் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் காவலில் இருந்த விமானப் படையினரையும் அப்பகுதி மக்களையும் திசை திருப்புவதற்காக சில தினங்களுக்கு முன்பிருந்தே அங்கு நடமாடத் தொடங்கியிருந்தனர் எனக் கூறியுள்ளது. தாக்குதல் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன் அதாவது 22ம் திகதி இரவு 8.30 மணியளவில் 10 முதல் 15 வரையிலான இளைஞர்கள் சொகுசு வாகனம் ஒன்றில் குராண மைதானத்தை வந்தடைந்ததாயும், அங்கு சில நிமிடங்கள் நின்றவர்கள் போகும் போது இரண்டு பைகளை விட்டுச் சென்றனர் என்றும் அதனை அவதானித்த அப்பகுதி மக்கள் காவலில் ஈடுபட்டிருந்த விமானப் படையினரிடம் அதுபற்றி

நன்றி:- ஈழமுரசு

(15ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ''ரான்'' மான்மியம் பேசுவோம் வாருங்களே....!

யாழ்ப்பாணம். தமிழ் மக்களது விடுதலைப் போராட்டத்தின் நாற்று மேடை.. ஸ்ரீலங்கா இராணுவம், இந்தியப் படைகள், விடுதலைப் புலிகள் எனப் பல ஆட்சியாளர்களைக் கண்டு முதிர்ந்த பூமி. இந்தப் பூமியில், பட்டப்படிப்புப் படித்தவர்களுக்கு அட்சரம் கற்பிக்க முயற்சிக்கும் நாடகம் இன்று அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. இந்த நாடகத்தின் சூத்திரதாரி வேறு யாருமல்ல, நம் மாண்புமிகு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கதான். அதன் நடிகர், நீங்கள் ஏற்கனவே ஊகித்திருப்பீர்கள், வடக்கு அபிவிருத்திக்கும் தமிழ் விவகாரங்களுக்கும் அமைச்சரான மாண்புமிகு டக்ளஸ் தேவானந்தா அவர்களே.

யாழ்ப்பாணத்தில் எங்கு சென்றாலும் எதைச் செய்ய முயன்றாலும் ''ரான் ரான் என்பதே பேச்சு. ரான்'' என்பது டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சின் ஆங்கிலப் பதங்களின் சுருக்கமாகும். கொழும்புக்குப் போக வேண்டுமா, கோயில்கட்ட வேண்டுமா, கைதானவர்களை விடுதலையாக்க வேண்டுமா, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் வேண்டுமா, வேலை வேண்டுமா, இதைவிட இன்னும் வேண்டுமா போகவேண்டும் ரான் அலுவலகத்துக்கு. மாதமொன்றுக்கு இரண்டாயிரம் மூவாயிரம் என சம்பளம் வழங்கும் தொண்டர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டு வருகின்றனர். ஆனால் இத் தொண்டர்களின் வேலை என்ன என்பது ஒருவருக்கும் விளங்கவில்லை. இத் தொண்டர்கள் ஏதோவொன்றுக்கு பயிற்றப்படுகின்றார்களாம். தேர்தலில் மக்களைப் பயமுறுத்துவது எப்படி என்றும் வாக்கு மோசடி செய்வது எப்படி என்றும் பயிற்றப்படுவார்கள் போலும். பொது மக்களுடனான சந்திப்புக்களில் அமைச்சர் அடிக்கடி கூறுவாராம், என்னைப் பலப்படுத்தி



விடுங்கள், உங்களுக்கு இன்னும் பல்லாயிரக்கணக்கான வேலைகள் எடுத்துத் தருவேன் என்று.

**யாழ் தீபகற்பத்தில் மிட்டாய்கள் தூவப்படுகின்றன**

இந்தப் பத்தியில் முன்பு திரும்பத் திரும்ப எழுதப்பட்டிருக்கின்றது. ஒரு சிங்கள அரசாங்கம் தன்னுடைய ஏவல் செய்யும் தமிழ் அமைச்சரை நியமித்து பேரம் பேசும் அரசியலை ஊக்கப்படுத்தினால், மக்களுக்கு எஞ்சுவது வெறும் மிட்டாய்கள்தான். ஆயிரக்கணக்கான மிட்டாய்கள் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் இன்று எங்கும் தூவப்படுகின்றன.

''அரசியல் அதிகாரம் ஈ.பி.ஆர்.எல்.எவ்வுக்குக் கொடுக்கப்பட்டது, இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்போது விடுதலைப் புலிகளுக்குக் கொடுக்கப்பட்டது, அதை அவர்கள் பயன்படுத்தவில்லையாதலினால் இனி அந்த வாய்ப்பு எனக்குக் கொடுக்கப்படவேண்டும்'' என்று சொல்லி முழுமூச்சுடன் இயங்கி இந்தப் பதவியைத் தனக்கென எடுத்துக் கொண்டவர் டக்ளஸ்.

ரான் அமைச்சராக டக்ளஸ் நியமிக்கப்பட்டபோது, இத்தகைய தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நிதிகளை ஜனாதிபதியிடம் கோரினார். ஜனாதிபதி கொடுத்தார், ஆனால் ஒரு நிபந்தனையின்பேரில்தான் கொடுத்தார். யாழ்ப்பாணத்தில் கல்வி அபிவிருத்திக்கோ வேறெந்த அபிவிருத்திக்குமோ இந்த நிதிகள் பாவிக்கப்படக் கூடாது என்பதே அந்த நிபந்தனை. யாழ் மக்களைக் குறித்து எந்தளவு பயம் சிங்களத் தலைவர்களுக்கு இருக்கின்றது என்பதற்கு இந்த விடயம் சாட்சி. இதற்கு இன்னுமோர் உதாரணமும் உண்டு. ஒருமுறை ஒரு அரசுசாரா நிறுவனம் யாழ்ப்பாணம் சென்று திட்டங்கள் ஆரம்பிப்பதற்கான அனுமதியினை பாதுகாப்பு அமைச்சிடம் கோரியபோது, இத்திட்டத்தைப் பற்றிய விவரங்களை அறிவதற்கு அமைச்சின் செயலாளரின் உதவியாளர் அந்நிறுவனத்தினைப் பேட்டி கண்டார். அந்நிறுவனத்தினர் தலைமைத்துவப் பயிற்சிகள் வழங்கி மனித வளங்களை விருத்தி செய்வதே தமது நோக்கம் என்று தெரிவித்தனர். அதற்கு அமைச்சைச் சார்ந்தவர்களோ யாழ்ப்பாணத்தில் தலைமைத்துவம் ஆகக்கூடியிருப்பதே பிரச்சினை ஆகவே நீங்கள் அங்கு சென்று வேலை செய்யமுடியாது என்று அனுமதியினை வழங்க மறுத்து விட்டனராம். ஏதும் வீட்டுத் திட்டம் செய்வதானால் விடுவோம் என்றனர். அப்படி கிலி பிடித்துப் போய் கொழும்பில் இருக்கின்றனர். ஆகவேதான் இதையெல்லாம் சரிக்கட்ட டக்ளஸை கொழும்பு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்திருக்கின்றது. எந்தவொரு அபிவிருத்திக்கும் உபயோகிக்க முடியாத எட்டுக் கோடி ரூபாய் நிதியையும் கையோடு கூடவே கொடுத்து அனுப்பியிருக்கின்றது. இதை வைத்து அமைச்சர் என்ன செய்கின்றார்? வேறென்ன, 'இந்து கலாசார' வேலைகள்தான்.

**கோயிலுக்கு 5 லட்சம், பத்திரிகை விளம்பரத்துக்கு....**

இப்பொழுதெல்லாம் யாழ் மாவட்டத்தில் ஒரு பகிடி எங்கும் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது. எந்தவொரு வேப்ப மரத்திலும் சூலத்தைக் குற்றி திருநீறு சாத்தி, அயலவர்களைச் சேர்த்து கமிட்டியாக்கிக் கொண்டு அமைச்சரிடம் போனால் கோயில் அபிவிருத்திக்கென ஐந்து லட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டு இரண்டு லட்சம் ரூபாய் உடனடியாக வழங்கப்படும். அதை எடுத்துக் கொண்டு சும்மா வந்துவிட்டாலோ ரான் அமைச்சினால் திரும்ப அழைக்கப்பட்டு செம திட்டுக்களை வாங்குவார்கள்.

நாங்கள் எவ்வளவு உதவிகள் செய்திருக்கின்றோம், பத்திரிகையில் ஒரு விளம்பரம் போட்டீர்களா என்று கேள்வி மேல் கேள்வி கேட்கப்படும். ஆகவே உடனடியாக செய்யவேண்டிய வேலை இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் செலவழித்து உதயன் தினசரியில் ஒரு விளம்பரத்தைப் போடுவதே. அந்த விளம்பரத்திற்கும் ஒரு அமைப்பு இருக்கின்றது. அமைச்சரினதும் யாழ் மாவட்டப் பாராளுமன்றப் பிரதிநிதிகளினதும் படங்கள் போட்டு ஐந்து லட்சம் ஒதுக்கி உடனடியாக இரண்டு லட்சம் வழங்கியதற்கு ஒவ்வொருவராக அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். இத்தகைய விளம்பரங்கள் குறைந்தது நான்கு அல்லது ஐந்தாவது தினமும் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்படுகின்றன. இப்படியான விளம்பரங்கள் செய்த பின்பு திரும்பப் போய் ஒதுக்கப்பட்ட நிதிகளின் மிகுதியை மறந்தும் அமைச்சிடம் கேட்கப்படாது. அந்த மிகுதிகளெல்லாம் கட்சி (அமைச்சர்?) நிதிகளுடன் சங்கமமாகி விட்டனவாம் என்று கதை உலாவுகின்றது.



மேலே கூறிய முறைகளில் வருமானம் ஈட்டுவதைத் தவிர வேறு சுயதொழில் முயற்சிகளிலும் கட்சித் தொண்டர்கள் ஈடுபட்டிருக்கின்றனர் என்று கேள்விப்படுகின்றோம். உதாரணமாக, வெளிநாட்டிலிருந்து நீங்கள் வந்து உங்கள் பாசப்பிணைப்புக்களை சந்திப்பதற்கு யாழ் மாவட்டம் செல்ல விரும்புகின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இதற்கு கிளியரன்ஸ் என்று சொல்லக்கூடிய பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வேண்டும், அந்த அனுமதியும் அதற்குப் பின்பு விமானச் சீட்டும் பெறுவதற்கு மாதம் இரண்டும் ஆகலாம். அதற்கெல்லாம் வெளிநாட்டுக்காரர்களுக்கு நேரமில்லையே. கவலைப்படத் தேவையில்லை. ரான் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டால் அவர்களே ஒரு ஏஜன்டுடன் உங்களைத் தொடர்பு படுத்தி விடுவார்கள். அந்த ஏஜன்டுக்கும் விமானச் சீட்டுக்கென்றும் ரூபாய் பத்தாயிரம் மேலதிகமாகக் கொடுத்தால் அடுத்த நாளே யாழ்ப்பாணம் செல்லலாம்.

இப்பொழுதெல்லாம் சுயமரியாதையின்றி யாசகம் கேட்டுப் பிழைப்பவர்களினதும் ஊழலுக்குத் துணை போகின்றவர்களினதும் காட்டில் மழை. இவர்களுக்கு நடுவில், இவர்களுடன் சேர விருப்பமில்லாது ஆனால் தங்கள் அன்றாடக் கடமைகளை ஆற்றும் முயற்சியில் வேறு வழியின்றி ரான் வால் பிடிக்கும் மக்களினது பாடு பெருந் திண்டாட்டம். சமூக நல்வாழ்வுக்குத் தேவையான உயரிய விழுமியங்களெல்லாம் தேசாந்திரம் போய்விட்டன.

**அமைச்சின் இடது கையும், வலது கையும்**

இவ்வாறு, தனது கட்சியினை சுயசார்பு மிக்கதாக ஆக்கும் அதே நேரம் ஆங்காங்கே மக்கள் மத்தியில் மிட்டாய்கள் தூவுவதோடு மட்டும் நின்று விடாது தனது நிலைப்பாட்டினை மக்களுடன் பகிர்ந்து கொண்டு அவர்களுக்கு 'அறிவூட்டவும் வேண்டும்' என்றும் பிரம்மப் பிரயத்தனம் எடுத்துக் கொண்டிருக்கின்றார் அமைச்சர். இதற்காக பொது அமைப்புக்களைச் சார்ந்தவர்களை ஸ்ரீதர் தியேட்டரில் ஒரு கூட்டத்துக்கு அழைத்திருந்தார். பார்வையாளர்கள் தியேட்டர் ஆசனங்களில் அமர்த்தப்பட்டனர். வெள்ளை பனியனும் வேட்டியும் வெற்றுப் பாதங்களும் என்று 'எளிமையே உருவாக' மேடையில் வந்தமர்ந்தார் அமைச்சர். 'முன்பெல்லாம் நீங்கள் நிழலைத்தான் இங்கு பார்த்திருப்பீர்கள், இன்றுதான் நிஜத்தைத் தரிசிக்கின்றீர்கள்' என்றார். 'முன்பு இங்கு வந்து சந்தோசப்பட்டிருப்பீர்கள் துக்கப்பட்டு அழுதிருப்பீர்கள் ஆனால் இன்று சந்தோசப்பட மட்டும் வந்திருக்கிறீர்கள்' என்றார். 'ஏனென்றால் தமிழ் மக்களுக்கு சேவை செய்யவென்று அமைச்சனாக நான் வந்திருக்கின்றேன்'. இந்த இடத்தில் நக்கல் சிரிப்பொன்றை உதிர்த்தார். 'நான் பாராளுமன்றத்தில் கையை உயர்த்துகின்றவன் (தனது இடது கையை வாக்களிப்பது போன்ற பாவனையில் உயர்த்திக் காட்டுகின்றார்) என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அப்படிக் கையை உயர்த்தினால்தான் இப்படி (வலது கையை முன்னால் யாசிப்பது போல நீட்டுகின்றார்) நீட்டலாம். அப்படி நீட்டி எடுத்தால்தானே தமிழ் மக்களுக்குக் கொடுக்கலாம்? ஏன்னைப் பலப்படுத்தி விடுங்கள் இன்னும் மூன்று வருடங்களில் தமிழ் மக்களுக்கு விடுதலை பெற்றுத் தருவேன்' என்று தனது பேச்சுக்கு சிகரம் வைத்ததுபோல் முத்தாய்ப்பு வைத்தார்.

**ஓம் சந்திரிகா நமோ நம**

யாழ் பிரதேசத்தின் ஐம்பத்திரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை இராணுவம் தனது தேவைக்கென சுவீகரித்திருக்கின்றது. அங்கெல்லாம் வீதி வீதியாக வீடுகள் வெறிச்சோடிப்போய்க் கிடக்கின்றன. நல்ல விவசாயம் செய்யக் கூடிய செம்மண் பிரதேசங்கள் முக்காலும் அந்த வலயத்தினுள் அகப்பட்டு தரிசு நிலங்களாகப் போய்க் காட்சியளிக்கின்றன. இது போதாதென்று வடமராட்சிப் பிரதேசத்தில் கடற்கரையின் நீளத்துக்கு மணற் கற்கள் போட்டு அணைக்கட்டு எழுப்பி முள்ளுக்கம்பி நட்டிருக்கின்றனர். கிராம மக்கள் கடற்கரைக்குச் செல்லாமலிருக்கவே இந்த ஏற்பாடு. நாங்கள் தவழ்ந்து புரண்ட எங்கள் மணலிலேயே நாங்கள் சென்றுவர எங்களுக்கு உரிமையில்லை என்று ஒரு மீனவர் கண்ணீர் விட்டார். இவர்களுக்கு படகில் சென்று மீன் பிடிக்க அனுமதி இல்லை. கட்டு மரம் மட்டும் பாவிக்கலாம், அதைக் கையால் வலித்து ஐநூறு மீட்டர் வரை மட்டுமே சென்று மீன் பிடிக்கலாம். அதுவும் எந்த நேரமும் போக முடியாது. காலை ஆறு மணிக்கும் பத்து மணிக்கும் இடையே நான்கு மணித்தியாலம் மட்டுமே கடலுக்குச் செல்ல அனுமதி உண்டு. இவ்வாறு மக்களின் தலைமைத்துவத்தினை மட்டுமல்ல, அவர்களின் சுய கௌரவத்தை மட்டுமல்ல, அவர்கள் போற்றி வந்த பாரம்பரிய விழுமியங்களை மட்டுமல்ல, அவர்களின் பொருளாதாரத்தையே வேரோடு அறுக்கத் திட்டம் போட்டு அது செயற்படுத்தப்படுகின்றது. அதற்குத்தான் அமைச்சரை சந்திரிகா யாழ் அனுப்பி வைத்திருக்கின்றார். இந்த லட்சணத்தில் கையை அப்படி உயர்த்தி இப்படி நீட்டி தமிழ் மக்களுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுக்கப் போகின்றாராம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. ஓம் சந்திரிகா நமோ நம.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துக்கு ஒரு பயணம் - 8

# யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி கசப்பானதுதான் ஆனால் மக்களின் மனவுறுதி இனிப்பானதே!

இரா.துரைரத்தினம்

யாழ்ப்பாணத்திலிருந்து தற்போது உதயன், வலம்புரி ஆகிய இரு பத்திரிகைகள் வெளிவருகின்றன. யாழ்ப்பாண பத்திரிகை துறை வரலாற்றில் ஈழநாடு பத்திரிகைக்குப் பின்னர் உதயன், முரசொலி, ஈழமுரசு, ஈழநாதம், ஆகிய பத்திரிகைகள் வெளிவந்தன. எத்தனை பிராந்திய பத்திரிகைகள் வெளிவந்தாலும் அவை அத்தனையும் இலாபத்திலேயே இயங்கின. இவற்றிற்கு காரணம் யாழ்ப்பாண மக்கள் கொழும்பு பத்திரிகைகளை விட பிராந்தியப் பத்திரிகைகளில் நம்பிக்கை கொண்டிருந்தனர். அதன் பின்னர் காலச்சூழ்நிலை காரணமாக உதயன் பத்திரிகை மட்டுமே யாழ்ப்பாணத்தில் நிலைத்து நிற்க முடிந்திருக்கிறது. ஈழநாதம் வன்னியிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. கடந்த இருவருடகாலமாக வலம்புரி என்ற பத்திரிகையும் வெளிவந்து கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாண மக்கள் மத்தியில் உதயன் பத்திரிகைக்குப் பெரும் வரவேற்பு காணப்படுகிறது. பெரும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அவ்வப் போது தனித்துவமான சிறப்பு செய்திகளை வெளியிட்டு வருவது இதற்கொரு காரணமாக இருக்கலாம்.

கடந்த சில மாதங்களுக்கு முதல் லண்டனில் இருக்கும் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை உதயன் பத்திரிகை இணையாசிரியர் வித்தியாதரன் பேட்டிகண்டு தலைப்பு செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தார். அச்செய்தியை கொழும்பில் உள்ள ஊடகங்கள் மட்டுமல்ல சர்வதேச ஊடகங்கள் பலவும் உதயன் பத்திரிகையை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டிருந்தன. அச்செய்தி தொடர்பாக வித்தியாதரன் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். மக்களின் ஆர்வத்திற்குரிய விடயம் தொடர்பாக செய்தி சேகரித்து வெளியிடுவதே ஒரு ஊடகவியலாளனின் பணியாகும். அந்தப் பணியை சிறப்பாக செய்ததற்காக வித்தியாதரன் படையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். இந்த ஒரு சம்பவமே உதயன் பத்திரிகை அச்சுறுத்தல்கள் மத்தியில் வெளிவந்து கொண்டிருக்கிறது என்பதற்கு போதுமானதாகும். உதயன் பத்திரிகை காரியாலயத்திற்கு சென்ற போது இணையாசிரியரும், பதில் பொது முகாமையாளருமான வித்தியாதரன் அலுவலகம் , அச்சகப்பகுதி, விநியோகப்பகுதி நூலகம் போன்ற பகுதிகளுக்கு கூட்டிச் சென்று காண்பித்தார்.

கல்லச்சிலிருந்து கணணியுகத்திற்குள் வந்துள்ள உதயன் பத்திரிகை இன்று 18ஆயிரம் பிரதிகள் யாழ்குடாநாட்டில் விற்பனையாகிறது. 14 பக்கங்களைக் கொண்ட இப்பத்திரிகை கைகளினால் மடிக்கப்பட்டு உரிய நேரத்திற்கு விநியோகிக்கப்படுவது ஒரு சாதனை தான். இன்னொரு சிறப்பையும் கூறியே ஆகவேண்டும். இலங்கையிலிருந்து வெளிவரும் தமிழ் பத்திரிகைகளில் செய்திகளை இறுக்கமாகவும், முழுமையாகவும் வெளியிடும் பத்திரிகை என்றும் சொல்லலாம்.

**கல்லச்சிலிருந்து கணணியுகத்திற்குள் வந்துள்ள உதயன் பத்திரிகை இன்று 18ஆயிரம் பிரதிகள் யாழ்குடாநாட்டில் விற்பனையாகிறது**

1998, 1999ம் ஆண்டுகளில் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் துணிச்சலான பத்திரிகைக்கான விருதினையும் உதயன் பத்திரிகை பெற்றுக்கொண்டது.

உதயன் பத்திரிகை காரியாலயத்திற்கு சென்றபோது அன்போடு வரவேற்று உபசரித்த பிரதம ஆசிரியர் கானமயில்நாதன் சில தினங்களின் பின்னர் தமிழ் இயக்கம் ஒன்றின் வாகனம் மோதியதால் காலில் பலத்த காயம் ஏற்பட்டு கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். அந்த விபத்து அவரை மிகவும் உடைத்து விட்டது. 20வயதில் பத்திரிகை துறையில் நுழைந்த கானமயில்நாதன் 40வருடங்கள் பத்திரிகை உலகில் காலத்தைக் கழித்து விட்டார்.

பத்திரிகைத் துறையிலிருந்து ஒதுங்கிவிடலாமா என்று யோசிக்கிறேன் என அவர் கூறியபோது இந்த விபத்து அவரை எவ்வளவு பாதித்து விட்டது என்பதை உணர முடிந்தது. ஈழநாடு பண்ணையில் கோபு உருவாக்கிய பத்திரிகையாளர்களில் கானமயில்நாதனும் ஒருவர். 20வயது இளைஞனாக ஈழநாடு ஆசிரிய பீடத்தில் இணைந்து கொண்ட இனிய நினைவுகளையும் கானமயில்நாதன் மீட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகையாளர்கள் இணைந்து வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தை உருவாக்கியிருக்கிறார்கள். மறைந்த நிமலராஜனே இதனை உருவாக்குவதற்கு முன்னின்று உழைத்தவர். அவரே செயலாளராகவும் இருந்தார். அவரின் மறைவிற்குப்பின் ஜீவகதாஸ் செயலாளராக இருக்கிறார். வீரகேசரி பத்திரிகையின் தென்மராட்சி நிருபர். பத்திரிகையாளர் கதிர்காமத்தம்பியின் தலைமையில் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் இப்போது இயங்கிவருகிறது. ஆனால் வெளிமாவட்ட ஊடகவியலாளர்களுக்கு இருக்கும் வாய்ப்பு, வசதிகள் அவர்களுக்கு இல்லை.

**ஊடகவியலாளர்கள் கணணியுகத்தில் பிரவேசித்து பல வருடங்கள் கடந்து விட்டபோதி லும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஊட கவியலாளர்கள் ஒரு தொலை பேசியை பெறுவதற்கே முடியாத வர்களாக இருக்கிறார்கள்.**

ஊடகவியலாளர்கள் கணணியுகத்தில் பிரவேசித்து பல வருடங்கள் கடந்து விட்டபோதிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஊடகவியலாளர்கள் ஒரு தொலைபேசியை பெறுவதற்கே முடியாத வர்களாக இருக்கிறார்கள்.

ஊடகவியல் தொடர்பான பயிற்சிகளை பெறும் வாய்ப்பு வசதி அவர்களுக்கு இல்லை. வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்து என்னை அழைத்திருந்தார் கள். உலகில் பலபாகங்களிலும் தமிழ் ஊடகத்துறையில் முத்திரை பதித்திருக்கும் பலரை உருவாக்கிய யாழ்ப்பாணத்தில் இன்று ஊடகவியலாளர்கள் வெளி உலகத்திலிருந்து வெகுதூரம் விலகிஇருப்பதை பார்க்கும் போது வேதனையாகவே இருந்தது.

ஒருபுறம் படையினர் உட்பட பலதரப்பினரதும் அச்சுறுத் தல். மறுபுறம் ஊடகத்துறை வேகமாக முன்னேறிவரும் வேளை அவர்கள் இன்னமும் ஒரு நூற்றாண்டுக்கு பின் தள்ளியே நிற்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் பெரும் அபிவிருத்தி நடைபெறுவதாக அரசு பிரசாரம் செய்து வருகிறது. அபிவிருத்தி என்ற பெயரில் சில உயரதிகாரிகள் சம்பாதித்துக்கொள்கிறார்கள் எனச் சொன்னார் யாழ்ப்பாண



பத்திரிகையாளர் ஒருவர்.

யாழ்ப்பாண மாவட்ட உயர்அதிகாரி ஒருவருக்கு 17 வங்கிக்கணக்குகள் இருப்பதாக யாழ்ப்பாண பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

அதேஅதிகாரி தனது மகளுக்கு 40 இலட்சம் ரூபா சீதனம் வழங்கி அண்மையில் திருமணம் செய்து வைத்ததாகவும் அங்குள்ள பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர்.

அரச அதிகாரிகள் மட்டுமல்ல அங்குள்ள இராணுவ அதிகாரிகளும் சந்தர்ப்பம் கிடைக்கின்ற போது சுழையாக வாரிக்கொள் கிறார்கள் எனச் சொன்னார் தமிழ் கட்சி ஒன்றின் வடமராட்சி பொறுப்பாளர். வடமராட்சி கிழக்கில் உள்ள மணல்க்காடு கிராமத்திலிருந்து தினசரி கட்டிட ஒப்பந்தகாரர்கள் 200க்கு மேற்பட்ட உழவு இயந்திரங்களில் மணல்களை அகழ்ந்து செல்கிறார்கள். இதனால் அந்தக் கிராமம் முற்றாக அழிந்து போகும் அபாயத்தை எதிர்நோக்கி இருக்கிறது. மணல் எடுப்பதாக இருந்தால் பிரதேச செயலாளரின் அனுமதிப் பத்திரம் பெறவேண்டும் ஆனால் கட்டிட ஒப்பந்தகாரர்கள் மணல்க் காடு இராணுவ முகாம் பொறுப் பதிகாரிக்கு பணத்தை கொடுத்து மணல் ஏற்றி வருகிறார்கள். அண்மையில் கட்டிடஒப்பந்தக்காரர் ஒருவரின் மூன்றுவயது மகளுக்கு பிறந்தநாள்விழா நடைபெற்றது. அன்றைய தினம் மணல்காடு இராணுவ முகாம் பொறுப்பதிகாரிக்கு முகாமில் பெரும் விருந்து வைக்கப்பட்டது. மூன்று இலட்சம் ரூபா செலவு செய்து முகாமில் உள்ளவர்களுக்கு குடிவகை தொடக்கம் விருந்தும் தங்கச்சங்கிலி அன்பளிப்பும் வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்த மணல்களின் ஒரு பகுதி யாழ்ப்பாண நாகவிகாரை கட்டப்படுவதற்காக கொண்டு செல்லப்படுகிறது. யாழ்ப்பாண நாகவி காரை கட்டிடம் துரிதமாக கட்டப்பட்டு வருகிறது. கட்டிடத்திற்கான நிதியின் ஒருபகுதியை யாழ்ப்பாண மாவட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து வழங்கியிருக்கிறார்கள்.

**எத்தனை பிராந்திய பதத்திரிகைகள் வெளிவந்தாலும் அவை அத்தனையும் இலாபத்திலேயே இயங்கின.**

யாழ். மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் விமானக் குண்டு வீச்சால் சேதமாக்கப்பட்டு இன்னமும் புனரமைக்கப்படாது இருக்கும் அதேநேரம் யாழ் நாக விகாரையை மீண்டும் கட்டுவதற்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நிதி வழங்கியிருக்கிறார்கள். இதுதான் யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி , இந்தக் கசப்பான நிகழ்வுகள் மனதை நெருடிய போதிலும் இன்னும் தளராது இருக்கும் அம்மக்களின் மன உறுதி ஒரு நம்பிக்கையைத் தந்தது.

ஒருவாரகாலம் யாழ். மண்ணில் இருந்த போதிலும் நான் பிறந்து வளர்ந்து விளையாடிய மண்ணில் என்னால் கால் பதிக்க அனுமதியில்லையே என்ற ஏக்கத்துடன் மீண்டும் திருமலை நகரம் (City of Trinco) கப்பலில் யாழ்ப்பாணத்தை விட்டு புறப்பட்டேன்.

(முற்றும்)

# சிங்கள என்ற சொல்லின் வரலாறு 2

பூ.ம.செல்லத்துரை

விஜயனின் தந்தையான சிகலவின் வழிவந்தவர்களே அரசர்கள் அதனால் இத்தீவு அரசர்களின் பெயர் பெற்றது. தீவில் வாழ்ந்தோர் தீவின் பெயரை பெற்றுக் கொண்டார்கள். அவர்களின் மொழி சிங்கள பாசா எனப்பட்டது என குருலுகோமி எழுதிய (தர்மப் தீபா - பக் 55) கூறுகிறது. சிகல என்ற சொல்லுக்கு இன்னுமோர் பொருளுண்டு என்று மகாவம்சம் கூறுகிறது. அதாவது சிகபாகுடனுள்ள தொடர்பினால் (தேனசம்பந்த) இவர்கள் அனைவரும் சிகல என அழைக்கப்பட்டார்கள். இவர்கள் யார் எனக் குறிக்கப்படவில்லை. இருந்தும் விஜயனும் அவன் தோழர்களும் சிகபாகோடு தொடர்பு கொண்டவர்கள் என்பதால் அவர்கள் வழித்தோன்றல்கள் சிங்களவர் என அழைக்கப்படுகிறார்கள் என (வம்சத்தபகசனி பக்.216) கூறுகிறது.

சிங்கத்தைக் கொன்றதால் சிகபாகு சிகல என அழைக்கப்பட்டான். அவனுக்கும் விஜயனுக்குமிருந்த உறவால் விஜயனும் தோழர்களும் சிகல என அழைக்கப்பட்டனர். (Geiger 1950 பக்.58) எனக் கைகர் என்ற வரலாற்று ஆசிரியர் கூறுகிறார்.

ஹியன் சாங்கின் கதை ஜம்பதீவீபத்தைச் சேர்ந்த பெரிய வியாபாரியான சிம்கவின் மகன் சிம்கள இரத்தினங்களைத் தேடி இலங்கைக்கு ஐந்நூறு வியாபாரிகளோடு வந்தவன். இராட்சகருடன் வாழ்ந்தான். தாங்கள் தங்கள் கள்ளக் காதலரால் சிறைப்படப்போவதை அறிந்ததும் வியாபாரிகள் பறக்கும் குதிரையின் உதவியோடு தங்கள் நாட்டுக்குப் பறந்து சென்றார்கள். ஜம்பதீவீபத்தின் அரசனாக சிம்கள தெரிவு செய்யப்பட்டதும் இலங்கைக்குப் படை எடுத்து வந்து இராட்சகர்களைத்துரத்தி நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றினான். இதனால் அரசனின் பெயரால் நாடு சிங்கள என அழைக்கப்பட்டது எனக் கூறுகிறது.(Beal.1958 பக்கம் 438 - 42)

சிங்களம் என்பது சிம்கள என்ற சமஸ்கிருதச் சொல்லின் விரிவாகும். சிம்கள என்றால் சமஸ்கிருதத்தில் கறுவாப்பயிருக்கு வழங்கப்பட்ட பெயராகும். கறுவாத்தீவு என்னும் பொருள்பட சங்கத (சமஸ்கிருத) மொழியில் சிங்களத்தீவிப என்பது இலங்கையின் பெயராகும். (இந்து இளைஞன் சிறப்பு மலர் 1998 - பக்கம் 45) "இலங்கையில் இந்து சமயவழிபாடு" கட்டுரையில் க.சிவக்கொழுந்து)

விஜயனதும் அவன் தோழர் மூலமாகவே சிகல - சிங்கள தோன்றியது என்றால் அது மிக மிகப் பிழையான கருத்தையே வெளிப்படுத்துகிறது. ஏனெனில் விஜயனின் கதையை ஒரு கட்டுக்கதை எனப்பல அறிஞர்கள் கூறியுள்ளார்கள். அவ்வாறல்ல சிங்கள மக்களின் நம்பிக்கையையேற்றாலும் விஜயனின் காலம் என சிங்கள புராணங்கள் தரும் குறிப்புகள் வரலாற்றோடு இணையவில்லை.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை முல்லைத்தீவு மாவட்டங்களின் எல்லைப்புறத் தமிழ்க் கிராமங்கள் அழிப்பு

**1984**ம் ஆண்டுக் காலப் பகுதியில் திருகோணமலையின் வடபுலக் கரையோரக் கிராமங்களான கொக்கிளாய் தென்னை மரவாடி கிராமங்களும் கொக்குத் தொடுவாய் கருநாட்டுக் கேணி மண்கிண்டிமலை அல்லது முந்திக்குளம் கிராமங்களும் ஒரே நாளில் பேரினவாத ஆட்சியாளர்களால் துப்பரவு செய்யப்பட்டன.

திருகோணமலை முல்லைத்தீவு மாவட்டங்களின் சங்கமத்தில் அமைந்துள்ள இத் தமிழ்க் கிராமங்களின் இருப்பில் தான் இரண்டு மாவட்டங்களின் தொடர்புகளும் தமிழ் உறவுடன் பேணப்பட்டு வந்தன. இம் மக்க



தான் அம் மக்களுக்குப் புரிந்தது.

தென்னமரவாடிக் கிராமம் சுமார் முந்நூறு தமிழ்க் குடும்பங்களைக் கொண்ட விவசாயக் கிராமமாகும். இவர்களின் விவசாய நிலங்கள் அமரி வயல், மாரி நீர், அக்கரை வெளி, மாரியா முனை ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. மழையை நம்பிய விவசாயமாக இருந்தபோதிலும் பூமி தாராளமாகவே இம்மக்களை வாழ்வித்துக் கொண்டிருந்தது.

இதேபோல் கொக்கிளாய் மீன்பிடியை நம்பிய மக்களை கூடுதலாகக்கொண்ட ஒரு கிராமம். இங்கும் விவசாயிகள் வாழ்கிறார்கள். இவர்களது விவசாய நிலம் எரிந்த காடு, மண்கிண்டி மலை ஆகிய பிரதேசங்கள் இருந்தன. இங்கு சுமார் ஐந்நூறு குடும்பங்கள் வாழ்ந்து வந்தன.

இந்தக் கிராமங்களை சிங்கள மயப்படுத்துவதன் மூலம் தொடரான தமிழ் நிலப்பரப்பைத் துண்டிக்கலாம் என அரசு கனவு

இராணுவ சிப்பாய்க்கள் பாவனை செய்தார்கள். சனங்கள் தலைமேல் கை வைத்து தங்களைச் சுட வேண்டாம் என்று கதறினார்கள். இராணுவத் தலைவர் வந்தார். சிறிய உரையொன்று ஆரம்பித்தார். அதன் சாரம் ''இனிமேல் இந்தப்பக்கம் நீங்கள் வரக் கூடாது. ஆனையிறவுக்கு அப்பால் தான் உங்களுக்கு இருப்பிடம். இது எங்கள் பூமி. ஓடிச் செல்லுங்கள்'' என்பதாகவே இருந்தது.

அன்று வெளியேறிய மக்கள் இன்றுவரை அப்பகுதிக்குச் செல்லவில்லை. தாங்கள் பிறந்து வாழ்ந்த மண்ணை இனிமேல் காண்போம் என்ற நம்பிக்கையும் அவர்களை விட்டுப் போய்விட்டது. இப்போது கொக்கிளாய், தென்னமரவாடி, இக்கிராமங்களின் வயல் நிலங்கள் எல்லாம் சிங் களவர்களால் ஆக்கிரமிக்கப் பட்டு விட்டன. தமிழர்கள் வாழும் போது போக்குவரத்து வசதி கூட இன்றிக் கிடந்த அப்பகுதிக் கிராமங்கள் அனைத்தும் இப்போது நவீன வசதிகள் கொண்ட கிராமங்களாக மாறி விட்டன.

தமிழ் மக்கள் அக்கிராமங்களில் வாழ்ந்தபோது ஒரு தடவை சிறிபுரம் பகுதிக் காடையர்கள் மூன்று தமிழ்ப் பெண்களைக் காட்டுப் பகுதிக்கு இழுத்துச் சென்று மானபங்கப் படுத்தி நிர்வாணமாகத் திருப்பி அனுப்பியதையும் அம் மண்ணில் பெரியவர்கள் இன்றும் நினைவு படுத்திக் கொள்கிறார்கள். அது மட்டுமின்றி வெடிக்காரச் சின்னையா என்பவரும் மற்றுமொருவரும்

## அரசியலில் ஓர் எழுத்தாளரின் அனுபவம்

ளுக்கு முல்லைத்தீவு மாவட்டமும். திருகோணமலை மாவட்டத்தில் வாழ்வியல் முறையில் ஒன்று போலவே தென்பட்டிருந்தன.

இந்தச் செழுமையைத் தகர்த்தெறிவதற்கான முயற்சி 1977 இல் இனக் கலவரத்தின் போது அரச படையினரால் மேற்கொள்ளப்பட்டதாக இப்பகுதி மக்கள் கூறுகிறார்கள். இந்தத் தமிழ்க் கிராமங்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய சிங்களக் குடும்பங்களே வாழ்ந்து வந்தன.

கண்ட அதே வேளையில் இப்பகுதியில் உள்ள கொக்கிளாய் கடனீரேரியின் வளத்தில் சிங்கள மீனவர்களும், மயங்கிப் போயிருந்தனர். இந்த நீரேரியில் இறால் விளைச்சல் அதிகம். நல்ல மீன்களும் ஏராளமாகக் கிடைத்தன. சிறிபுரம் போன்ற அயற் கிராமச் சிங்களவர்களுக்கு இந் நீரேரி ஒரு பொக்கிஷமாகவே இருந்தது. அவர்களும் தருணம் பார்த்தார்கள்.

எண்பத்து மூன்று கலவ

## வடக்குக் கிழக்கு நிலத்தொடர்பை அறுத்தெறியப் போடப்பட்ட சதி!

1977 இல் பரவலாக இனக் கலவரம் வெடிக்கும்வரை இப் பகுதி மக்களிடையே எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. வழக்கம் போலவே அந்தச் சிங்களக் குடும்பங்களுடனான தொடர்புகளைத் தமிழ்மக்கள் மேற்கொண்டு வந்தார்கள். ஆனால் 1977 கலவரம் தொடங்கியதும் திடீரென ஒருநாள் இச்சிங்களக் குடும்பங்கள் தங்கள் உடைமைகளை லொறிகளில் ஏற்றிக்கொண்டு இடம் பெயர்ந்தனர். அங்குள்ள ஊர்ப் பெரியவர்களோ ''எங்கள் மக்களால் உங்களுக்கு எந்த ஆபத்தும் நேராது, ஆனால் நீங்கள் உங்கள் மன ஆறுதலுக்காக போய்விட்டு வருவதானால் வாருங்கள். சந்தோஷமாக உங்கள் வரவுக்காக காத்திருக்கிறோம்" என்று வேறு சொல்லி அனுப்பி வைத்திருந்தார்கள்.

இக் குடும்பங்கள் புல்மோட்டை கனிப்பொருள் கூட்டுத் தாபனப் பகுதிக்கு இடம் பெயர்ந்தன்ர். அடுத்த நாள் காடையர்கள் தென்னைமரவாடி, கொக்கிளாய்க் கிராமங்களில் இறங்கி அங்குள்ள தமிழர் வீடுகள் எல்லாவற்றுக்கும் தீ வைத்தார்கள். தங்களுக்கு இப்படி ஒரு கேடு நடக்கும் என அவர்கள் ஒருபோதும் எதிர் பார்க்கவில்லை. அந்த சிங்கள மக்கள் காடையர்களின் உத்தரவுபபடி தான் கிராமத்தை விட்டுப் போனார்கள் என்ற விபரம் பின்னர்

ரத்தையடுத்து நிலைமை சீர் குலைந்திருந்த வேளை, தடியெடுத்த சிங்களவர் எல்லோரும்

**அருண்**

தண்டல் காரராக மாறிய சூழ்நிலை. ஒருநாள் இராணுவம் தென்னமரவாடிக் கிராமத்தைச்சுற்றி வளைத்து சில மணி நேரத்துக்குள்ளேயே அம் மக்களைத் துரத்திவிட்டது.

> **எங்கள் மக்களால் உங்களுக்கு எந்த ஆபத்தும் நேராது, ஆனால் நீங்கள் உங்கள் மன ஆறுதலுக்காக போய்விட்டு வருவதானால் வாருங்கள். சந்தோஷமாக உங்கள் வரவுக்காக காத்திருக்கிறோம்**

கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு வடபுறம் நோக்கியும், தென்புறமான திருகோணமலை நோக்கியும் அமைதியாக தங்கள் பாரம்பரிய மண்ணுக்குக் கண்ணீரால் ஆராதனை செலுத்தி விட்டு இடம் பெயர்ந்தார்கள். அடுத்த சில நாட்களில் கொக்கிளாய், கொக்கத் தொடுவாய் கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டன. கடற்றொழில் மக்களுடைய வெளியினை மோட்டார் இயந்திரங்களைத்தூக்கி வரச் செய்து பொது இடமொன்றில் போட்டு இராணுவம் தீயிட்டு மகிழ்ந்தது. ஊர் மக்களை மூன்று மூன்று பேராக பாடசாலை வளவில் நிறுத்திச் சுட ஆயத்தமாவது போல்

சிறிபுரக் காடையர்களால் கொல்லப்பட்டதையும் அவர்கள் நினைவு படுத்திப் பார்க்கிறார்கள்.

திரியாய்க் கிராமமும் இவ்வாறுதான் சிதைக்கப்பட்டது. சுமார் எண்ணூறு விவசாயக் குடும்பங்களைக் கொண்டிருந்தது. இந்த மண். ஈரப்பனிக்கன் குளம், திரியாய்க் குளம், கட்டுக் குளம் ஆகிய குளங்கள் இப்பகுதி வயல் நிலங்களுக்கு வளமூட்டிக் கொண்டிருந்தன. எண்பத்தைந்தாம் ஆண்டு என்ற நினைப்பு குச்சவெளி பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டு இரண்டு நாட்களின் பின் இக்கிராமத்துள் திடீரென நுழைந்த அரச காடையர்கள் இங்குள்ள வீடுகளுக்குத் தீ வைத்தார்கள். ஏறத்தாழ அரைவாசிக்கு மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப் பட்டன. உடைமைகளை இழந்து உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பெருவாரியானோர் முல்லைத்தீவுப் பக்கம் நடை போட்டனர். சிலர் பாடசாலை பொன்றில் தஞ்சம் புகுந்து கொண்டனர்.

(அடுத்த வாரம் தொடரும்...)

# ஆக்கிரமிப்பாளர் நிலைத்ததில்லை

**''விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியல் பாதை. கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பாதை. வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி, இரத்தம் சிந்தி, தாங்கொணாத துன்பத்தின் பரிசாகப் பெறுவதுதான் சுதந்திரம்.**

**சுதந்திரம் இல்லாமல் மனித வாழ்வில் அர்த்தமே இல்லை. நாகரீகம் தோன்றிய காலந்தோட்டு இன்று வரை சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக ஒடுக்கப்பட்ட மனித சமுகங்கள் போராட்டங்களை நடாத்தி வருகின்றன. யுத்தங்கள் புரிந்து இருக்கின்றன. புரட்சிகள்**

## எழுச்சிக்குரல்

**செய்து இருக்கின்றன. சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அசைகிறது''**

காலம் எமக்களித்த கைவிளக்கான வரலாற்றினது மேற்படிக் கருத்து வெளிப்பாட்டை இன்றும் வெளிப்படுத்துபவர்களாக பலஸ்தீன மக்கள் திகழ்கின்றனர். கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே பலஸ்தீனத்தை யூதர்களிடமிருந்து மீட்கும் விடுதலைப் போராட்டம் ஆரம்பித்துவிட்டது. அது வெறும் மண்ணுக்கான போராட்டம் அல்ல. கொள்கைக்காக, சிந்தனையின் இருப்புக்கான போராட்டம்.

''ஸியோனிஸம்'' (**Zionism**) என்ற கொள்கை மூலம் வளர்த்தெடுக்கப்பட்ட யூதத் தாயகக்கோட்பாடு உலகமெங்கும் எதிலிகளாக அலைந்து திரிந்த யூதர்களுக்கு ''இஸ்ரேல்" (ISRAEL) என்ற தேசத்தை உருவாக்கியது. ஆனால், காலப் போக்கில் இது நில விஸ்தரிப்புக் கொள்கையாகப் பலஸ்தீனத் தனித்துவத்தை அழிப்பதாக முன்னெடுக்கப்பட்டபோது பலஸ்தீன மக்கள் வன்மையாக எதிர்க்கலானார்கள்.

''அல்பற்றா'' முதலான பல்வேறு ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் தோற்றம் பெற்று இஸ்ரேலியப் பாதுகாப்புத் தரப்பினர் மீது தாக்குதல்களை ஆங்காங்கு நடத்தி. பிற்பகுதியில் ''பலஸ்தீன விடுதலை அமைப்பு" **(P.L.O.-PALASTINE LIBERATION ORGANISATION)** என்ற பொது அமைப்பாகி ''யசீர் அரபாத் " தலைவரானார். பில் கிளின்டன் அமெரிக்க அதிபரான பின் (1992) முனைப்புப்பெற்ற பல்வேறு சமாதான (?) பேச்சு வார்த்தைகளின் பின் அவசர அவசரமாக அரங்கேற்றப்பட்ட சமாதான ஒப்பந்தத்தை அடுத்து, சமாதானத்திற்கான நோபல்பரிசு யசீர் அரபாத், யிட்ஷாக் ரபின், ஷிமொன் பெரஸ் ஆகியோருக்குக் கூட்டாக வழங்கப்பட்டது. ஆனால், பலஸ்தீனத் தாயகம் மீதான யூதக் குடியேற்றங்களும் இஸ்ரேலிய படையினரின் அத்துமீறல்களும் தொடர்ந்த வண்ணமே இருந்தன. இன்றும் இருக்கின்றன.

இப்போது பலஸ்தீன மக்களின் போராட்டம் ''மக்கள் போராட்டம்" ஆகத் தீவிரமடைந்துள்ளது. யசீர் அரபாத்தின் அளவுக்கு மிஞ்சிய விட்டுக் கொடுப்பினால் கருத்து வேறுபாடு கொண்ட ''ஹமாஸ்" முதலான

**கோ.துரைகுமாரன்**

இயக்கங்கள் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளன.

பலஸ்தீன சிறுவர், சிறுமியர், பெண்கள் என அனைவருமே ''மக்கள் எழுச்சி" கொண்டு யூத ஆக்கிரமிப்பாளருக்கெதிராகப் புனிதப்போர் தொடுத்து நிற்கின்றனர்.

நீதியான நிறைவான அமைதிக்காக வேறுபாடின்றி பலஸ்தீனர்கள் எழுச்சி கொண்டு போராடுகிற தன்மையிலே, ''தெள.:.பீக் சையத்" (1932-1994) என்ற பலஸ்தீனக் கவிஞனின் கவிதை (மொழி பெயர்ப்பு - எம்.ஏ.நுஹ்மான்) இவ்வார ''எழுச்சிக்குரல்" ஆக இடம் பெறுகிறது.

**''என் தோளில் ஒரு போதும்**
**நான் துப்பாக்கி சுமந்ததில்லை**
**அதன் விசையை இழுத்ததில்லை**
**என்னிடம் இருப்பதெல்லாம்**
**ஒரு வீணையின் இசைதான்**
**என் கனவுகளை வரைவதற்கு**
**ஒரு தூரிகை தான்**
**ஒரு மைக்குடுவைதான்**

**என்னிடம் இருப்பதெல்லாம்**
**அசைக்க முடியாத நம்பிக்கைதான்**
**துன்புற்ற என் மக்கள் மீதான**
**ஒரு முடிவற்ற காதல்தான்!**

**அடுத்து என்ன?.....**
**எனக்குத் தெரியாது**
**எனக்குத் தெரிந்ததெல்லாம்**
**இவ்வளவுதான்.....**
**காலத்தின் வயிறும் வெளியின் வயிறும்**
**குழந்தைச் சுமையினால்**
**புடைத்து வளைகிறது**
**எனக்குத் தெரிந்ததெல்லாம்**
**உண்மை சாவதில்லை**
**மூர்க்கர்கள் அதனை**
**அடிமை கொள்ள முடியாது**
**என்பதுதான்**

**எனக்குத் தெரிந்ததெல்லாம்**
**எனது நாட்டில் ஆக்கிரமிப்பாளர்**
**நிலைத்திருந்ததில்லை என்பது தான்!''**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் கட்டுப்பாட்டு ஊடகங்களை விடுவித்து மக்களுக்காக செயற்பட உழைப்போம்

## பிரபல பத்திரிகையாளர் சுனந்த தேசப்பிரிய



**கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் கருத்தரங்கிலிருந்து**

**க.ஜெகதீஸ்வரன்**

சுதந்திர ஊடக இயக்கத்தில் தான் நானும் பணியாற்றுகிறேன். கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்காகப் பல வழிகளில் போராடிவருகிறோம். தொலைக்காட்சி, வானொலி பத்திரிகை போன்ற வெகுஜன ஊடகங்கள் எல்லாம் மக்களுக்காகவே பணியாற்றி வருகின்றன. அவர்களுக்குப் பொறுப்புச்சொல்ல வேண்டிய தார்மீக கடப்பாடு ஊடகவியலாளர்களுக்கு உண்டு என்றார் பிரபல சிங்களப் பத்திரிகையாளர் சுனந்த தேசப்பிரிய.

கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள பெண்கள் ஆய்வு மையத்தில் மனித உரிமைகள் இல்லத்தினால் (HRC) ஒழுங்கு செய்யப்பட்ட மனித உரிமைக் கல்வி பற்றிய கருத்தரங்கில் இன்றைய நிலையில் தமிழ், சிங்கள ஊடகங்கள் பற்றிய யதார்த்தமான போக்கை விளக்கினார் சுனந்த. தொடர்ந்தும் அவர் பேசுகையில்

இன்று ஊடகங்களை நாம் அரச ஊடகம் என்றும், தனியார் ஊடகங்கள் என்ற வகைகளுக்குள் அடக்கலாம். அரச கட்டுப் பாட்டிலுள்ள ஊடகங்கள் ஒருபோதும் அரசுக்கு எதிரான கருத்துக்களை வெளியிடுவதில்லை. அவை அரசின் ஊதுகுழல்களாகவே செயற்பட்டு வருகின்றன.

இலங்கையிலுள்ள பத்திரிகைகளும், வானொலிகள், தொலைக்காட்சி போன்றவைகள் தமிழ், சிங்கள இன நலன்கள் சார்பான போக்கையே கடைப்பிடித்து வருகின்றன.

ஊடகங்கள் சிங்கள மக்களுக்கு எதிரானதும் தமிழ் மக்களுக்கு சார்பானதுமான கருத்துக்களையே வெளியிடுவதுபோல சிங்கள மக்களின் பத்திரிகைகளும், வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களும் சிங்கள மக்களின் இன நலன்களை மட்டும் கொண்டு செயற்பட்டுவரும் போக்கே இலங்கையில் உண்டு. உதாரணமாக அண்மையில் நடந்த சம்பவங்கள் சம்பந்தமான செய்திகளை உன்னிப்பாகப் பார்த்தால் சிங்களப் பத்திரிகைகளில் இராணுவத்தினரை தியாகிகள் என்ற தோரணையிலும் புலிகளை பயங்கரவாதிகள் என்றும், தமிழ்ப் பத்திரிகைகள் புலிகளை மையப்படுத்தி முக்கியத் துவப்படுத்தியே செய்திகளை வெளியிட்டுவருவதை நாம் அனைவருமே அறிவோம்.

இரண்டு பத்திரிகைகளுமே இப்போக்கை மாற்றி கொள்ளவேண்டும். இதனை ஊட கவியலாளர்களாகிய நாம்தான் மாற்றியமைக்க வேண்டும்.

**நாம் இன்று ஒரு செய்தியின் உண்மையை அறிந்து கொள்ள, புரிந்து கொள்ள 3 பத்திரிகைகளையும் 4.5 வானொலிகளையும் கேட்க வேண்டி இருக்கிறது.**

தமிழ்ப் பத்திரிகைகளில் சிங்கள நிருபர்கள் பணியாற்றுவதில்லை. சிங்கள பத்திகைகளில் தமிழ் பத்திரிகையாளர்கள் இல்லை. தமிழ் மக்களுடைய நியாயமான பிரச்சினைகளையும், கோரிக்கைகளையும் தமிழ் பத்திரிகையாளர்கள் வெளிப்படுத்தி வருகிறார்கள். தமிழ் மக்கள் மட்டுமே அவற்றை வாசித்து வருகிறார்கள். தமிழர்களுடைய நியாயமான பிரச்சினைகள் சிங்கள மக்களுக்குத் தெரிவதில்லை. அதேபோன்று சிங்கள மக்களுடைய நிலைப்பாடுகள், பிரச்சினைகள் மட்டுமே சிங்களப் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன. சிங்களவர்களுடைய நிலைப்பாடுகள் தமிழ் மக்களுக்கு தெரிய நியாமில்லை. இப்போக்கு மாற வேண்டும். தமிழர்களுடைய பிரச்சினைகளை சிங்களவர்களும், சிங்களவர்களுடைய பிரச்சினைகளை தமிழர்களும் புரிந்து கொள்ளும் வகையிலான ஏற்பாடு ஒன்றை நாம் செய்யவேண்டும் என்றார்.

பத்திரிகைச் சுதந்திரம் வேண்டும். பத்திரிகையாளர்களுக்குச் சுதந்திரம் வேண்டும். பத்திரிகையாளர்களால் எழுதப்படும் செய்திகள், கட்டுரைகள் அப்படியே பிரசுரிக்கப்படுவதில்லை. வெட்டியும், சுருக்கியும், சேர்த்தும் பத்திரிகைகளின் உரிமையாளர்களுடைய கொள்கைகளும், கருத்துக்களுக்கும் ஏற்பவே கட்டுரைகள் பிரசுரிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். பொலிஸ் உயரதிகாரிகள் தங்களுடைய விருப்பு, வெறுப்புக்களுக்கேற்பவே செயற்பட்டு வருகின்றனர். அவுஸ்திரேலியா போன்ற நாடுகளைப்போல பத்திரிகையாசிரியர்களுக்குப் பூரண உரிமையும், சுதந்திரமும் இங்கும் வழங்கப்பட்ட வேண்டும்.

பத்திரிகையின் உரிமையாளர்களுக்கு இது பற்றி முடிவெடுக்க எவ்வித உரிமையும் இல்லை. இவ்வாறான நெருக்குதல்களால் தான் ஆசிரியர் தலையங்கங்களைக்கூட சுதந்திரமாக எழுத முடியாத நிலையுள்ளது,

பத்திரிகையாளர்க்கு பத்திரிகையின் ஆசிரியருக்கு பூரண உரிமையும், சுதந்திரமும் வழங்கப் பட வேண்டும். இவை அனைத்தும் திட்டமிட்ட செயற்பாடுகளின் மூலம் ஒரு கட்டமைப்புக்குள் கொண்டு வரப்பட வேண்டும்.

சுயாதீன செய்தி ஊடகங்களான ஜப்பானின் என்.எச்.கே (**NHK**) போன்று பிரித்தானியாவின் பீ.பீ.சி (**BBC**) போல எம் நாட்டு தொலைக்காட்சி, வானொலிகள், லேக்-ஹவுஸ் பத்திரிகைகள் சுதந்திரமாகச் செயற்படுவதில்லை. அவை அரசின் ஊதுகுழல்களாக அரசின் கட்டுப்பாட்டுக்குள்ளெயே இருக்கின்றன.

இந்நிலை மாற வேண்டும். அவை மக்கள் ஊடகங்களாக, மக்களின் குரலாக ஒலித்து மக்களுக்கு உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும். ரூபவாஹினி, லேக்-ஹவுஸ் போன்றவை சுயாதீனமாக நடுநிலமையாக செயற்பட வேண்டும்.

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களை மாற்றியமைக்க வேண்டும். புதிய சுதந்திரமான அமைப்பாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நாம் இன்று ஒரு செய்தியின் உண்மையை அறிந்து கொள்ள, புரிந்துகொள்ள 3 பத்திரிகைகளையும், 4.5 வானொலிகளையும் கேட்க வேண்டி இருக்கிறது.

தமிழ்ப் பத்திரிகைகள் சிங்கள மக்களுக்கு எதிரான கருத்துக்களையும் சிங்களப் பத்திரிகைகள் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களையும் பொறுப்பற்ற முறையில் எழுதி வருகின்றன. குரோதத்தையும், இன உணர்வுகளையுமே நமது பத்திரிகைகள் வளர்ந்து வருகின்றன. ''தமிழர்கள் அனைவரையும் கொலை செய்ய வேண்டும்'' எனப் பெரிய எழுத்தில் எழுதி வெளியட்ட சிங்களப் பத்திரிகைகளும் உண்டு.

சிங்களப் பத்திரிகையாளர்கள் சிலர் பேனாவும், பேப்பரும் உண்டு என்பதற்காக எதையும் எழுதலாம் என்ற நிலையிலிருந்து வெளிவரவேண்டும். இது இப்படித்தான் நடந்திருக்கும் என்ற உணர்வில் எழுதக்கூடாது. பத்திரிகையாளர்கள்தான் ஜனநாயகத்தின் பாதுகாவலர்கள். நாம் ஒரு ஒழுக்க நெறிக் கோவையின் கீழ் திட்டமிட்டே செயற்பட வேண்டும்.

பத்திரிகையாளர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து எவ்வளவு எதிர்ப்புண்டு என்பதை நாம் அறிவோம். தொழிலாளர்களின் நலன் பற்றி, எத்தனையோ தொழிற்சங்கங்களின் நியாயமான போராட்டங்கள் பற்றி பக்கம் பக்கமாக எழுதியிருக்கிறோம். ஆனால் எமக்கு எம்நிலை பற்றி யார் கவலைப்படுவார்.

பத்திரிகையாளர்கள் உத்தியோகபூர்வமாக எவ்வகையான தகவல்களைப் பெறவும் வழிவகை செய்யப்படவேண்டும். அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகத்துறையை நாம் மீட்டெடுக்க வேண்டும். பல்லின, மத, கலாசார பண்புகளுக்கேற்ப நிலமைகளை சீரமைக்க வேண்டும். இவ்வாறான கருத்தரங்குகள். உரையாடல்கள் மூலம் அதனை நிறுவன மயப்படுத்த வேண்டும்.

சுகாதாரம், சமயம், கல்வி, வர்த்தகம் பற்றி மக்களுக்கு சேவை செய்ய வேண்டுமானால் சுதந்திர ஊடகத்துறையை ஏற்படுத்த வேண்டும். அரசு வேறு. ஊடகம் வேறு. அரசு ஊடகத்தை பயன்படுத்துவதை நாம் தடை செய்ய ஒன்றுபட வேண்டும்.

# மருத்துவிச்சியாக இருக்கவேண்டிய இந்தியா கருவிலேயே குழந்தையைக் கொன்று விட்டது

## ஈழவேந்தனுடன் ஓர் சந்திப்பு - 3



சந்திப்பு:-
**கோ.ரூஷாங்கன்**

● சரி, தற்போது இந்தியாவிலிருந்து. சிங்கத்தின் குகை என நீங்கள் வர்ணிக்கும் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ள நிலையில், நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள்?

■ எந்நேரத்திலும் எத்தகைய ஆபத்துக்கும் ஆளாகலாம் என்ற அச்ச உணர்வுடன்தான் நான் வழ்கிறேன். ஆனால் அது கொண்டு, என் கொள்கை கோட்பாட்டை உதறிவிட்டு நான் அறைக்குள் பூட்டிக்கொண்டு ஒரு பச்சோந்தியாக நான் வாழ விரும்பவில்லை. வீண் வீரமோ வீம்போ நான் பேசவில்லை.

ஆனால்.. என் கண் முன்னால் என் இனம் அழிவதை நான் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இன்று அச்சம் நிறைந்த சூழல் நிலவுகிறது. தமிழர்களுக்காகக் குரல் கொடுத்த குமார் பொன்னம்பலம், நிமலராஜன் போன்றவர்களுக்கு நடந்தது என்ன என்பதை நாமறி வோம். அந்த நிலையிலும் நான் தொடர்நது குரலெழுப்புவேன். இது தவிர்க்கமுடியாது என்மீது சுமத்தப்பட்ட வரலாற்றுக் கடமை என நான் நினைக்கிறேன்.

● தற்போது உங்களுடைய எதிர்காலம்பற்றி என்ன நினைக்கிறீர்கள். மீண்டும் நீங்கள் இந்தியாவுக்குப் போய் உங்கள் குடும்பத்துடன் இணைய முடியும் என எதிர்பார்க்கிறீர்களா?

■ எனக்குத் தெரியாது. ஆனால் நான் நம்பிக்கையுடன் வாழ்கிறேன் அரசியலில் நிலையான எதிரிகளுமில்லை. நிலையான நண்பர்களுமில்லை. ஒவ்வொரு நாட்டினுடையதும் நிலையான நன்மைதான் கருதப்படும்.

ஒரு காலத்தில் இந்தியா, இஸ்ரேல் நாட்டினை ஆசியாக் கண்டத்தின் அழுகுதொழு நோயாளி எனவர்ணித்தது. இப்போது அதே இஸ்ரேல் நாட்டுக்கு தூதுவ உரி மை வழங்கி அரவணைத்துக் கொண்டு செயல்படுகிறது.

முன்பு பலஸ்தீனத்துக்காக வக்காளத்து வேண்டிய இலங்கை இன்று இஸ்ரேலியத் தூதரகத்தை இங்கே அமைக்க அனுமதித்துள்ளது.

ஆனால் என்னைப் பொறுத்தவரையில், மொழியால், பண்பால்,நாகரிகத்தினால், ஏற்றுள்ள வாழ்க்கை நெறியினால் இந்தியத் துணைக்கண்டத்துக்கும் எமக்கும் இடையே பிரிக்கமுடியாத ஒரு பிணைப்பு இருக்கிறது. நல்ல தமிழில் சொல்வதனால் ஒரு தொப்பூழ் கொடி உறவு.

தமிழர்கள் தான் தம்முடைய நிலைத்த உறவு என்பது இந்தியாவுக்குத் தெரியும். தெரிந்து கொண்டும் இந்த நிலைத்த நண்பர்களைப் புறக்கணித்து, கேள்விக் குறியான உறவுகளொடு ஒட்டிநிற்பதுதான் புரியாத புதிராகவுள்ளது.

● இந்த இடத்தில் ஒரு கேள்வி. இந்திய வம்சாவழியினர் எனக் கூறப்படும் எமது மலையகத் தமிழர்கள் சிலருடன் அண்மையில் நான் உரையாடியபோது, ''இந்தியாவுக்கும் எமக்குமான தொப்பூழ் கொடி உறவு என்பது எப்போதோ அறுந்துபோய்விட்டது'' என அவர்கள் தெரிவித்தனர்.

■ அவ்வளவுக்கு அவர்கள் ஆத்திரப்படுமளவுக்கு இந்திய அரசின் செயல்கள் அமைந்திருக்கலாம். ஆனால் இந்தியா என்று நாம் கருதும்போது இப்போதிருக்கும் இந்த அரசுகளை மட்டும் நான் எண்ணிப் பேசவில்லை. இந்த அரசுகள் இருக்கும் போகும் இந்தியப் பண்பாட்டு மொழியில் சமயவியலில் உள்ள ஒரு உறவு அது நிலைத்து நிற்கும்.


நல்ல வடிவாக என்னுடைய ஆத்திரத்தை நான் கக்கலாம். கக்கிற ஆத்திரம் முழுவதும் கலைஞர்மீதோ, ஜெயலலிதா மீதோ, வாஜ்பாய் மீதோ இருக்குமேயல்லாமல் இந்திய மக்கள் மீதானதாக இருக்கமுடியாது.

(அடுத்த வாரம் முடிவடையும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலமாய் வாழ........

## பழ வகைகள் சாப்பிடுவதன் மூலம் தீரும் நோய்கள்



**வாழைப்பழம்**

பித்த சம்பந்தமான வியாதிகள் குணமாகும். இரத்த அணுக்களுக்கு பலன்தரும். இப்பழத்தில் பல வகை உண்டு.

**பலாப்பழம்**

இது வாத சம்பந்தமான வியாதிகளையும் பித்த சம்பந்தமான வியாதிகளையும் உண்டாக்கும். உடலுக்கு பலம் தரும். சொறி, சிரங்கு உண்டு பண்ணும். இதில் வைட்டமின் A சத்து நிறைய உண்டு.

**முந்திரியம்பழம்**

இப்பழத்தை உண்ணுவதன் மூலம் உடலில் உள்ள காயங்கள் இலகுவில் ஆறாது. இது உடல் உஷ்ணத்தைத் தணிக்கும். தாகம் ஏற்படாமல் இருக்கும். லேசாக சொறியை உண்டுபண்ணும். நெஞ்சு, தொண்டை என்பவற்றில் கரகரப்பை உண்டாக்கும்.

**மாதுளம்பழம்**

வாந்தியை நிறுத்தும், ஞாபக சக்தி உண்டாகும். பித்த சம்பந்தமான வியாதிகள் குணமாகும். உமிழ் நீரைச் சமப்படுத்தும், மயக்கம் ஏற்படுவதைத் தடுக்கும். விக்கல் நிற்கும். கபத்தை தணிக்கும் நாவில் உணர்வு ஏற்படும். மந்தத்தைக் குணமாக்கும்.

**பேரீச்சம்பழம்**

பித்தத்தை தணிக்கும். நீரிழிவுக்காரர்களுக்கு நல்லது. உமிழ் நீரைச் சுரப்பிக்கும். நாவில் ருசியறியும் உணர்வை உண்டு பண்ணும்.

**நாவற்பழம்**

தாகத்தைத் தணிக்கும். பசியை மட்டுப்படுத்தும். உடலில் வலியைத் தோற்றுவிக்கும். சிறுநீரைப் பிரித்துத் தாராளமாக வெளியேற்றும்.

**பனம் பழம்**

மலத்தை இறுக்கி மலச்சிக்கலை உண்டாக்கும். பித்தத்தை அதிகமாக உற்பத்தி செய்யும். பித்த வாயு உண்டாகும். சொறி, சிரங்கு உண்டாகும். தேகத்தில் புண் இருந்தால் இலகுவில் ஆறாது.

தே.மதன்ராஜ்
22/2, மாமாங்கம்,
மட்டக்களப்பு.

# பிணி பல தீர்க்கும் மூலிகை மருத்துவம்

## முருங்கை

முருங்கை மரம் ஆதியில் இமயமலையடிவாரத்தில் உள்ள காடுகளில் தான் தானாக வளர்ந்தது. பின்னர் சித்தர்களின் வழிகாட்டல்களால் மக்களின் உணவில் சேர்க்கப்பட்டு இன்று எவரும் விரும்பி உண்ணக்கூடிய வீட்டுப் பயிராயிற்று. முருங்கை மரம் இன்று எல்லோரும் அறிந்திருக்கக் கூடிய பயிராக இருந்தாலும் மிகவும் உயர் குணம் வாய்ந்த தாவரமாகும். சித்தவைத்தியத்தில் முருங்கை மரத்தின் பகுதிகள் நிறைய கலந்து மருந்துகள் ஆக்கப்டுகின்றது என்றால் சித்தர்களின் மெய்ஞான விஞ்ஞானம் எப்படி இருந்திருக்கும் என்பதை பலரும் அறிவார்கள். முருங்கைமரம் இந்தியாவில் இருந்துதான் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது. இது இலங்கையின் பல பகுதிகளிலும் நன்கு வளரக்கூடியது. அதிக குளிர் ஈரப்பிரதேசங்களில் வளராது. இதன் இலை, பூ, காய், பட்டை, வேர் பிசின், விதை எல்லாமே மருத்துவ குணம் பெற்றதாகும். கறி சமைத்து சாப்பிடுவதால் அதிக ஊட்டச் சத்து கிடைக்கும்.

முருங்கை இலையைக் கொண்டு வந்து கறியாக சமைத்து உண்டு வந்தால் உடலுக்கு நல்ல உரமாகும். இவ்விலையில் இரும்புச் சத்து அதிகம். இதில் சுண்ண சத்தும் இருப்பதால் பல்லும் ஈறும் உறுதிப்படும் இதன் இலையை வேக வைத்து நெய்யில் பொரித்து உண்டால் இரத்தச்சோகை நீங்கும். இதன் இலையால் வாதம் பித்தம் மீறாது. சுக்கில விருத்தியை ஏற்படுத்தும் வாயில் சுவை இன்மையை நீக்கும் கிருமிகளை அழிக்கும் மயக்கத்தை நீக்கும் அபூர்வ மூலிகை முருங்கை.

தாய்ப்பால் இல்லாத தாய்மார்கள் முருங்கைக் கீரையை அதி கமாக உண்டு வந்தால் தாராளமாக பால்சுரக்கும், நாய்க்கடிக்கு முருங்கை இலைச்சாற்றில் சுண்ணாம்பை தாளித்து குழைத்துப் போட குணம் தரும்.

மூலிகைவேந்தன்
ஆயுர்வேத சித்த வைத்தியர்
ஸ்ரீ இராமநாதன்
கலைவாணன்
(கண்ணன்)

இதன் பூவை உலர்த்தி சூரணம் செய்து காலை மாலை சாப்பிட்டு வந்தால் வாதபித்த சம்பந்தமான ஆரம்ப நோய்கள் நீங்கி குணமடையும். இப் பூவினை சூடாக்கி கண்களில் வைத்து கட்டினால் கண் எரிவு நீங்கும். பூ வெப்பத் தன்மை உடையது.

முருங்கைக் காய் மிகச் சிறந்த வாய்க்கு உருசியான உணவு இதனை குழம்பாக அல்லது பால் கறியாக, பொரியலாக, கூட்டுக் கறியாக அல்லது சாம்பாராக பல விதங்களில் சமைத்து உண்ணலாம். சுவையை மட்டும் அது எமக்கு தருவதோடு நின்றுவிடாமல் மலச்சிக்கல் வியற்றுப்புண் வயிற்றுப் புண் தலைவலி ஆகிய நோய்களையும் எம்முடம்பில் இருந்து அகற்றுகின்றது. இதன் பட்டையும் வேரும் பெண்களுக்கு ஏற்படும் மாதவிலக்கை சுத்தப்படுத்துகின்றது. வாதநோய்களுக்கான கசாயம் செய்து குடிப்பதனால் உடம்பை அந்த நோயிலிருந்து விடுவிக்கின்றது. உணவில் கலந்த நஞ்சுகளையும் நரம்புக் கோளாறுகளையும் அகற்றுகின்றது. இதன் வேரும் பட்டையும் சமனாக எடுத்து எட்டில் ஒன்றாக வற்றக் காய்ச்சி நாலாகப் பிரித்து வைத் துக் கொண்டு 6 மணிக்கு ஒரு தடவை குடித்து வந்தால், கல்லடைப்பு நோய் நீங்கும். இதன் விதை சுக்கிலத்தை விருத்தி பண்ணும். குலகியகளின் சேர்க்கப்பட்டு வருவதை சித்த மருத்துவம் நிரூபித்துக் காட்டியுள்ளது. இதன் பிசினும் சுக்கிலத்தை விருத்தி பண்ணும் பல மருந்துகளில் சேர்க்கப்பட்டாலும், இது நரை ஏற்படாமல் தடுக் கும். பல தைலங்களில் சேர்த்து காய்ச்சி நிரம்பிய பலனை ஏற்படுத்துகின்றது. சித்தர்கள் எமக்கு அளித்த அரும் பொக்கிஷங்களே இம் மூலிகைகளின் மகத்துவமாகும்.

# மூலிகை மருத்துவம்....

## வினை தீர்க்கும் வேம்பின் சிறப்பு



உலகின் வெப்ப மண்டலம் மற்றும் மித வெப்ப மண்டலங்களில் தற்போது வேம்பின் பயனை அறிந்து வளர்த்து வந்தாலும், உலகிலேயே வேம்பு முதலில் கண்டறியப்பட்டது. இந்தோ - பர்மா பகுதிகளில் தான். நாளடைவில் இதன் பல்வேறு பயன்களை மற்ற நாடுகளிலும் மக்கள் உணரத் தொடங்கினர்.

தற்போது இந்த [illegible] இந்தியாவின் அண்டை [illegible]ளான இலங்கை, பங்ளாதேஷ், பாகிஸ்தான் மட்டுமல்லாது மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, சிம்பாப்வே, ஜையர், ஜாம்பியா, மாலைதீவு, தான்சானியா மற்றும் சீனா போன்ற நாடுகளிலும் வளர்க்கப்படுகின் றது. சுமார் 10 மீட்டர் முதல் 30 மீட்டர் உயரம்வரை வளரக்கூடிய இந்த வேம்புகளில் நல்ல வேம்பு, மலை வேம்பு, கறிவேம்பு, சர்க்கரை வேம்பு மற்றும் பல வகைகள் உள்ளன. இவற்றில் வீடுகளிலும் மூலிகைக்காகவும் வளர்க்கப்படுப [illegible]

(இதன் பயன்கள் தொடரும்....)

# பஸ்சிமோத்தாசனம் செய்யும் முறை

(சென்றவாரத் தொடர்ச்சி..)

பிறகு மூச்சை ஒரு தரம் இழுத்து, விட்டவாறு இன்னும் முன்னால்



நன்றாக கீழே குனியவும். 4வது படத்தை கவனிக்கவும். முகத்தை நன்றாக வளைத்து முழங்கால்களின் நடுவில் தொடவும். மடங்கிய முழங்கைகள் தரையில் பட வேண்டும். இந்த ஆசனநிலையில் ஐந்து முதல் பத்து எண்ணும் வரை இருக்கலாம். மூச்சை இஷ்டப்படி விடலாம். பிறகு கைகளை கால்கள் பிடியில் இருந்து எடுத்து. கைகளைக் காதுகளை ஒட்டியவாறே அப்படியே மெதுவாக பின்னால் சாய்ந்துக் கொண்டும் மூச்சை விட்டுக்கொண்டு ஆரம்ப நிலைக்கு வரவும் இதுவே பஸ்சிமோத்தாசனம் செய்யும் முறையாகும். இதே போல் மூன்று முதல் ஐந்து தடவைகள் செய்யலாம்.

**பஸ்சிமோத்தாசனத்தின் பலன்கள் :-**

முதுகெலும்பு நன்றாக முன்னால் வளைவதால் இளமையாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க உதவுகிறது. ஆயுள் விருத்தியாகும். வியாதிகள் அணுகாது. இடுப்பு நன்றாக வலுவடையும். உள்வயிற்று உறுப்புக்கள் நன்றாக அழுத்தப்படுவதால், உள் உறுப்புக்கள் சரியாக வேலை செய்ய உதவுகிறது.


இது பெண்களுக்கு மிக



வும் முக்கிய ஆசனமாகும். கருப்பை நன்றாக நசுக்கப்படுவதால் பெண்கள் சம்பந்தமான கோளாறு நோய்கள் அணுகாது.

**குறிப்பு:-** வயிற்றில் சத்திரசிகிச்சை செய்து கொண்டவர்கள் செய்யக் கூடாது. பெண்கள் கர்ப்ப காலத்தில் செய்யக்கூடாது. மற்றவர்கள் செய்யலாம்.

# ஹலாசனம் செய்யும் முறை



ஹலாசனம் ஆரம்ப நிலை 1

பஸ்சிமோத்தாசனத்துக்கு அடுத்தபடியாக செய்ய வேண்டிய ஆசனம் ஹலாசனமாகும். விரிப்பில் மல்லாந்து படுத்துக் கொள்ளவும் கைகளைப் பக்கத்தில் நீட்டி, உடலை ஒட்டினாற் போல் வைத்துக் கொள்ளவும்.



ஹலாசனம் ஆரம்ப நிலை 2

உள்ளங் கைகள், விரிப்பில் பட இருக்க வேண்டும். 1வது படத்தைக் கவனியுங்கள். இப்பொழுது ஹலாசனம் செய்ய ஆயத்தமாக இருக்கின்றீர்கள். இதுவே ஆரம்ப நிலையாகும்.

பிறகு கால்களையும் கைகளையும் விறைப்பாக வைத்துக் கொண்டு, மூச்சை நன்றாக



ஹலாசனம் ஆரம்ப நிலை 3

உள் வாங்கிக்கொண்டு, உள்ளங் கைகளை விரிப்பில் நன்கு ஊன்றி இரண்டு கால்களையும் சேர்த்தாற்போல் நேராக 2வது படத்திலுள்ளவாறு தூக்கவும். மீண்டும் அப்படியே இன்னும் சிறிது உயரமாகக் கால்களைத் தூக்கி 3வது படத்தில் காட்டியவாறு இடுப்பு, முதுகு முதலியவற்றைத் தூக்கி தலைப்பக்கமாக வளைக்கவும். அப்படியே கால்களை நன்றாக தலைக்குப் பின்புறம் வளைத்துக் கீழே இறக்கவும். 4வது படத்தை கவனிக்கவும். கால் விரல்கள் தரையில் பட்டவாறு மூச்சை இஷ்டப்படி விட்டுக்கொண்டு மூன்று விநாடி முதல் பத்து விநாடிவரை இருக்கலாம். பிறகு மெதுவாகக் கால்களைத் தரையில் மூச்சை விட்டவாறு ஆரம்ப நிலைக்கு வந்து இளைப்பாறவும். இவ்வாறே ஹலாசனம் செய்யும் முறையாகும்.



ஹலாசனம் ஆரம்ப நிலை 4

**ஹலாசனத்தின் பலன்கள்:**

முதுகெலும்பு நன்றாக வளைவதால் முள்ளந்தண்டு புத்துயிர் பெறுகிறது. இவ்வாசனம் செய்வதால் சுறுசுறுப்பாக இருக்கலாம். இரத்த ஓட்டம் சரியாக எல்லா பாகங்களுக்கும் கிடைக்கின்றது. உணர்ச்சியைக் கட்டுப்படுத்த உதவும். பலம் வீரியம் இழந்தவர்களுக்கு இது மிகவும் சிறந்த ஆசனமாகும்.

**குறிப்பு:-** வயிற்றில் சத்திர சிகிச்சை செய்தவர்கள் இவ்வாசனம் செய்யக்கூடாது. பெண்கள் கர்ப்பக் காலத்தில் செய்யக் கூடாது. ஏனையவர்கள் செய்யலாம்.

ஆக்கம்
ஆ.மகேந்திரகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயப் பிரச்சினைகளின் பக்கம் தன் பார்வையைத் திருப்பியிருக்கும் தமிழ் சினிமா

## "குட்டி" பட விமர்சனம்

தினக்கதிர் சினிமா

மும்தாஜ் டான்ஸ் இல்லை, அனல் பறக்கும் சண்டைகள் இல்லை, வெளிநாட்டு லொகேஷன் இல்லை, கிராபிக்ஸ் இல்லை. இத்தனையும் இல்லாமல் ஒரு சூப்பர் ஹிட் படத்தைக் கொடுத்திருக்கிறார்கள் ரமேஷ் அருணாச்சலமும், ஜானகி விஸ்வநாத னும். கதை பிரபல பெண் எழுத்தாளர் சிவசங் கரி



யின் கைவண்ணத்தில் உருவானதாகும்.

சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கும் ஒரு பிரச்சினையை மென்மையாக அதே சமயம் முகத்தில் அடித்தாற் போல சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் குட்டி படத்தில்.

குழந்தைத் தொழிலாளர் பிரச்சினையை எத்தனையோ படங்களில், பலவிதங்களில் கூறிவிட்டார்கள். ஆனால் இதில் அப்பட்டமாய் முகத்தில் அடித்த மாதிரிசொல்கிறார்கள்.

படத்தில் முடிவு என்ற ஒன்றைக் கூறாமல், அந்த முடிவை நம்மையே யோசிக்க வைத் திருக்கிறார்கள். படம் பார்த்துவிட்டு வெளியே வரும்போது இதயம் கனத்து விடுகிறது.

சின்னக் கிராமத்தில் பானைகள், பொம்மைகள் செய்துவரும் ஒரு குயவர் குடும்பம். 2 வேளை சாப்பாட்டுக்குக் கூட வழியில்லாத அந்தக் குடும்பத்தின் சுட்டிப் பெண் கண்ணம்மா.



அப்பாவின் செல்ல மகள். தனது மகளைப் படிக்க வைத்து பெரிய ஆளாக்க வேண்டும் என்ற தீராத ஆசை அப்பாவுக்கு. ஆனால் பள்ளி ரொம்ப தூரத்தில் இருப்பதால் ஒரு சைக்கிள் வாங்கி அவளை கூட்டிச் செல்ல வேண்டும் என்று ஆசைப்படுகிறார். ஆனால் சைக்கிள் வாங்குவது பணமின்மையால் தள்ளிப் போகிறது திட்டம்.

இந்த நேரத்தில் சந்தைக்குப் போன அப்பா ஊர் திரும்பும் வழியில் லாரிமோதி



இறக்கிறார். தலைவனை இழந்து அந்தக் குடும்பம் வறுமையில் தத்தளிக்கிறது.

இந் நேரத்தில் தனது கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண், தான் வேலை பார்க்கும் நறுவனத்தின் முதலாளியின் வீட்டுக்கு வேலைக்கு ஆள் வேண்டும் என்பதால் கண்ணம்மாவை தன்னுடன் அனுப்பி வைக்குமாறு கண்ணம்மாவின் அம்மாவிடம் கேட்கிறார்.

நிறைய யோசனைகளுக்குப் பிறகு கண்ணம்மாவை அனுப்பி வைக்கிறார் அம்மா.

பட்டணத்திற்கு வருகிறாள் கண்ணம்மா. கண்களில் ஆச்சரியமும் பயமும் தாண்டவமாட அவள் பார்க்கும், சந்திக்கும் ஒவ்வொரு விஷயமும் அவளை பரவசப்படுத்து



வதற்குப் பதில் அச்சமூட்டுகின்றன.

கண்ணம்மா வேலைக்கு சேர்ந்த வீட்டின் முதலாளியும், அவரது மனைவியும் கண்ணம்மாவை தங்களது குழந்தைகளுக்கு சமமாக பார்க்கிறார்கள். ஆனால் இது முதலாளியின் தாய்க்குப் பிடிக்கவில்லை வழக்கமான வில்லத்தனத்தைக் காட்டுகிறார்

குழந்தையைப் பார்க்கும் வேலை என்று முதலில் சொல்லப்பட்டாலும் கூட, பல வேலைகளையும் செய்யும் நிலைக்கு ஆளாகிறாள் கண்ணம்மா. அவளது உணர்வுகள் அங்கு மறுக்கப்படுகின்றன. அடிமை நலைக்குத் தள்ளப்படுகிறாள்.

ஒரு கட்டத்தில் கண்ணம்மாவின் நிலையைப் பார்த்து அந்த முதலாளியும் அவரது மனைவியும் கூட வருத்தப்பட ஆரம்பிக்கின்றனர். தங்களது வசதிக்காக, ஒரு குட்டிப் பெண்ணின் உணர்வுகளையும், உரிமைகளையும், கல்வியையும் தாங்கள் பறித்து விட்டதாக அவர்கள் உணர்ந்து வருத்தப்படுகிறார்கள்.



கண்ணம்மாவுக்கு தனது கிராமத்து சுதந்திரம் ஞாபகம் வருகிறது. தனிமையில் அழுகிறாள். பெட்டிக்கடைக்கார நாடாரிடம் தன்னை எப்படியாவது தனது கிராமத்துக்கு அனுப்பி வைக்குமாறு கதறுகிறாள்.நாடாரின் கண்களில் ரத்தம் கசிகிறது.

அவளை எப்படியாவது ஊருக்கு அனுப்பி வைத்துவிட முடிவு செய்கிறார். ஆனால் அதற்குள் கண்ணம்மாவின் தலையெழுத்து எப்படி மாறுகிறது என்று கூறும்போது நம்மை பதற வைத்திருக்கிறார்கள்.

சமூகத்தைச் சீரழித்துக் கொண்டிருக்கும் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினைதான் கதையின் கரு என்றாலும் கூட டாகுமெண்டரி போல அதைக் கூறாமல் இதுதான் நிஜம், பாருங்கள், பிரச்சினையை புரிந்து கொள்ளுங்கள், தீர்வு என்ன என்பதை யோசியுங்கள் என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

படத்தில் இரண்டு ஹீரோக்கள். ஒன்று கண்ணம்மாவாக வரும் பேபி ஸ்வேதா. வெகு இயல்பான நடிப்பு. கண்களில் அத்தனை உணர்ச்சிகளையும் அவள் காட்டும்போது கண்கள் கலங்காமல் இருப்பது இயலாத காரியம்.

துடிப்புடன் நடித்திருக்கிறாள் ஸ்வேதா. பக்கத்து வீட்டில் வேலைக்காரப் பெண்ணிடம் அந்த வீட்டுக்காரரின் மகன் செய்யும் பாலியல் பலாத்காரத்தைப் பார்க்கும் போது கண்களில் மிரட்சியைக் காட்டுகிறாள்.

விவேக்கிடம் அழுதுகொண்டே தனது வீட்டு கவலையை அப்பாவித்தனமாக, எங்க கிராமத்துல மலை இருக்கும், சுற்றிலும் மரம் இருக்கும் என்று கூறும்போது விவேக் மட்டுமல்லாது நாமும்தான் கலங்கிப் போகிறோம்.

அடுத்த ஹீரோ இசைஞானி இளையராஜா. இசை சரியாக இல்லாவிட்டால் வெறும் டாகுமெண்டரியாகிப் போய்விடும் என்பதால் முழு அக்கறை எடுத்து படத்திற்கு உயிரூட்டியிருக்கிறார்.

இந்தப் படத்தின் கதையை கேட்ட உடனேயே இசையமைக்க காசு வேண்டாம் என்று கூறிவிட்டு இலவசமாகவே இசை அமைத்துத் தந்திருக்கிறார் இசைஞானி. தங்கர் பச்சான் தன்பங்குக்கு கேமராவில் ஓவியம் வரைந்திருக்கிறார்.

கிராமத்துக் கண்ணம்மாவின் அப்பாவாக நாசர், அம்மாவாக ஈஸ்வரி ராவ்.



அசல் கிராமத்துக் காரர்களாக வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள்.

பெண்ணை இப்படி விளையாட்டுப் பிள்ளையாக வளர்க்கிறாரே கணவர் என்று ஆதங்கப்படும்போதெல்லாம் அப்ளாஸ் வாங்குகிறார் ஈஸ்வரிராவ். பெண்ணைப் படிக்க வைக்க வேண்டுமே என்று கவலைப் படும் போதெல்லாம் நம்மையும் கலங்க வைக் கிறார் நாசர். பண்பட்ட நடிப்பில் இருவரும் அசத்துகிறார்கள்.



பட்டணத்து முதலாளியாக ரமேஷ் அரவிந்த், அவரது கல்லூரி ஆசிரியை மனைவியாக கௌசல்யா. நறைவான ரோல்கள். கண்ணம்மாவை கஷ்டப்படுத்துகிறோமோ என்று கவலைப்பட்டு அவர்கள் பேசும் போது நிஜத்தில் இப்படி அத்தனை பேரும் இருந்து விட்டால் குழந்தைத் தொழிலாளர்களே இல்லாமல் போய் விடுவார்களே என்ற



நிப்பாசை வருகிறது. அருமையான நடிப்பு.

வில்லியாக எம்.என்.ராஜம். ரமேஷ் அரவிந்தின் அம்மாவாக வரும் அவர் கண்ணம்மாவை குட்டி என்று பெயரிட்டு கிண்டல் செய்கிறார்.

எல்லோரையும் விட நம்மை அசத்துபவர் விவேக். வழக்கமான கேலி, கிண்டல் எதுவும் இல்லாமல் மளிகைக் கடை நாடாராக வந்து கலக்கியிருக்கிறார் விவேக்.

புறக்கணிக்கப்படும் அல்லது கவனிக்காமல் விடப்படும் ஒவ்வொரு சிறுமியும் எப்படி சீரழிந்து போகிறாள் என்பதை இதை விட நச்" என்று கூறமுடியாது.

படம் முடிந்து தியேட்டரை விட்டு வெளியே வருபவர்களின் கண்களில் கண்ணீர். குட்டி ஜெயித்துவிட்டாள்.

❀❀❀❀❀❀

### சிறந்த நடிகை ஜூலியா ராபட்ஸ்

சிறந்த நடிகையாக எரின் பிரோக் கோவிக்"கில் நிடித்த ஜூலியா ராபர்ட்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆஸ்காரை வென்றுள்ளார். 33 வயதான ஜூலியா ஹாலிவுட்டின் மிகப் பிரபலமான நிடிகை. எரின் பிரோக் கோவிக்" ஒரு உண்மைக் கதையை தளுவிய படம்.

ஜர்னலிசம் படித்துள்ள ஜூலியா மாடலானார் பின்னர் நிடிகையானார். ஒரு படத்துக்கு 20 மில்லியன் டாலர் வாங்கும் மிகக் காஸ்ட்லி நிடிகை இவர்.






விருந்தினர் வியப்படைய பரிமாறுங்கள்
பிரவுண்சன் கோப்பி
BROWNSON INDUSTRIES
139, Bank shall Street,
Colombo - 11.
Tel : 327197


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஒரு ஆத்மாவின் இராகம்

சி.உ.பிகோ

அவன் வாழ்வின் கடைசி நிமிடத்திற்காய் காத்திருந்தான். அர்த்தமற்ற வினாடிகளாய் கரைந்துபோன கடந்த காலங்களை எண்ணிப் பார்க்கின்றான். துன்பங்களால் நிறைந்திருந்த வாழ்வு மனதிலே சந்தோசமான தெளிவொன்றை பதித்துவிட்டு விடை பெறப்போகின்றது. இதுவரை இருந்துவந்த ஆத்ம தேடல் நிறைவுறப் போகின்றது. அவன் வாழ்வின் கடைசி நிமிடமான அந்த மரணத்தை எதிர்பார்த்திருந்தான்.

அவன் அழகானவன். நிறைந்த அன்பான அழகான பணக்காரக் குடும்பத்து தலைமகன். அப்பாவை அடியொற்றிய பரந்தளவு அறிவு அவனுக்கிருந்தது. அத்துடன் இள வயதிற்குரிய துடினமும், அவனிடம் இருந்தது. திருட்டுத்தனமாக சினிமாப்படம் பார்ப்பதிலிருந்து பெண்களை கிண்டலடிப்பது ஈறாக இளசுகள் செய்யும் அட்டகாசத்தில் அவனும் அடங்கிப் போவான். இக் காரணங்களால் இளம் பெண்களின் கதாநாயகனாகிப் போன அவன் ஆடம்பரங்களை விரும்பிய நகரத்துப் பையன். ஆனால் அவனுக்குள்ளும் தன்னினத்தைப் பற்றிய பற்றுதல் மண்டியிட்டுக் கிடந்தது மனதிற்குள். இதனை அவன் கூட அறியாமல் இருந்தான். ஆனாலும் காலம் அவனுக்கு புரிய வைக்கத் தவறவில்லை.

தன்னையொத்தவர்கள் அப்பாவியாய் இருந்தும் கூட தண்டனைக்கு உள்ளாக்கப்படுவதைக் கண்டு கவலைப்படுவான். அவர்களது உரிமைகள் பறிக்கப்பட்டு கதறக் கதற சித்திரவதை செய்யப்படுவதை பத்திரிகை வாயிலாக அறியும் போதெல்லாம் துடிதுடித்துப்



போவான். அவனது சமூகத்தவர்கள் கோரமாய் கொல்லப்படுவதை அறியும் நாட்களில் இரவுப் பொழுதுகள் அவனை வாட்டி வதைக்கும். தூக்கம் தூர விலகிவிடும். மயானப் பயம் நெஞ்சினுள் அமிழ்ந்து கொண்டு பயத்தினைப் பற்றிப் படர்ந்த கனவுகளை நினைவிற்கு அனுப்பும். அப்போதெல்லாம் அவனடையும் வேதனை நரகத்திலும் இராது. மென்மையான உணர்வுகளைக் கொண்ட பெண்களைக் கூட கோரமாய் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி கொன்று புதைத்து கொடுமைகளைப் புரிந்துவிட்டு இருக்கும் கொடிய இராட்சதர்களை தட்டிக் கேட்க வேண்டியவர்கள் மௌனம் காக்கும் போதெல்லாம் ஆத்திரம் அவனை வென்றுவிடும். இக் கொடுமைகள் மீண்டும் மீண்டும் தொடரும் போதெல்லாம் அவன் அவனை மறந்துவிடுவான்.

காலம் மாறியது. காலம் மாற மாற அவனும் மாற்றப்பட்டான். ஆடம்பரங்கள் அவனைவிட்டு ஓடிப்போய் விட்டன. அவன் நடந்து சென்ற பூங்காவனங்கள் எல்லாம் கொலைக் களமாய் மாறிவிட்டதைப் போன்ற பிரமை அவனைச் சூழ்ந்துவிட்டது. அவன் மண்டையோடுகளையும் சதைக் குவியலையும் கடந்து போய்க் கொண்டிருப்பான். பிணங்களின் வாடை மூக்கினை துளைத்து நாசியினைத் தொட்டு உடலை நடுங்க வைக்கும். சீரழித்து சிதைக்கப்பட்ட சகோதரிகளின் தீனமான குரலொலிகள் அவன் காதுகளை கிழித்துச் செல்லும். குயில்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து முகாரி இராகத்தில் பாட்டிசைக்கும். இரத்தத்தின் வாடையை நாடிவந்த நரிகள் ஊளையிட்டு பின்னணி இசை எழுப்பும். அவன் அடங்கிப் போய்விடுவான். மனக் குழப்பங்களும் துன்பங்களும் அவனை ஆட்கொண்டுவிடும். அவன் மௌனித்து விடுவான். மனசு மட்டும் விழித்துக் கிடக்கும்.

இன்று அவனது எல்லா மனக் கவலைகளுக்கும் விடுதலை தரும் நாளாக வாய்த்துவிட்டது.

அந்த 'தட்டிக் கேட்க வேண்டிய' பெருந்தலைகளில் ஒன்று இன்று வரப் போகின்றது. ஊரில் மேடை போட்டுப் பேசுவதற்கு. ஏனெனில் வரப்போவது தேர்தல் காலம். வெட்கங்கெட்ட அவனது 'சமூகத்துப் பெரியவர்கள் சிலர் மாலை சகிதமாய் காத்திருந்தனர். அவனும் காத்திருந்தான். மாலை ஒன்றுடன், வாழ்வின் கடைசி நிமிடத்திற்காய். மனசு அந்தரத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

அந்தப் பெருந்தலை வந்துவிட்டது. அனைவருமே முண்டியடித்துக் கொண்டு முன்னேறினார்கள். மாலைகள் பெருந்தலையின் கழுத்தை நிரப்பிக் கொண்டன. அவன் இடுப்பைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். 'அது' தயாராகத்தான் இருந்தது. வெட்கங்கெட்ட அவனது சமூகத்துடன் பெருந்தலையையும் சேர்த்துத் தண்டிப்பதற்காக அவன் முன்னேறிக் கொண்டிருந்தான். குழப்பங்களுக்கு ஒரு தீர்வு தரப்போகின்ற 'அதனுடன்' அவன் முன்னேறினான். மனக் குழப்பங்கள் விடுதலை பெற்று, தெளிவு பிறந்து மனம் சந்தோசப்படும் வாழ்வின் கடைசி விநாடியை அவன் நெருங்கினான். இப்போது மனசுடன் சேர்ந்து அவனது ஆத்மாவும் அந்தரத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

# வந்தது வசந்தம்

எஸ்.ஆர்.சந்திரா

அன்று பாடசாலை விடுமுறை என்பதால் மாணவர்கள் உற்சாகமாக துள்ளிக் குதித்துக் கொண்டு திரிந்தார்கள். ஆனால் எட்டாம் ஆண்டில் கல்வி கற்கும் கவிதா மட்டும் சோகமாக வகுப்பறையில் உட்கார்ந்திருந்தாள். அவளைக் கண்ட சக வகுப்பு மாணவி 'கவிதா இன்றைக்கு நமக்கெல்லாம் லீவு தானே? நீ மட்டும் எதையோ பறிகொடுத்தவபோல உட்கார்ந்திருக்கிறாய்' என்றாள். அதற்கு மற்றவள் 'இவளுக்கு எப்பவுமே பாடசாலை நடந்தாத்தான் சந்தோஷம்' என கிண்டலாகச் சொன்னாள். கவிதா எல்லாவற்றையும் காதில் வாங்கிக் கொண்டு மௌனமாகவே இருந்தாள். இவர்களிடம் நமது நிலமையை எப்படிச் சொல்வது, சொன்னாலும் எங்கே புரியப்போகுது என நினைத்து மௌனித்தாள். அந்தச் சின்ன மனதில் உள்ள பெருந்துன்பத்தை எப்படித்தான் அவளால் சொல்ல முடியும்.



நண்பிகளின் கூட்டம் கலைந்து விட்டது. கவிதாவின் உயிர் நண்பி பானு, அவளுக்குப் பக்கத்தில் போய் அமர்ந்தாள். 'இங்க பாரு கவிதா நீ இப்படியே அமர்ந்திருந்தா மற்றப்பிள்ளைகள் கேலிதான் செய்வார்கள். எனக்கு இல்லாத கவலைகளா உனக்கு உண்டு? என்ர நிலமையை பற்றி உன்னிடம் சொல்லிவிட்டேன். ஆனால் உன்னப்பற்றித்தான் ஒன்றும் சொல்கிறாயில்லை. நான் கடந்த காலங்களில் அனுபவித்த துயரங்கள் தற்போது அனுபவித்த் கொண்டிருக்கின்ற வேதனைகள் எல்லாவற்றையும் உன்னிடம் சொல்லிவிட்டேன். ஆனால் நீ என்னிடம் சொல்லாவிட்டாலும் பரவாயில்லை, சந்தோஷமா கவலைகள மறந்து மற்றப் பிள்ளைகளப்போல இரு' கூறி முடித்தாள் பானு.

''எவ்வளவு முயற்சித்தாலும் என்னால சந்தோஷமா இருக்க முடியுதில்ல. உனது நிலமை தான் எனக்கும். நானும் பிறந்த அன்றிலிருந்து தாய்ப்பாசத்த தொலைத்து விட்ட பாவி. எனது தாயாலதான் என்னை நினைத்துப் பார்க்க முடியல. ஆனா நான் தினமும் தாயை நினைக்கிறேன். உருவமே தெரியாத ஒருவரை ஏன் நினைத்து வருந்துகின்றேன் என்று எனக்கே தெரியல, மற்றப் பிள்ளைகள் தங்கள் தாயோட கொஞ்சிப் பழகும் போது என் மனதில் தீயைக் கொட்டுவது போல இருக்குது. நான் என்ன செய்வது பானு. என்று ஏக்கத்துடன் கேட்டாள் கவிதா.

''கவிதா நம் [illegible] தான் நம்மை சிறு பராயத்திலே ஒதுக்கிட்டு போய்விட்டார்கள். நாம் ஏன் அவர்களையே நினைத்து வருந்த வேணும்? நாம் கல்வி கற்றாத் தானே சமூகத்தால் மதிக்கப்படுவோம்' என்று ஆறுதல் படுத்தினாள் பானு.

''நீ சொல்வது சரிதான் பானு. ஆனால் பாட்டி வீட்டில நடக்கிற அநியாயங்கள் வேறு. எனக்கு இவ்வுலகில் இருக்கவே பிடிக்கல பானு. நான் பிறக்கும் போது எனக்கு இரண்டு வயதுக்கு மூத்த அண்ணன் ஒருவன் இருந்தானாம். நான் பிறந்து இரண்டு மாதங்களில் அப்பா இறந்துட்டாராம். அம்மா நான் நாலு மாதக் குழந்தையாய் இருந்தபோது என்னையும் அண்ணாவையும் பாட்டி வீட்டில் விட்டுவிட்டு வேறு ஒருவருடன் ஊரை விட்டே ஓடி விட்டாராம். என்ர துரதிஷ்டம் அண்ணா நான்கு வயது சிறுவனாக இருந்தபோது காய்ச்சல் வந்து இறந்து விட்டானாம்.

இதையெல்லாம் பாட்டி என்னிடம் சொன்னார். என்ன செய்கிறதென்று என்னை வளர்க்கிறாராம். பாட்டியின் பேச்சு தினமும் என்னை வாட்டிக் கொண்டிருக்கின்றது.

ஒரு சமயம் 'உன்ர அம்மா ஓடினப்போ உன்னையும் கொண்டு போயிருக்கலாமே, இல்லாவிட்டால் உன்ர அண்ணன் செத்தபோது நீயும் செத்திருக்கலாமே?' என்று கூட என்னிடம் கேட்டார்.'' என்று சொன்ன கவிதாவின் கண்களிலிருந்து கண்ணீர் துளிகள் கன்னம் வழியே வழிந்தோடியது. என்ர அண்ணாவாவது இருந்திருந்தால் எனக்குத் துணையாய் இருக்கும். ஆனால் அதுவும் கிடைக்கல்ல.' கவிதாவின் கண்களில் வடிந்த கண்ணீரை துடைத்து விட்ட பானு

'கவிதா விதியென்று நினைத்துக்கொண்டிருந்தால் முட்டாள் நாமதான். இப்போது துன்பப்பட்டாலும் நமக்கு நல்ல எதிர்காலம் உண்டு. எனது நிலமையும் உன்னைப் போலத்தானே? நானும் மனதுக்குள்ள அழுதாலும் வெளியில சிரிக்கிறேன்.

சரி நீ வீட்டுக்குப் போ விடுமுறையில வந்து உன்னைப் பார்க்கிறேன்' என்று பானு கவிதாவை மேலும் ஆறுதல் படுத்தி வீட்டுக்கு அனுப்பினாள்.

கவிதா தன் நினைவுகளுடனே வீட்டையடைந்தாள். அவளைக் கண்ட பாட்டி 'இனி எப்படித்தான் ஒரு மாதம் கழியப் போகிறதோ தெரியல்ல. பள்ளிக்காவது போனால் நமக்கு கொஞ்சம் நிம்மதியா இருக்கும் பெத்த மகனே செத்துப் போயிட்டான். எவளோ ஒருத்தி பெத்த புள்ளைய நான் பார்க்கோணுமெண்டு தலைவிதி எனக்கு'' எனக் கூறியது கவிதாவின் காதுகளில் தெளிவாய் விழுந்தது.

'ஏன் பாட்டி என்னால் உங்களுக்கு என்ன தொல்லை' என கேட்கவேண்டும் போல இருந்தது கவிதாவுக்கு. ஆனால் என்ன செய்வது பெற்ற தாயே தொல்லை என்றெண்ணி போனபிறகு யார் சொன்னால்தான் என்ன என்றிருந்தது அவளுக்கு. அந்தப் பிஞ்சு மனது எல்லாவற்றுக்கும் பக்குவப்பட இப்போது பழகிக்கொண்டது.

பாடசாலை லீவு பாட்டியிடம் பேச்சுவாங்கவே கணக்காயிருந்தது. நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதமாகி அடுத்த தவணை ஆரம்பமானது. கவிதா தனக்கு என்றுதான் நிம்மதி கிடைக்குமோ? என்ற ஏக்கத்துடன் பாடசாலையையடைந்தாள். அவளைச் சந்தித்தது முதலில் பானுதான். பானு மிகவும் சந்தோஷத்துடன் காணப்பட்டாள்.

'கவிதா இன்றையோடு நமது தொல்லையெல்லாம் பறந்துவிட்டது. இனிமேல் நாம் இருவரும் கவலைப்படவே தேவையில்ல. நாம் இருவரும் கல்வி கற்பதற்காக சிறுவர் இல்லத்துக்குச் செல்லப் போகின்றோம். ஒரு அங்கிள் நமக்கு உதவிசெய்ய முன் வந்துள்ளார். நீயும் வருவாய் தானே! அங்கு போனால் நன்றாக படிக்கலாம். இனி நமக்கு வீடு, வாசல், தாய், தந்தை எல்லாமே அங்குதான். நாம் அங்கு சந்தோஷமாய் இருந்து கல்வி கற்கலாம். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டால் நாம் முன்னேற முடியாது. இன்னும் இரு தினங்களில் நாம் அங்கு செல்லவிருக்கின்றோம்.' கூறிமுடித்தாள் பானு.

'பானு உனக்கு என்னவென்று நன்றி சொல்வதென்றே எனக்குத் தெரியல. இது கடவுளால கிடைத்த பாக்கியம் என்றே எனக்குத் தோன்றுகின்றது' என்றாள் கவிதா. சந்தோஷத்தில் நா தழுதழுத்தது.

அவர்கள் இருவரும் விடுதி செல்லும் குறித்த தினமும் வந்தது. கவிதாவின் பாட்டி என்னதான் பேசினாலும் அன்று சற்று கலங்கிப்போனார். கவிதாவோ இச்சந்தர்ப்பத்தை ஏற்படுத்திய இறைவனுக்கு மனதினால் நன்றி சொல்லிக்கொண்டாள்.

நண்பிகள் இருவரும் தமது வாழ்நாளிலே ஏற்பட்ட முதலாவது திருப்பம் இதுதான் என்றெண்ணி விடுதியையடைய சந்தோஷத்துடன் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். இனிமேலாவது இந்தப் பிஞ்சுகளின் வாழ்க்கையில் வசந்தம் வீசட்டும்.

(யாவும் கற்பனையல்ல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிக்கவும் சிந்திக்கவும் -03

## மேலும் சில புதிய அமைச்சுக்கள்

மணி

**(1) ''தேடுதல் நடவடிக்கை'' அமைச்சு:-**

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வலைப் பின்னலாக பரவியுள்ள தேடுதல் நடவடிக்கைகளில் வேலைகள் எக்கச்சக்கமாக அதிகரித்துள்ளதால் இதற்கெனத் தனியானதொரு அமைச்சை உருவாக்க வேண்டி உள்ளது. இந்த அமைச்சின் பொறுப்புக்களும் கடமைகளும் பின்வருமாறு அமையும்.

(i) மக்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஒன்றாக கிராமப்புறங்களில் இரவு வேளைகளில் தமிழ்க் குடும்பங்களின் வீடுகளுக்குள் புகுந்து, தாய், சகோதரி, மகள் என்று வித்தியாசம் பாராமல் பெண்களை கற்பழித்தல்.

(ii) இந்தப் பாதுகாப்புப் பணியில் இராணுவத்தினருடன் பொலிசாரும் சேர்ந்து கொள்ளலாம். ('பொலிஸ்' என்ற பிரிவுக்குள் போலிகளும் அடக்கம்)

(iii) தேடுதல் நடவடிக்கையின் போது வாட்டசாட்டமான இளைஞர்களைச் ''சந்தேகத்தின்'' பேரில் விசாரணைக்கு அழைத்துச்சென்று அவர்களைக் ''காணாமல் போனவர்கள்'' ஆக்குதல்.

(iv) இவர்களில் சிலரைத் தும்புதட்டி குற்றுயிராக வீட்டுக்கு அனுப்பி விட்டு, விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டார் எனக் கதை கட்டுதல். (விசாரணை/தும்புதட்டுதல்/சக்கையாக்குல்)

(V) பாரிய புதைகுழிகளை அந்தரங்கமாக ஏற்படுத்துதல்.

இந்த அமைச்சுக்கு 70 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படும். கற்பழிப்புச் செய்யும் ஒவ்வொரு இராணுவ வீரருக்கும் ரூ.10.000/- சன்மானம். ஒவ்வொரு கொலைக்கும் ரூ.1000/- ஒவ்வொரு புதைகுழிக்கும் ரூ.100.000/- இச் செயற்பாடுகளில் சாதனை படைப்பவர்களுக்கு கற்பழித் திலகம், கொலைமணி (கலைமணி அல்ல) புதை குழிச் செம்மல் போன்ற பட்டங்களும் வழங்கப்படும்.

இந்த அமைச்சின் நடவடிக்கைகளை ஜனாதிபதியும் பிரதமரும் கண்டுக்க வே மாட்டார்கள்.

**(2) ''செக் பொயின்ற்'' அமைச்சு:-**

தேடுதல் நடவடிக்கைகள் போலவே ''செக் பொயின்ற்'' (வீதித் தடை (முகாம்) களிலும் வேலை அதிகரித்துள்ளதால், இதற்கும் தனியான அமைச்சு ஒன்று அவசியமாகிறது. இந்த அமைச்சின் பொறுப்புக்கள் வருமாறு.

(i) இராணுவ வீரர்கள் அப்பாவிப் பயணிகளின் அழுக்கு மூட்டைகளைத் துழாவி, அதற்குள் வெடி குண்டுகளைக் கண்டு பிடித்தல்.

(ii) புலிகள் தாக்க வந்தால் ஓடி ஒளிந்து கொள்ளுதல். அடுத்து வரும் வாகனங்களில் வரும் பயணிகளை கடும் வெயிலில் காக்க வைத்து, சித்திரவதை செய்தல்.

(iii) கொழும்பில் குண்டு வெடித்தால், மட்டக்களப்பில் சோதனையைத் தீவிரமாக்குதல்.

(iv) யாழ்ப்பாணத்தில் தாக்குதல் நடந்தால், கொழும்பில் தேடுதலைத் தீவிரமாக்குதல். சந்தேகத்தின் பேரில் வெளியில் இருந்து வரும் பயணிகளைக் கைது செய்தல்.

(iv) எப்படியும் நாள் ஒன்றுக்கு 100 பேரையாவது தடுத்து வைத்து 4ம் மாடி விசாரணைக்கு அனுப்புதல்.

இந்த அமைச்சுக்கு ரூ. 60 கோடி நிதி ஒதுக்கீடு வருடம் தோறும் வழங்கப்படும். வருட முடிவில் அதிக நபர்களைத் தடுத்து வைத்தோருக்கு ஒரு லட்ச ரூபா சன்மானமும். ஆள் உயர 'ட்றேபி' யும் வழங்கப்படும்.

ஆணும் பெண்ணும் சேர்ந்து காவல் செய்யும் காவல் அரண்களில், வருட முடிவில் தம் பதியாகச் செல்வோருக்கு, பயணிகளிடம் பறிமுதல் செய்த பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். இவர்களுக்கு அவரவர் ஊரில் தனியான வீடும் 2 ஏக்கர் வயல் காணியும் அன்பளிப்பாக வழங்கப்படும். மன்னம்பிட்டி செக் பொயின்ரில் கடமை புரிவோருக்கு லொறிகளிலிருந்து பெறப்படும் பொருட்கள் போனசாக வழங்கப்படும்.

**(3) ஷெல்லடி அமைச்சு:-**

இராணுவத்தினர் இந்த நடவடிக்கையை ஒழுங்காக மேற்கொள்ளாததாலேயே இதற்குத் தனியான அமைச்சு உருவாக்கப் படுகிறது. இந்த அமைச்சு தேவைப் படும் போதெல்லாம், பொம்பர்களையும், ஹெலிக் கொப்டர்களையும் சேவைக்கு அமர்த்திக் கொள்ளலாம்.

இந்த அமைச்சின் பிரதான கடமைகள் வருமாறு:-

(i) மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளுக்கு, 5 கிலோமீற்றருக்கு அப்பால் இருந்து ஷெல் அடிக்க வேண்டும். அப்பகுதிகளில் புலிகள் எங்கெங்கு பதுங்கியிருக்கிறார்கள் என ஞான திருஷ்டியால் கண்டறிந்து ஷெல் அடிக்க வேண்டும். ஞான திருஷ்டிக் கோளாறுகளினால் ஷெல்கள் குடிமனைகளில் விழுந்து, உயிர்ச்சேதம், பொருட்சேதம் ஏற்பட்டால் பழியை இறந்தவர்கள் மேலேயே போட்டுவிட வேண்டும். (ஷெல் விழும் இடங்களில் இவர்களை யார் இருக்கச் சொன்னது. அது தப்புத்தானே!)

(ii) ஷெல்லடிகளில் யாரும் பலியாகாவிட்டால், ஒலிபெருக்கி மூலம் அறிவிப்புச்செய்து அவர்களை உடனடியாகக் கோயில்களுக்கும், பாடசாலைகளுக்கும் சென்று பாதுகாப்பாக இருக்கும்படி கூறவேண்டியது. அதன் பின் ஹெலியில் சென்று அந்தக் கோயில்களிலும், பாடசாலைகளிலும் சரியாகக் குறி பார்த்து (எவ்வித தவறும் ஏற்படாமல்) குண்டு மாரி பொழிய வேண்டியது. நூற்றுக் கணக்கில் மக்கள் பலியானபின், தவறுதலாக அவ்விடங்களில் குண்டு விழுந்தது எனக் காதில் பூ சுற்ற வேண்டியது)

(iii) இவ்விரண்டு நடவடிக்கைகளிலும் போதிய அளவு சேதம் ஏற்படாவிட்டாலும், பொம்பர் விமானத்தைப் பயன்படுத்தி தமிழ்ப் பிரதேசங்களில் குண்டுமாரி பொழியலாம். எவ்வளவு காலம்? புலிகளின் மேல் ஏற்பட்ட வஞ்சம் தீரும்வரை.

(iv) மேலும் சில கடமைகள் (பகிரங்கமாகக் கூறமுடியாதவை) அவ்வப்போது **'TOP SECRET'** குறிப்புடன் இந்த அமைச்சுக்கு அனுப்பப்படும். அதன்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த அமைச்சுக்கான நிதி? அதற்கு வானமே எல்லை. இராணுவ அதிகாரிகளின் பொக்கற்றுக்குள் போனவை போக (அவ்வாறே அமைச்சு அதிகாரிகள் பொக்கற்றுக்குள் போனவை போக) மீதித் தொகைக்கு அமைச்சு கணக்குக் காட்டினால் போதும். கணக்குக் காட்டாவிட்டாலும் பரவாயில்லை. தேச பக்தி நடவடிக்கைகளுக்கு கணக்கு வழக்குகள் அவ்வளவு முக்கியமா என்ன?

**(4) வரிச்சுமை அமைச்சு:-**

இதை வரிப்பழு அமைச்சு என்றும் கூறலாம். இந்த அமைச்சின் நோக்கம் அதன் பெயரிலேயே இருக்கிறது. இந்த வரிவிடயங்கள் எல்லாம், நிதி அமைச்சின் கீழ், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினாலேயே மேற்கொள்ளப்படும். ஆனால், ''வரிச்சுமை'' வேலைகளுக்கு இவைகளால் ஈடு கொடுக்க முடியவில்லை. அதனாலேயே இப்புதிய அமைச்சு உருவாக்கப்படுகிறது.

இந்த அமைச்சுக்கு விசேட கடமைகள் சிலவுண்டு. அவை வருமாறு.

(i) நாளும் பொழுதும் பண்டங்களின் விலைகளை ஏற்றிக் கொண்டே இருக்க வேண்டும்.

(ii) **G.S.T, NSL, BTT** போன்று புதிய புதிய வரிகளைக் கண்டு பிடிக்க வேண்டும். எவ்வாறாயினும் வரிச்சுமை என்றுமே தளராதபடி பார்த்துக்கொள்ள வேண்டியது மிக மிக முக்கியமானதாகும். **ABCD** முதலிய 26 எழுத்துக்களையும், மாற்றி மாற்றிப் போட்டுப் புதிய வரிகளை அமைக்கலாம்.

(iii) புதிய வரிகள் கண்டு பிடிக்க முடியாவிட்டாலும் பரவாயில்லை. x வரி, y வரி , Z வரி என்று வரிகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

(iv) மின்சாரம், டெலிபோன், காஸ், போன்றவற்றுக்கு எக்கச்சக்கமான வரிகளை ஏற்றிக் கொண்டே போக வேண்டும். எதிர்த் தரப்பிலிருந்து ஏதாவது ஆட்சேபம் கிளம்பினால், இவை எல்லாம் பணக்காரர்களை வழிக்குக் கொண்டுவரும் வழிவகைகள் எனக் கதை கட்டிவிட வேண்டும்.

இவ் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மூச்! ஒரு சதம் கூடக் கிடையாது. இந்த அமைச்சுதான், கொள்ளையடிக்கும் வரிப்பணத்தில்- மன்னிக்கவும், கொட்டிக்கொள்ளும் வரிப்பணத்தில், தனக்கு வேண்டிய தொகையை எடுத்துக் கொண்டு மீதியை ஏனைய அமைச்சுக்களுக்குப் பிச்சை போடலாம். மீண்டும் மன்னிக்கவும். பிரிச்சுக் கொடுக்கலாம்.

ஊழியர்களுக்கான சன்மானம், விருதுகள், பரிசுகள் மூச்! எல்லாம் அவரவர் தமது சக்திக்கு ஏற்பத் தேடிக்கொள்ள வேண்டியதுதான். அதிக அளவிலான வரிகளைக் கண்டுபிடிக்கும் ஊழியருக்கு மட்டும் அடுத்த நிதி அமைச்சர் பதவி கிடைக்கலாம்.

---

# தமிழ் மறுமலர்ச்சியாளர் ராவ்பகதூர் சீ.டபிள்யூ.தாமோதரம்பிள்ளையின் தவப்புதல்வர் வண.பிரான்சிஸ் கிங்ஸ்பரி

சா.ஆ.தர்மரத்தினம்

(சென்றவாரத் தொடர்ச்சி....)

தமது நெருங்கிய உறவினராகிய மேரி இரத்தினத்தைப் பிரான்சிஸ் 1893 ஆகஸ்ட் 14ம் திகதி திருமணம் புரிந்தார். அவரது சகோதரி சிவபாக்கியத்தை மேரியின் சகோதரரே அதற்கு முந்திய ஆண்டில் திருமணம் செய்திருந்தார். தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட மேரியின் தந்தை சிதம்பரப்பிள்ளை ஆந்திராவில் இருப்பதான நல்லூரில் ஒரு வைத்தியராகப் பணிபுரிந்து வந்தார். பிரான்சிஸ் தமது மாணவப் பருவத்தில் இருந்தே மேரியைக் காதலித்து வந்துள்ளார். திருமணத்திற்குத் தாமோதரம்பிள்ளையிடம் பிரான்சிஸ் முறையாக அனுமதி கோரியிருந்தாராயினும், அது மறுக்கப்பட்டபோதே, கிறிஸ்தவ வைபவ முறைப்படி மிடுக்குடன் வெகு சிக்கனமாகவே தம் திருமணத்தைப் பிரான்சிஸ் நடத்தியிருந்தார். பதிவுகளுக்கு ரூபா 3, குதிரை வண்டிக்கு 1 ரூபாவும், தேவா லயத்தில் மணியை ஒலித்த கோவில் பிள்ளைக்கு 1 ரூபாவும் சிற்றுண்டிக்கு 1 ரூபாவும் ஆக பிரான்சிஸின் திருமணச் செலவு மொத்தமாக 6ரூபா மட்டுமே.

1898ல் பசுமலைத் தேவாலயத்தில் ஓர் உதவிக் குருவாக வந்திருந்த பிரான்சிஸ் அடுத்து வந்த ஆண்டில் தானே அச் சபையின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அவரது முதல் பெண் குழந்தை ஒரு வருடம் மட்டுமே உயிர் வாழ்ந்தது. அவரின் இரண்டாவது மகள் கதரின் கற்பகமோ காதலித்துத் திருமணம் புரிந்து கொண்டவர். லீலா எனும் பெயரில் ஓர் பெண் குழந்தையை பிரசவித்துவிட்டு சிறிது காலத்துள் மரித்து விட்டார். அவரது தந்தை தாமோதரம்பிள்ளையைப் போன்றே பிரான்சிஸ் கிங்ஸ்பரியும் தமது மனைவியையும், பிள்ளைகளையும் அற்ப ஆயுளில் இழக்கும் பரிதாப நிலைக்கு ஆளாகியிருந்தார்.

பிரான்சிஸ் கிங்ஸ்பரி 1910 ஆம் ஆண்டில் பெங்களூர் இறையியல் கல்லூரியில் ஓர் விரிவுரையாளராக இணைந்து கொண்டார். எவ்வாறாயினும், இடையிட்ட ஒரு குறுகிய காலம் பிரித்தானிய இராணுவத்தில் குருத்துவ பணிபுரிந்தமை அவரை மெசப்பொத்தேமியாவுக்குக் கொண்டு சென்றது. அங்கு அவருக்குக் கிடைக்கப் பெற்ற அதிகப்பட்ட ஓய்வு வேளைகள் அவர்களது ஆக்கங்களூடாக ஜேர்மனிய சிந்தனையாளர்களின் செல்வாக்குக்கு அவரை உட்படுத்தியது. அதன் பெறுபேறாக ''இயேசு வெறுமனே ஒரு மனிதர்'' எனும் கருத்து அவரிடம் உண்டாயிற்று. பெங்களூரில் அவர் தமது திருத்துவ பணியினைத் திரும்ப ஆரம்பித்திருந்தாராயினும், ஒரு வேளை மனச்சாட்சி பிரச்சினை காரணமாக 1923 இல் பதவியில் இருந்து அவர் விலகியிருக்கலாம். 1924 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சொல் அகராதியின் தயாரிப்பில் ஓர் உதவி ஆசிரியராக அவர் கடமையை ஏற்றுக் கொண்டு 1926 வரை அப் பதவியை வகித்து வந்துள்ளார்.

1924 இல் அவரால் வெளியிடப்பட்டிருந்த தங்குவதற்கு இடமளித்த ''நசரேயனாகிய இயேசு'' எனும் நூல் சிலுவை மரணத்துடன் முற்றுப் பெற்றிருந்ததுடன், அவரது உயிர்த்தெழுதல் குறித்து எதுவும் குறிப்பிடாது இருந்தது. பெங்களூர் இறையியல் கல்லூரி அதிபர் டாக்டர் வார்சன் அவர்களால் நடத்தப்பட்ட பிரான்சிஸ் மீதான விசாரணையில் அது முற்றுப் பெற பிரான்சிஸின் குருத்துவ அங்கி களையப்பட்டது. அதனை அடுத்து யுனிட்டேரியன் திருச்சபை அவரை ஒரு குருவாக ஏற்றுக் கொண்டது. அதனால் குருவானவர் அந்தஸ்தைக் குறிக்கும் ''வண'' எனும் பதத்தைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்கு உரித்துடையவரானார். இப்பொழுதோ, இந்தியா பிரான்சிஸ் கிங்ஸ்பரிக்கு மேலும் ஓர் வாய்ப்பான இடமாக இருந்திருக்கவில்லை. 1926 ஆகஸ்ட் திங்களில் கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரியில் ஒரு விரிவுரையாளராக அவர் இணைந்து கொண்டார்.

எப்பொழுதுமே பிரான்சிஸ் ஒரு ஹாஸ்ய மனப்போக்குடையவராகவே இருந்து வந்தார். அவரது மரணத்தின் பின் வெளிவந்த அவரது மனோன்மணி பதிப்பிற்கு எழுதிய முகவுரையில் ஏ.எம். கே. குமாரசாமி ஒரு சிறுவர் கொண்டாட்டத்தில் ''கள்ளிலே ஒரு குடி குடிச்சுக்கொண்டு'', கருவாட்டிலே ஒரு கடி கடிச்சுக் கொண்டு என பிரான்சிஸ் பாடி நடன மாடியிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். 1936 இல் கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரியில் இருந்து ஓய்வுபெற்ற பிரான்சிஸ் 1941 ஏப்ரலில் 12ம் திகதி மறுமைக்குள் பிரவேசித்தார். அவரது மாணவர்கள் அவர் மரணித்தபோது அவர் ஞாபகார்த்தமாக ''நினைவு மலர்'' வெளியிட்டிருந்தனர்.

தலைநகர் கொழும்பில் வண.பிரான்சிஸ் கிங்ஸ்பரி கொழும்புத் தமிழ் சங்கத்தை ஸ்தாபித்து இருந்ததாகவும், அங்கு நிகழ்ந்த வைபவம் ஒன்றிலேயே ''ஈழத் தமிழர் இறைமை மீள்விக்கப்பட்டமையை'' மன்றில் எண்பித்திருந்தவரான அமரர் மு.திருச்செல்வத்துக்கும், புனிதத்திற்கும் இடைப்பட்ட முதல் சந்திப்பிலேயே இருவருக்கும் இடையே காதல் மலர்ந்ததாகவும் அக் காதல் திருமணத்தில் முடிவு பெறுவதற்கு பிரான்சிஸின் புதல்வர் உவில்லியம் கிங்ஸ்பரியே உதவியிருந்ததாகவும் உரைக்கிறது.

(தொடரும்.....)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் மலர்

## உடன் பிறப்பு

பாலத்துறை எனும் ஊரில் சிங்காரம் என்பவர் கூட்டுறவுக் கடையில் வேலை பார்த்து வந்தார். இவருடைய மனைவியின் பெயர் திலகவதி. அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் இருந்தனர். பெரியவன் பெயர் சுந்தர். சின்னவனின் பெயர் அரவிந். பெரியவன் நோஞ்சானாக இருப்பான். சின்னவன் திடகாத்திரமாக இருப்பான். பெரியவன் நோஞ்சானாக இருந்தாலும் துடிப்பாக இருப்பான். அதிக குறும்பு செய்வான். சின்னவன் அமைதியாக இருப்பான். நன்றாகப் படிக்கக் கூடியவன். எல்லோர் மீதும் பாசமாக இருப்பான். சுந்தர் ஆறாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தான். அரவிந் ஐந்தாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தான்.

அன்று பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்த இரண்டு பேரும் புத்தகப் பையை வைத்தார்கள். அரவிந் கால், கை கழுவ கிணற்றடிக்குப் போனான். சுந்தர் அறையில் கிடந்த பந்தை எடுத்து அறைக்குள்ளேயே அடித்து விளையாடத் தொடங்கினான். தாறுமாறாக வேகமாகப் பந்தை அடிக்கவே பந்து மேசை மீது இருந்த மை போத்தலில் பட்டு கீழே விழுந்து மை போத்தல் நொறுங்கியது. அந்த நேரம் பார்த்து கிணற்றடிக்குப் போய் இருந்த அரவிந் அங்கு வந்தான். ''ஐயோ! என்ன அண்ணா இப்படி செய்துவிட்டாய். இதை அப்பா கண்டார் என்றால் அடிப்பாரே. இப்ப என்ன செய்வது'' என்று துடைப்பான் ஒன்றை எடுத்துக் கண்ணாடித் துண்டுகளை ஒவ்வொன்றாக அள்ளி, ஒரு தட்டில் எடுத்தான். இவை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு மை போத்தலை உடைத்த சுந்தர் பயத்துடன் நின்றிருந்தான். கண்ணாடித் துண்டுகளை சேகரித்த அரவிந் அதனை எடுத்துக்கொண்டு வெளியே செல்லவே அவனின் அப்பா அங்கு வந்தார். அவரைக் கண்டதும், இருவருமே திடுக்கிட்டனர். உள்ளே



வந்தவர் உடைகளை கழற்றி விட்டு அறைக்குள் எட்டிப் பார்த்தார். ''என்ன அரவிந் அம்மா இன்னும் வரவில்லையா'' என்று கேட்டார். சுந்தரும், அரவிந்தும் தடுமாறிய குரலில் ''இன்னும் வரவில்லை அப்பா'' என்றனர். இதைக் கேட்ட இவர்களின் அப்பா சிங்காரம் ''என்ன தடுமாறுகிறீர்கள்'' என்று கேட்கும் போதே மை போத்தலைக் கண்டுவிட்டார். உடனே ''என்னடா... இது? யார் இந்த வேலை செய்தது?'' என அதட்டினார். அரவிந், சுந்தர் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். சிங்காரம் சிறிது நேரம் அமைதியாக அவ் அறையில் உள்ள நாற்காலி ஒன்றில் அமர்ந்தார். பின்பு இருவரையும் ''ஏய் ரெண்டுபேரும் இங்கே வாங்கடா...'' என்று அழைத்தார். சுந்தரும் அரவிந்தும் பயந்த நிலையில் அருகில்வந்து நின்றனர். ''ஏய் இப்ப சொல்லுங்க. யார் மை போத்தலை உடைத்தது? என்னடா நான் கேட்கிறேன் நீங்க பாட்டுக்கு மௌனமாக நிக்கிறீங்க. சொல்லுங்கடா யார் உடைச்சது?'' என்று கோபமாகக் கேட்டார். ஒரு நிமிடம் ஆழமாக தன் அண்ணன் சுந்தரை அரவிந் பார்த்தான். அடுத்த நிமிடம் ''நான்தான் உடைச்சேன் அப்பா என்றான் அரவிந்'' சுந்தர் விழிபிதுங்க தன் தம்பியை பார்த்தான். அடுத்த நொடி சிங்காரம் எழுந்து ''பளார் பளார்'' என்று அடித்தார். அரவிந் அழுதபடியே இருந்தான். அரவிந்தை அடிக்க அடிக்க சுந்தர் அழத் தொடங்கினான். ''ஏய் இவன் அடி வாங்குறான் நீ ஏன்டா அழுறாய்?'' என்றார் அப்பா. ''அது வந்துப்பா மை போத்தலை இவன் உடைக்கவில்லை. நான்தான் உடைச்சேன் என்றான் சுந்தர். கண்களைக் கசக்கிக் கொண்டு ''என்னது மை போத்தலை நீதான் உடைச்சியா? அப்ப நீ உடைச்சதை அரவிந் தான் உடைச்சதா சொன்னானே. அது ஏன்டா?'' என்று அப்பா அதட்டினார்.

அதற்கு அரவிந் ''வந்துப்பா போன வாரம் அண்ணன் தேங்காய் எண்ணெய் போத்தலை தட்டிவிட்டதுக்கு நீங்க அடிச்சீங்க. அன்று ராத்திரி அண்ணனுக்கு காய்ச்சல் வந்ததும் அண்ணன் பயந்து பயந்து புலம்பினது எனக்குக் கேட்டது. அதுபோல இன்றைக்கும் நடந்து விடக்கூடாது என்பதற்காகவும், அண்ணன் மேல் உள்ள பாசத்தாலும் தான் நான் அப்படிச் சொன்னேன். அது தவறா?'' என்றான் அரவிந். அவன் சொன்ன வார்த்தை கேட்டு மகிழ்ந்து போனார் சிங்காரம். இவனுக்கு உள்ள உடன் பிறப்பு பாசம் பெத்த எனக்கு இல்லையே என்று வெட்கப்பட்டுப் போனார் சிங்காரம்.

தே. மதன்ராஜ்
மட் / மெ.ம. கல்லூரி,
மட்டக்களப்பு

### விடுகதைகளும் விடைகளும்

1. அழகாய் பூ பூக்கும் அம்மாடி என காய் காய்க்கும்?
2. அடர்ந்த காட்டில் இருண்ட மனிதன்?
3. அனலில் பிறந்து ஆகாயத்தில் மறைவான்?
4. கல்லிலே பிறக்கும் பூ, தண்ணீரிலே மலரும் பூ?
5. பச்சைக் கோழி இட்ட முட்டையில் வெள்ளைக் குஞ்சு பொரித்தது?

**விடைகள்**

1. பூசணி
2. பேன்
3. புகை
4. சுண்ணாம்பு
5. பப்பாசி

ர. சியாம்
8C
S.S.C

### கற்றுக்கொள்

1. நாய்களைப் பார்:- நன்றியைக் கற்றுக்கொள்.
2. எறும்புகளைப் பார்:- உழைப்பைக் கற்றுக்கொள்.
3. காக்கைகளைப் பார்:- ஒற்றுமையைக் கற்றுக் கொள்.
4. அலைகளைப் பார்:- முயற்சியைக் கற்றுக்கொள்.
5. கொக்குகளைப் பார்:- பொறுமையைக் கற்றுக்கொள்.
6. தேனிக்களைப் பார்:- சுறுசுறுப்பைக் கற்றுக் கொள்.
7. மரங்களைப் பார்:- உதவும் குணத்தைக் கற்றுக்கொள்.

சி. நிதார்த்தன்
ஆண்டு - 8S
மட் / புனித மி.தே. பாடசாலை.

# அறிவியல் அரங்கம்

## டைட்டானிக் கப்பல் பற்றிய சில துணுக்கள்

1. டைட்டானிக் என்றால் என்ன?

உலகிலேயே மிகவும் சக்தி வாய்ந்த விஞ்ஞானத் தொழில்நுட்பத்தால் கவிழ்க்க முடியாது என்ற எண்ணத்துடன் தலை சிறந்த விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட கப்பல் தான் டைட்டானிக் ஆகும்.

2. இது எந்த நாட்டில் உருவாக்கப்பட்டது?

இங்கிலாந்து நாட்டில்.

3. பின்னர் இக் கப்பலுக்கு என்ன நடந்தது?

இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்கு தனது வெள்ளோட்டத்தின் போது பனிப்பாறை ஒன்றில் மோதி கடலில் மூழ்கியது.

4. இவ் விபத்து எத்தனையாம் ஆண்டு நடைபெற்றது?

1912ம் ஆண்டு நடைபெற்றது.

சி. சரண்யா
தரம்:-7G
மட் / வின்சன் மகளீர் உயர்தர பாடசாலை.

## எலும்பு பற்றிய செய்திகள்

▲ எமது உடம்பில் உள்ள எலும்புகளும் ஒருவகையான திசுக்கள்தான். மற்ற திசுக்களை விட இது வலிமை உடையதாகும். இது மேட்ரிக்ஸ், ஜெலட்டின் போன்ற பொருட்களால் ஆனது.

▲ எலும்புகள் தன்னகத்தே கல்சியம் கார்பனேட், கல்சியம் பொஸ்பேட் போன்ற இரசாயனப் பொருட்களைக் கொண்டிருப்பதால் இவை வலிமை உடையதாக இருக்கின்றன.

▲ எலும்பின் உட்பகுதி ஒரு குழாய் போன்று இருக்கும். அதனுள் நிரம்பி இருப்பது எலும்பு மச்சையாலான மஞ்சட் மச்சை, சிகப்பு மச்சை இவைகளில் இருந்துதான் இரத்தச் சிகப்பணுக்கள் உருவாகின்றன.

பா. யூகாசனன் - ஐயாத்துரை
தரம் - 9D
மட் / பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்

## கண்டு பிடியுங்கள் 15

இளவரசன் ஒருவனுக்கு நாக புஸ்பம் ஒன்று தேவைப்பட்டது. நாகலோகத்தில் மூன்று வாசல்களைக் கடந்துதான் அப்புஸ்பம் இருக்கின்ற இடத்திற்குச் செல்ல வேண்டும். ஒவ்வொரு வாயிற் காவலனும் நீ கொண்டுவரும் புஸ்பங்களில் அரைவாசியையும், மேலதிகமாக ஒன்றையும் தரவேண்டும் என வற்புறுத்தினர். அவனுக்கு ஒரு புஸ்பம் தான் வேண்டும். ஒப்புக்கொண்டு மூன்று வாசல்களையும், கடந்து புஸ்பங்கள் உள்ள தோட்டத்திற்குச் சென்றான். ஒரு புஸ்பத்திற்குக் கூடுதலாக எடுத்துக் கொண்டு நாகலோகத்துக்கு வெளியில் சென்றால் தலை வெடித்து விடும் என ஒரு சாபமும் இருக்கின்றது. இளவரசன் எத்தனை புஸ்பங்களைப் பறித்தால் ஒரு புஸ்பத்தோடு வெளியில் வரலாம்?

இதற்கான விடையினை 25.08.01க்கு முன்பாக அனுப்பி வைப்பதோடு தினக்கதிர் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவும்.

அனுப்பவேண்டிய முகவரி
கண்டு பிடியுங்கள்-15
தினக்கதிர் வாரமலர்,
155 திருமலை வீதி,
த.பெ.எண்-06,
மட்டக்களப்பு.

கடந்த வாரம் கேட்கப்பட்ட கேள்விக்கான சரியான விடை, ''மகள்'' என்பதாகும். இவ் விடையினை பலர் எழுதியிருந்தும் அவர்களில் குலுக்கல் மூலம் பரிசுக்காக தெரிவு செய்யப்பட்டவர்.

கணேசமுதலி நிலோஜினி
கிராமக் கோட் வீதி,
ஆரையம்பதி - 02.

### பாராட்டுக்குரியவர்கள்:

1) க. கமலதாசன்,
வேதக்கோயிலடி,
வந்தாறுமூலை.
2) தவராசா தர்ஷினி
1/31, 8ம் குறுக்கு,
கூளாவடி.
3) ச. ரமேஷ்குமார்
''பிருந்தா''
செக்கடி வீதி,
களுவாஞ்சிகுடி.
4) எ. நிலோஜன்,
ஆரோக்கியம் வீதி,
பெரிய நீலாவணை.
5) தியாகராஜா சுகந்தன்
மினிபவர் வீதி,
களுவாஞ்சிகுடி -9.
6) மஞ்சுபாஷினி சிவமுருகதாசன்,
இல7, சித்தி விநாயகர் வீதி,
கல்லடி.
7) அப்துல் முனாஸ்,
271 சந்தை வீதி,
ஏறாவூர் - 01.
8) கே. உதயகுமார்,
29, சேனை வீதி,
கோட்டைமுனை,
மட்டக்களப்பு.
9) ச. கீதாஞ்சலி,
செக்கடி வீதி,
களுவாஞ்சிகுடி - 08.
10) ஸ்ரீ. குணாதீதன்
10, தாமரைக்கேணி வீதி,
மட்டக்களப்பு.

## நடனக் கலையின் ஆரம்பம்!

ஆதியில் மனிதன் பூமியில் பிறந்ததும் அவனுக்கு மொழிகள் உண்டாகவில்லை. அவன் மிருகங்களைப் போல் சந்தோஷத்தை வெளிக்காட்டுவதற்கு கத்திக்கொண்டும் உறுமிக்கொண்டும் பலவிதமாக சத்தமிட்டும் கொண்டான். படிப்படியாக அந்த சத்தத்திலிருந்து பாஷையை உருவாக்கினான். ஒரு நிமிடம் தன்னை சோதனையிட்டான். மிருகங்களைப்போல் வாழ்ந்த மனிதன் பாஷைஞானம் பெற்று அரிய செயல்களை எல்லாம் செய்து அனுபவித்து ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் அது வளர வேண்டும் என சிந்திக்கத் தலைப்பட்டான். மனிதனுக்கு சந்தோஷம் வந்தால் சிரிப்பதும், கூத்தாடுவதும், துன்பம் வந்தால் பேசுவதும், அழுவதும் இயற்கை. இதே மாதிரி ஒவ்வொரு விதமாக அவஸ்தை இருக்கும்போது மனிதன் வெளிப்படையாக சேட்டைகள் செய்வது இயற்கை. சந்தோஷம் மிகுந்ததும் மனிதன் கூச்சல் இட்டான். குதித்துக் கூத்தாடினான். கைகளை தட்டினான். குதித்ததும் கூத்தாக மாறியது. கூச்சல் இட்டது இசையாக மாறியது. இசை, கூத்து, தாளம் இவை மூன்றும் மனிதனது அறிவால் படைக்கப்பட்டது. கூத்து பின் வருமாறு:-

வாழ்ந்து கூத்தாடுபவன் தன் சாமர்த்தியங்களால் சபையோரின் மன நிலையை கவரச் செய்து நவரசங்களையும் அவர்கள் அனுபவிக்கும் படியும் செய்தான். இந்தக் கூத்தே மனித நாகரீகத்துடன் போட்டிபோட்டுக் கொண்டு பண்ணப்பட்டது. இது நாளாக நாளாக நாட்டியம் என பெயர் பெற்றது. நூறு வருடங்களுக்கு முன்பு இக்கலை தோன்றி இருக்கக்கூடும். வேத காலத்துக்கு முன்பு இக்கலை தோன்றியிருக்கலாம் எனத் தெரிய வருகிறது.

எஸ். கிருத்திகா
9K
மட் / பட்டிருப்பு ம.ம. வித்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரவன் பதில்கள்

**கேள்வி:- கதிரவனே பேனா நண்பர்களுடன் நட்பை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு அறிவுரை ஒன்று கூறுங்கள் பார்க்கலாம்?**

*எஸ்.பிறேம், முனைக்காடு மேற்கு.*

■ முத்திரை, என்வலப், பென் ஆகிய மூன்றும் வாங்கக்கூடிய வருமானம் உள்ளவராக இருக்க வேண்டும்.

**கேள்வி:- கதிரவா! ஊடகச் சுதந்திரம் குறித்து மிகவும் இனிமையாகப் பேசும் ஜனாதிபதி ஊடகவியலாளர்களை படையினர் தாக்குவதையும், மிரட்டுவதையும் கண்டும், வாய்மூடிக் கொண்டிருப்பதைப்பற்றி என்ன கூறலாம்?**

*சே.கு.முகைதீன் பதுறியா வீதி, காங்கேயனோடை.*

■ ஊடகச் சுதந்திரத்தைப் பற்றிப் பேசும் அம்மையார் படையினர் சுதந்திரத்தில் பேசாமல் இருக்கின்றார். அவ்வளவுதான்.

**கேள்வி:- இரவில் கனவு காண்பதைத் தடுக்க என்ன செய்ய வேண்டும் கதிரவனே?**

*அ.குலாம்பிகை அம்பிளாந்துறை.*

■ தூங்காமல் விழித்திருக்க வேண்டும்.

**கேள்வி:- கதிரவனுக்கு நகரத்துப் பெண்களா? கிராமத்துப் பெண்களா பிடிக்கும்?**

*எட்வேட் நிஷாந்தன், பெரியநீலாவணை.*

■ நகரத்துப் பெண்களைப் பார்க்கப் பிடிக்கும். கிராமத்துப் பெண்ணோடு வாழப்பிடிக்கும்.

**கேள்வி:- மதிப்புக்குரிய கதிரவனே! இன்றைய அரசியலுக்கு ஏற்றால் போல் ஒரு பழமொழி கூறுங்களேன்?**

*ஏ.ரி.செல்வன், வந்தாறுமூலை.*

■ "தன்வினை தன்னைச் சுடும்"

**கேள்வி:- இரண்டு மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை படுவான்கரைப் பகுதி மக்களை சேமித்து வைக்கும்படி படையினர் துண்டுப்பிரசுரம் வெளியிட்டார்களே?**

*அ.ரதாட்சன், சந்திரா லேன், மட்டக்களப்பு.*

■ நல்ல சாப்பாட்டிற்கு போகப் போறாங்க போல.

**கேள்வி:- தற்போது இடம் பெற்ற 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் எப்படி கதிரவனே?**

*எஸ்.சண்முகப்பிரியா, விஜயபுரம்.*

■ இந்தப் பரீட்சையில் முக்கியமாக மாணவர்களைவிட பெற்றோர்கள் தான் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். எனவே யாராவது பரீட்சையெடுத்த மாணவனின் பெற்றோரைக் கேட்டுப்பாரும்.

**கேள்வி:- அன்பின் கதிரவனே அன்று ஔவைப்பாட்டி "வரப்புயர நீருயரும்" என்று பாடினார். நீங்கள் இன்றைய ஔவைப் பாட்டியாக நினைத்துப் பாடுங்கள் பார்க்கலாம்?**

*எஸ்.குகதாஸ், 11/23 சென்றல் கேம்.*

■ குண்டு உயர குருதி உயரும் குருதி உயர பிணம் உயரும் பிணம் உயர பணம் உயரும் பணம் உயர விலை உயரும் விலை உயர சுமை உயரும்.

**கேள்வி:- கதிரவனே! பெற்றோர் நண்பர் கதைகளைக் கேட்டு இடையில் காதலை கைவிடும் ஆண், பெண்களைப்பற்றி என்ன கூறலாம்?**

*எஸ்.சுசி, இருதயபுரம், மட்டக்களப்பு.*

■ புனிதமான காதலை புலம் பெயரவிட்டு விட்டு, சிபார்சு வாங்கிக் காதலிக்கும் காமுகர்கள்.

**கேள்வி:- பெண்கள் மென்மையானவர்கள் என்பது உண்மையா கதிரவனே?**

*எ.நிஷாந்தன் பெரியநீலாவணை.*

■ இல்லை. கூர்மையானவர்கள். அதனால் தான் வன்மையான விடயங்களில் மென்மையாக சாதிக்கிறார்கள் தம்பி.

**கேள்வி:- இன்றைய தமிழ் சினிமாப் படங்கள் அசிங்கமாக இருப்பது ஏன் கதிரவனே?**

*பு.டிருசியன், மாமாங்கம்.*

■ அசிங்கத்தை தமிழ் ரசிகர்கள் ருசிக்கத் தயாராக இருப்பதால், வீதியில் ஓரிடத்தில் அசிங்கம் இருந்தால் நாம் ஒருங்கி விடுவதுடன் மற்றவர்களையும் ஒதுங்கிப் போகச் செய்ய வேண்டும். பின்னர் மாநகர சபையிடம் கூறி அசிங்கத்தை அப்புறப்படுத்த வேண்டும். மொத்தத்தில் இது நான், நீர், பொறுப்புள்ள அமைப்புக்கள் எல்லாம் சேர்ந்து சாதிக்க வேண்டிய விடயங்கள்.

**கேள்வி:- அடிக்கடி பகல் கனவு காணும் மனிதர்களைப் பற்றி என்ன கூறுகிறீர்கள் கதிரவனே?**

*கவித்தென்றல் பெரிய நீலாவணை.*

■ விழித்திருக்கும் நேரத்தையும் வீணடிப்பவர்கள்.

**கேள்வி:- இலங்கையில் மனித உரிமை மீறப்படவில்லையென அடிக்கடி ஜனாதிபதி கூறுகிறாரே?**

*க.பா.புவிராசா, பாண்டிருப்பு*

■ மனித உரிமை இங்கு மீறப்படவில்லை என்பது உண்மை தான். ஏனெனில் இங்கு மீறப்படுவது எல்லாமே தமிழன் உரிமைதானே.

**கேள்வி:- கல்விக்கு செலவிடும் பணத்தை விமானம் வாங்கப் பயன்படுத்தப் போவதாக அதிஉத்தம ஜனாதிபதி கூறியது பற்றி?**

*மதிவதனன், உப்புவெளி, திருகோணமலை*

■ சாமிக்கு செலவிடும் பணத்தை ஆமிக்குப் பயன்படுத்தும் நாட்டில், கல்வி அறிவுக்கு பயன்படுத்தும் நிதியை கல்வி நிலையம் அழிக்கும் குண்டு விமானங்களை வாங்குவதையிட்டு ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. கல்வியை விட குண்டுக்குத்தான் இந்த நாட்டில் மவுசு தம்பி.



போட்டி இல:- 13
பரிசுக்குரியது

## உழைப்பு

விலைவாசியின் கொடுமையால்
உழைத்து ஓடாய் தேய்ந்த
என் தந்தைக்குத் துணையாக
பள்ளி செல்லும் வயதில்
பாதையோரம் நானும்
ஒரு தொழிலாளியானேன்.

எம்.கிருஷ்ணா
மட்டக்களப்பு.

## விடிவு என்று வரும்?

பள்ளி செல்லும் வயதில்
பட்டறையில் வேலை
பந்து விளையாடிய கரங்களில்
இன்று குடும்பத்தின் சுமை
இந்த அவல நிலை
என்று நீங்குமோ?
இருளாய்ப் போன
நம் வாழ்க்கையின்
விடிவு என்று வருமோ!

எஸ்.டனிக்தா, மாவடி வீதி, கறுதாவளை-1, களுவாஞ்சிகுடி.

## நிச்சயம்....!

இக்குடை
சரிந்தது போல்
அக்டோபர் 18ல்
அம்மையாரின்
போலி வேடம்
கலைவது நிச்சயம்!

கா.ரமேஷ் குமார், திராயம் பதி-02.

## தேர்தல்

தடையைத் திருத்திக் கொள்
ஏனெனில்!
பெய்யப்போகும்
இனவாத மழைக்கு
தப்பிக்க...தம்பி!!

எஸ்.பி.பாலமுருகன்
பதுளை

## வேண்டாம் நிறுத்து!

இருளின் கைப்பிடியில்
உறவுகளை இழந்து
தனிமையில்
வெடிகுண்டு தயாரித்து
நீயுமா இந்த
நாசமாகிப்போன தேசத்தை
மீண்டுமொரு நாகசாகியாக்க
போகிறாய்!

எம்.ஐ.ஷராப்தீன்
காங்கேயனோடை-12

## சின்னவனின் சிந்தனை

இனவெறியர்களை
இயற்கையால் அழிக்க முடியாமல்
இளைப்பாறி விட்டது
இன்னமும் என்னால்
பொறுக்க முடியாது
செயற்கைகளை கண்டுபிடித்து
அவர்களை
சின்னா பின்னமாக்கப் போகின்
றேன் -சின்னவன் நான்

தி.விஜிதா
காளிகோயில் வீதி,
பெரிய ஊறணி,
மட்டக்களப்பு.

## யுத்த மழை!

தம்பி....
விரைவாய்
சுத்த திருத்தங்கள் செய்...!
இன்று.....
யுத்த வருத்த மழையில்
நனையும் நம்மவர்க்கு
குடைபிடிக்க!

எஸ்.வினோதன்
கொக்குவில்,
மட்டக்களப்பு.

## முயற்சி செய்.....!

ஏழையெம் "இலக்குகள்"
"தாக்கி" இனியில்லை
வஞ்சகரின் வதிவிடத்தை நாம்,
வானூர்திகள் கொண்டழிக்க,
வெகுகாலமுமில்லை தம்பி,
முயற்சியோடு செயற்படு நீ,
முடியாததேதுமில்லை....!

மா.பிரசன்னா
கிரானூர்.

இப்படத்தை பிரதிபலிக்கும் கவிதையினை எழுதி அனுப்புங்கள். அனுப்பும் கவிதைகள் வார்த்தைகளில் எண்ணிக்கையில் அதிகம் இல்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்புங்கள். சிறந்த கவிதைக்கு 50ரூபாய் பணப்பரிசு வழங்கப்படுவதுடன் அக்கவிதையும் பிரசுரிக்கப்படும். மேலும் உங்களுடைய கவிதைகளை எதிர் வரும் ஆகஸ்ட் 25ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.



**அனுப்ப வேண்டிய முகவரி:-**

கவிதைப்போட்டி - 15
தினக்கதிர் வாரவெளியீடு
த.பெ.எண் :- 06
மட்டக்களப்பு

## நாடிருக்கும் இலட்சணத்தில்......

பொய் வாக்குறுதிகள் ஒரு பக்கம்
பொல்லாத இனவாதிகள் இன்னொரு பக்கம்
ஒய்யாரமாய் எம்.பி. மார் ஒருபுறம்
ஒழுங்காக உணவேயின்றி மக்கள் மறுபுறம்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒரு பக்கம்
நாலு திசைதனில் போர் முழக்கம் மறு பக்கம்
வம்பில் மாட்டிக் கொண்டு அரசு ஒருபுறம்
வருவாய் வேண்டிப் பல சதிகள் மறுபுறம்

பேச்சுவார்த்தை மாயங்கள் ஒரு பக்கம்
பேதம் தரும் வார்த்தைகள் இன்னொரு பக்கம்
மூச்சே நின்று போகும் விலைவாசி ஒரு புறம்
முழுமையான கல்வியின்றி சிறார்கள் மறுபுறம்.

மாணவர் கைதுகள் ஒரு பக்கம்
மாண்புள்ள மங்கையர்க்குப் பங்கம்
இன்னொரு பக்கம்
காணவில்லை! என விளம்பரங்கள் ஒரு புறம்
காடையர்கள் வெறியாட்டம்
நாடெங்கும் மறுபுறம்.

சுயநல எண்ணம் கொண்ட சுயலாப அரசியலால்
சுழல் துப்பாக்கிகளே ஊரெங்கும் ஆதிக்கம்
இயலாமைத் தலைமைகள்
இருப்பதனால் அன்றோ
சமாதான முயற்சிகள் பூச்சியமாய்த் தேக்கம்!

கிரானூர்,
சி.ஜெ.பார்த்தசாரதி,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் தற்கொலைக்கான சமூக உளவியல் பின்னணிகள்

க. பகீரதி
கிழக்குப் பல்கலைக்கழகம்

தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் நோக்குடன் செய்வதே தற்கொலையாகும். இன்று தற்கொலை என்பது உலகளாவிய ரீதியில் முக்கிய சமூகப் பிரச்சினையாக உருவெடுக்க ஆரம்பித்துள்ளது. இந்த வகையில் இலங்கை தற்கொலை வீதத்தில் உலக மட்டத்தில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இன்றைய சமுதாயங்களில் தற்கொலை பற்றிய பார்வை மேலோட்டமான செய்தியாக இருந்து வருகின்றது. இதனால் ஏற்படும் விளைவுகளை எண்ணிப் பார்க்க வேண்டியது இன்றைய சமுதாயத்தின் கடமையாகும்.

இதனடிப்படையில் மட்டக்களப்பு பிரதேசத்தில் தற்கொலை பற்றிய பின்னணியை நோக்கினால் இங்கும் நாள் தோறும் தற்கொலைச் சம்பவங்கள் இடம் பெற்ற வண்ணமிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் இங்கு பல இன, மத, மக்கள் வாழ்கின்றார்கள். இங்கு விவசாயம், மீன்பிடி என்பன முக்கிய தொழில்களாகவும் காணப்படுகின்றன. அது மட்டுமன்றி அரசாங்கத் தொழிலிலும் பலர் ஈடுபடுகின்றனர். இன்னும் சிலர் கூலி வேலை ஏனைய வேலைகள் என்பனவற்றில் ஈடுபடுகின்றனர்.

இங்கு ஆரம்ப காலங்களில் தற்கொலை செய்யும் வீதம் குறைவாகவே காணப்பட்டது. காலம் செல்லச் செல்ல மக்களுடைய நாளாந்த வாழ்க்கைத் தரத்திலும் மாற்றமேற்படத்தொடங்கியது. இதனால் இம்மாற்றங்களுக்கு ஈடு கொடுக்க முடியாதவர்கள் தாங்களாகவே உயிரை மாய்த்துக் கொள்ளத் தொடங்கினார்கள். இவ்வாறு உயிரை மாய்த்துக் கொள்வதற்காக பல வழிமுறைகளையும் கையாளுகிறார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் கிருமிநாசினிகளையும் (**Agro Chemicals**) அலரி விதையையுமே (**Oleandar seeds**) அதிகம் பயன்படுத்துவது மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலை அறிக்கைகள் மூலம் தெரிய வருகின்றது. இவ்வாறு தற்கொலை புரிவது குற்றம் என்ற காரணத்தாலும் சமூகத்தில் அது பற்றிய கண்ணோட்டம் தப்பாக இருப்பதாலும் பாதிப்பிற்குட்பட்டவ்ர்கள் எவற்றையும் மனந்திறந்து சொல்வதில்லை.

இப் பிரதேசத்தில் இவ்வாறு தற்கொலைக்கு முயற்சிப்பவர்கள் என்ன காரணங்களுக்காக இதனை மேற்கொள்கிறார்கள் எனும் போது சமூகக் காரணிகள், உளவியல் காரணிகள் என்று இரண்டாக நோக்க வேண்டியுள்ளது. சமூகக்காரணிகளை எடுத்து நோக்கும்போது தனிமைப்படுத்தப்படல், சமூகத் தொடர்புகள் அற்றுப் போதல், அரசியல் ரீதியான எதிர்ப்பைத் தெரிவித்தல், அவமானம் தாங்கமுடியாமை, மற்றவர்களுக்கு தண்டனை கொடுக்க, குறிக்கப்பட்ட சில அடிப்படைகளில், உறவு முறிவுகள் போன்றவற்றைக் கூறலாம்.

நாட்டின் நிலமையாலும், யுத்தக் கெடுபிடிகளாலும் இப்பிரதேசங்களில் உள்ள மக்கள் பலர் அகதிகளாக வேண்டிய நிலைக்கு உள்ளாகினர். அத்துடன் தங்கள் குடும்ப உறுப்பினர்களை இழக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. வீட்டிலோ வெளியிலோ நிம்மதி இழந்து தவிக்கும் நிலை ஏற்பட்டது. இதனால் இவற்றை எல்லாம் தாங்க முடியாத நிலையில் தற்கொலையே முடிவு என தீர்மானிக்கிறார்கள்.

மேலும் மட்டக்களப்பில் கிராமப் பகுதிகளில் உள்ளவர்களில் பண வசதி படைத்தவர்கள் கல்வி, தொழில் வாய்ப்பு கருதி மட்டக்களப்பு நகரிலும், ஏனைய பிற நகரங்களிலும் குடியேறத் தொடங்கினார்கள். இவர்களில் சிலர் சமூகக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க இவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக தற்கொலையே முடிவென்று தீர்மானிக்கின்றார்கள்.



மட்டக்களப்பு பிரதேசத்தில் உள்ள கிராமப்புறங்களில் உள்ளவர்களில் பெரும்பாலானோர் விவசாயத்தில் ஈடுபடுவதால் பெரும்பாலான விவசாயிகள் ஏனையோரிடம் கடன்பெற்று அல்லது தமது பொருள்களை அடகு வைத்தே விவசாயத்தில் ஈடுபடுகின்றார்கள். இதனால் குறிப்பிட்ட விளைச்சல் கிடைக்காமல் போகும்போது இவ்விவசாயிகள் பாதிப் படைகின்றார்கள். இதனால் ஒவ்வொரு போகத்திற்கும் கடன்பெற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால் வறுமை எனும் பிடிக்குள் சிக்கிக் கொள்கின்றார்கள். கடன்தொல்லை அதிகரித்ததும் கடனை அடைக்க முடியாமல் தன்னைத் தானே மாய்த்துக் கொள்கிறார்கள்.

இன்று நாட்டு நிலமை காரணமாக இப்பிரதேசத்தில் அநேகமான பிள்ளைகள் தந்தை யரை இழந்த நிலையில் காணப் படுகின்றனர். இதனால் பெண்களின் தலையில் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உள்ளது. இதனால் இப்பெண்கள் கூலி வேலைக்குச் செல்லும்போது பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகிறது. இவர்களது பிள்ளைகளும் சீரான முறையில் வளர்க்கப் படாமையினால் கெட்ட பழக்கங்களுக்கு உள்ளாகின்றனர். இதனால் சமூகத்தின் பழிச் சொல்லுக்கு ஆளாகின்றனர். எனவே அவமானம் தாங்க முடியாமையினால் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

அடுத்து நகரில் தற்கொலை இடம் பெறுவதற்கான காரணத்தை நோக்கும் போது நகரங்களில் சமூக ஒட்டின்மை (**Social deattachment**) அதிகம் நிலவுகிறது. தான் உண்டு. தன் வேலை உண்டு என்று இருப்பவர்கள் அதிகம். இதனால் தனிமை உணர்வு அதிகரிக்கின்றது. தங்கள் பிரச்சினைகளை பகிர்ந்து கொள்ள யாரும் கிடைப்பதில்லை. இதன் காரணமாக தனக்குள்ளேயே பிரச்சினைகள் மழுங்கடிக்கப் பட்டு இறுதியில் தற்கொலையை முடிவாகக் கொள்கின்றனர்.

அத்துடன் பிறரின் மேலான கோபம் தன்மேலான கோபமாக மாறி தான் இறந்து போவதன் மூலமாகப் பிறரின் மேல் தனக்கு உண்டான கோபத்தைப் போக்க முயலும் செயலாகவும் தற்கொலை உள்ளது. தனக்குத்தானே தந்துகொள்ளும் தண்டனையாகவும் பார்க்கப்படுகிறது.

இறப்பையே ஒரு தீர்வாகக் கருதுவதன் மூலம் மனம் ஒரு தப்பித்தல் நிகழ்ச்சிக்குத் தயாராகின்றது. பல பருவத்தினர் ஒரே வீட்டில் வாழும் போது பல பிரச்சினைகள் ஏற்படுவதுண்டு. இதனாலும் தற்கொலைகள் இடம் பெற்ற வண்ணம் உள்ளன.

மேலும் இப்பிர தேசங்களில் இளம் பெண்கள் பலர் படையினரா லும், ஏனையோராலும் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப் படுகின்றனர். இதனால் இந்த அவமானம் தாங்க முடியாமையினால் தற்கொலை செய்து கொள்கின்றனர். மற்றும் கிருமி நாசினிகள் போன்றவற்றை இலகு வாக பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதும் தற்கொலை அதிகரிப்புக்கு ஒரு காரணமாகும்.

### காரணிகள்

அடுத்து தற்கொலைக்குக் காரணமாக அமையும் உளவியல் காரணங்களை எடுத்து நோக்கினால் தன்னைப் பற்றிய மிகக் குறைவான சுய மதிப்பீடு, மன நோய் மதுப்பழக்கத்துக்கு அடிமையாதல், மனதில் உண்டாகும் தாக்கங்கள் போன்ற பலவற்றைக் கூறலாம். இந்த உளத் தாக்கங்களுக்குக் காரணமாக இருப்பது சமூகக் காரணிகளே ஆகும்.

தற்கொலைக்குக் காரணமான மன அழுத்தங்கள் பல்வேறு பட்டவையாக அமைகின்றன. உறவு முறையில் உண்டாகும் பிரச்சினைகள், மண முறிவு, காதல் தோல்வி, நட்பில் விரிசல் பிரியமானவர்களின் மரணம் முதலானவை ஏற்படுத்தும் அழுத்தம், மன உளைச்சல் என்பன தற்கொலையைத் தீர்வாய்த் தேட வழி வகுக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் கசிப்புப் பாவனை அதிகரித்து வருகின்றது. இதனால் கசிப்பு உற்பத்தி செய்யும் குடும்பம் உட்பட அந்தச் சூழல் அனைத்தும் அதன் தாக்கத்திற்கு உட்படுகிறது. இதனால் அதிகம் பேர் இதற்கு அடிமையாகின்ற நிலை ஏற்படுகிறது. இதனாலும் தற்கொலை செய்பவர்களின் தொகை அதிகமாகக் காணப்படுகிறது. இவை மட்டுமன்றி ஒருமுறை தற்கொலை முயற்சியில் தோல்வி கண்டவர் சமூகத்தினரின் கேலிப் பேச்சுக்கு ஆளாகுவதால் உள ரீதியான தாக்கத்திற்கு உட்படுகின்றார். இது மீண்டும் தற்கொலைக்கு இவரை இட்டுச் செல்கின்றது.

உளவியல் குறைபாடு இன்று காணக்கூடிய பாரிய உள நோயாகும். இன்று பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மேல் மட்டத்தில் உள்ளவர்கள் அனைவரும் தற்கொலையில் ஈடுபடுகின்றார்கள். எனவே தற்கொலைக்கு உளத் தாக்கமும் ஒரு காரணியாகும். எவ்வாறாயினும் இந்த உளத்தாக்கத்திற்குக் காரணமாக இருப்பது சமூகக் காரணிகளே ஆகும். மட்டக்களப்பு மாவட்ட போதனா வைத்திய சாலை அறிக்கையின்படி

**1995-1999 வரை தற்கொலை செய்தோர் விபரம் பின்வருமாறு:-**

| | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 |
|---|---|---|---|---|---|
| ஆண் | 43 | 37 | 56 | 55 | 41 |
| பெண் | 30 | 47 | 48 | 52 | 64 |

பெண்கள் தற்கொலை புரிவது அதிகரித்துக் கொண்டு செல்வதை இவ் அறிக்கை காட்டுகின்றது. இதற்குக் காரணம் என்ன? தற்போது இடம் பெற்றுக் கொண்டிருக்கும் யுத்த சூழ்நிலையால் பெண்களில் தலையில் குடும்பப் பாரம் உள்ளமை. வேலைப்பழு அதிகரித்தமை, வறுமை போன்ற பல காரணங்களைக் கூறலாம். எனவே, இங்கு தற்கொலையை உண்டு பண்ணக்கூடிய சமூக உளவியற் காரணிகளை இனங்கண்டு அவற்றிற்குரிய பிரதியுபகாரங்களைச் செய்தால் தற்கொலை செய்வோர் தொகையை ஓரளவாவது குறைத்துக் கொள்ளலாம்.

எனவே இதனைக் கட்டுப்படுத்த எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நோக்குமிடத்து 18 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு கிருமிநாசினிகள் விற்பது தடை என்று அரசு எடுத்த நடவடிக்கையை மட்டக்களப்பு மாவட்டத்திலும் அமுல்படுத்த வேண்டும். இது மட்டுமன்றி மட்டக்களப்பு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் பொரும்பாலான வீட்டு முற்றத்தில் அலரி மரத்தைக் காணக்கூடியதாக இருக்கும். இதனால் இலகுவாக இதனைப் பெற்றுக்கொள்கிறார்கள். அதனால் இதனையும் ஓரளவு கட்டுப்பத்தல் வேண்டும்.

மற்றும் மட்டக்களப்பில் உள்ள கிராமப் புறங்களில் கல்வி வசதியை அபிவிருத்தி செய்து கொடுத்தல், பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். அதனுடன் தொழில் வாய்ப்பில்லாதோருக்கு தொழில் வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

குடும்பத்தவர்கள் ஒன்றாக விழாக்களுக்குச் செல்லுதல், மற்றும் பெற்றோர்கள் பிள்ளைகளுடன் நட்பு ரீதியான முறையில் பழகுதல் வேண்டும். இதன் மூலம் பிள்ளைகள் தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை பெற்றோரிடம் கலந்துரையாட வழிவகுக்கும்.

இவை மட்டுமன்றி சகல பாடசாலைகளிலும் தற்கொலையினால் ஏற்படும் விளைவுகள் பற்றி பாடத்திட்டத்தினுடாக பிள்ளைகளுக்கு புகட்டுதல் வேண்டும்.

மட்டக்களப்புப் பிரதேசங்களில் உள்ள பின்தங்கியவர்கள் உள சிகிச்சை பற்றி அறியாமல் உள்ளனர். எனவே, உள சிகிச்சை பற்றிய அறிவைப் புகட்டுதல் வேண்டும். மற்றும் வைத்தியசாலை வசதிகளைச் செய்து கொடுத்தல் வேண்டும்.

இவ்வாறு பல்வேறுபட்ட வசதிகளையும் செய்து கொடுப்பதன் மூலமும் தற்கொலை வாய்ப்பினை குறைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு குடும்பத்திலும், சமூகத்திலும் இதற்கான தீர்வைக் கொண்டு வரல் வேண்டும். அவ்வாறானால் தான் தற்கொலையைக் குறைத்துக் கொள்ளவும், இதனால் சமூகத்தில் ஏற்படப் போகும் பிரச்சினைகளை கட்டுப் படுத்தக் கூடியதாகவும் இருக்கும்.

> தற்கொலையை உண்டு பண்ணக்கூடிய சமூக உளவியற் காரணிகளை இனங்கண்டு அவற்றிற்குரிய பிரதியுபகாரங்களைச் செய்தால் தற்கொலை செய்வோர் தொகையை ஓரளவாவது குறைத்துக் கொள்ளலாம்

# போரும் சமாதானமும்

வாகரை வாணன்

(சென்றவாரத் தொடர்ச்சி....)

வேரினிற் கனிகளோடு
வேண்டிய சுளைகளோடு
ஊரினிற் பலாக்கள் எங்கும்
உட்கார வருவீர். என்று
வாரியே நிழலைக் கொட்டும்
வாசலில் மாவின் சோலை
பாரியைப் போலும் நிற்கும்
பனையது பழங்களோடே.

வாழைகள் குலைகளோடு
வாரிசு குடும்பத்தோடு
பாளைகள் சிரிப்பினோடு
பாக்குகள் கமுகினோடு
தோழமை உறவினோடு
தோடைகள் பழங்களோடு
நாளையப் பயன்களோடு
நால்வித மரங்களோடு

தேசமே தோன்றும் அந்தத்
தெய்வீக லோகமாகும்
வாசமே செய்யும் மக்கள்
வாழ்வது போகமாகும்
பேசுமே கற்கள் கூட
பெருமைகள் கோடி கோடி
ஆசையை ஊட்டும் தேசம்
ஆனந்த சொர்க்கமாகும்

(தொடரும்.......)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பாரிய அழிவுகளை ஏற்படுத்தும்.......... இரசாயன ஆயுதங்கள் பெற்றது உண்மை"

(மட்டக்களப்பு நிருபர்)

பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் இரசாயன ஆயுதங்களை தாம் கொள்வனவு செய்ய வில்லை என்று அரசாங்கம் மறுப்பு தெரிவித்திருப்பதில் ஆச்சரியமில்லை. ஏனெனில் இந்த கொடிய இரசாயன ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கான சாட்சியங்களையும், ஆதாரங்களையும் அரசு ஒருபோதும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. எனவே வடகிழக்கு தமிழர்களின் சட்டபூர்வமான அபிலாஷைகளை இது போன்ற கொடிய ஆயுதங்களின் மூலம் அடக்கி ஒடுக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்து மேலும் தாமதியாது நோர்வே அரசின் சமாதான முயற்சியை முன்னெடுத்து செல்வதுடன் உடனடியாக ஒரு யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு வடகிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்கி புலிகளுடன் உடனடி பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதன் மூலமே பொருளாதார வீழ்ச்சியில் இருந்து இந்த நாட்டை காப்பற்ற முடியும் என்ற யதார்த்த நிலையை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களுக்கு வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு எதிராக உபயோகிக்கும் நோக்குடன் அரசு இரசாயன ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ள உண்மையை விளக்கியும் இவ்வாயுதங்களை உபயோகிப்பதன் மூலம் ஏற்படும் பாரிய அழிவுகள் சம்பந்தமான பல விபரங்களை உள்ளடக்கியும் ஜனாதிபதி அவர்களுக்கு யோசப் பரராஜசிங்கம் எம்.பி. எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு கிழக்கில் வதியும் தமிழ் மக்களுக்கு முழுமையான பாதிப்பை ஏற்படுத்தும் கொடிய இரசாயன ஆயுதங் களை வடக்கு கிழக்கில் நடை பெறும் யுத்தத்தை எதிர்கொள்ள பாதுகாப்பு அமைச்சு கொள்வனவு செய்துள்ளது என்ற செய்திகளை கண்ணுற்ற நான் பெரும் கவலையும், அதிர்ச்சியும் அடைகின்றேன்.

ஆர்.பி.ஒ.சிமெல் றொக்கட் லோஞ்சர் என்ற தொழில்நுட்ப பெயருடைய ஆயிரம் ஆயுதங்களை பாதுகாப்பு அமைச்சு கொள்வனவு செய்துள்ளதென்ற உண்மை வெளியாகியுள்ளது. ரஷ்ய நாட்டில் ஒரேயொரு கம்பனியால் தயாரிக்கப்படும் இவ் ஆயுதங்களை ரஷ்யாவிலிருந்து உக்ரேணிய நாட்டு கம்பனி ஒன்றின் மூலம் வரவழைத்து பிரிட்டிஷ் ஆயுதக் கொள்வனவு கம்பனி மூலமாக பாதுகாப்பு அமைச்சு கொள்வனவு செய்துள்ளது என்ற உண்மையை நான் அறிந்துள்ளேன்.

> *"இலங்கை இப்போது இறக்குமதி செய்துள்ள ரசாயன ஆயுதத்தை ரஷ்ய நாடு செச்னிய நாட்டு மக்களுக்கு எதிராக உபயோகித்த போது சர்வதேச மனித உரிமைக்குழுக்கள் கடுமையான கண்டனம் தெரிவித்தன. மனித உரிமை வார்ச் என்ற நிறுவனம் அதனது ௨000 ஆண்டு பெப்ரவரி மாத அறிக்கையில் இவ்வாயுதத்தை செச்னிய நாட்டில் உபயோகித்ததன் மூலம் ஏற்பட்ட மனித அழிவுகளையும் அதன் விளைவுகளையும் விளக்கியுள்ளது".*

நிலமை இப்படியிருக்கும் பொழுது இதுபோன்ற அழிவுகளை ஏற்படுத்தும் இரசாயன ஆயுதங்களை தாம் கொள்வனவு செய்ய வில்லை என்று அரசாங்கம் மறுப்பு தெரிவிப்பதில் எதுவித ஆச்சரியமும் இல்லை. காரணம் இக்கொள்வனவு சம்பந்தமான ஆதாரங்களையோ அல்லது உண்மையையோ அரசு ஒருபோதும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. இது சம்பந்தமாக தங்கள் இராணுவ பேச்சாளர் சென்ற வாரம் பி.பி.சி. சேவையின் சிங்கள சேவையான சந்தேசிய வானொலிக்கு அளித்த பேட்டியில் இந்த ஆயுதத்தை கொள்வனவு செய்துள்ளோம் ஆனால் அதனைப் பாவிக்கமாட்டோம் என்ற உண்மையையும் வெளியிட்டுள்ளார் என்பதையும் தங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

அமெரிக்க நாட்டின் இரகசிய பாதுகாப்பு ஏஜன்சியின் அறிக்கையின் படி இந்த இரசாயன ஆயுதத்தின் வெடிப்பு முனைப்பகுதி நச்சுத்தன்மையுடையது என்றும் இது ஒரு வேளை வெடிக்கத்தவறினாலும் மிகவும் ஆபத்தான ஆயுதம் என்றும் தெரிவித்துள்ளது. எனவே தான் மனித குலத்திற்கு அழிவு ஏற்படுத்தும் நச்சுத்தன்மையுள்ள இந்த இரசாயன ஆயுத பாவனையை அமெரிக்கா தடை செய்துள்ளது.

இவ் ஆயுதம் மிகவும் நவீன தொழில் நுட்ப ஆகாய எரிபொருள் வெடிமருந்தை உள்ளடக்கியதாகும். இதனை ஏவி வெடிக்க வைப்பதன் மூலம் வெளியாகும் வெடிமருந்து அதன் புகை மண்டலம் படரும் இடம் எல்லாம் எரித்து சாம்பலாக்கி விடும். இந்த ஆயுதத்தை கட்டிடங்களை நோக்கி ஏவுவதின் மூலம் ஏற்படும் சேதம் 122 மில்லி மீட்டர் ஆட்டிலரி ஏவுகணையின் தாக்கத்துடன் ஒப்பிட முடியும்.

கிராமப்புறங்களில் இவ் ஆயுதத்தை போராளிகளுக்கு எதிராக தனித்து ஏவிவிடமுடியாது. காரணம் இதன் பாரிய வெடிமருந்துத் தன்மையும், அதனால் ஏற்படும் அழிவுகளில் இருந்தும் சாதாரண பொது மக்கள் எதுவித பாதுகாப்பும் பெறமுடியாது.

1993ம் ஆண்டு அமெரிக்க நாட்டின் பாதுகாப்பு ஏஜென்சியால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த ஆயுதத்தை மனித சமூகத்திற்கு எதிராக பாவிக்கும் பொழுது இதனால் பாதிப்புக்குள்ளானவர்கள் எரிகாயங்களுக்கு ஆளாவதுடன் இவ் நச்சுத்தன்மையான எரிபொருள் சுவாசிக்கும் பொழுது மனித சுவாசப்பைகளும் பாதிக்கப்படுகின்றது என்று கூறியுள்ளது.

இந்த ஆயுதத்தை ரஷ்ய நாடு செச்னிய நாட்டு மக்களுக்கு எதிராக உபயோகித்த போது சர்வதேச மனித உரிமை குழுக்கள் கடுமையான கண்டனம் தெரிவித்தன. மனித உரிமை வார்ச் என்ற நிறுவனம் அதனது 2000 ஆண்டு பெப்ரவரி மாத அறிக்கையில் இவ் ஆயுதத்தை செச்னிய நாட்டில் உபயோகித்ததன் மூலம் ஏற்பட்ட மனித அழிவுகளையும் அதன் விளைவுகளையும் விளக்கியுள்ளது.

எனவே இந்த ஆயுதத்தால் ஏற்படும் தீமைகள் பற்றி தங்களுக்கு நான் விளக்கத் தேவையில்லை. காரணம் இந் நாட்டின் தலைவி என்ற வகையிலும், முப்படைத்தளபதி என்ற வகையி லும் இவ்வாயுதம் சம்பந்தமான சகல தீமைகளையும், அழிவுகளையும் ஏற்கனவே தாங்கள் அறிந்திருப்பீர்கள்.

**வியட்நாமில் அமெரிக்கா செய்தது**

வியட்நாம் நாட்டிற்கு எதிராக ''ஏஜென்சி ஒறேஞ் என்றழைக்கப்படும் நச்சுத்தன்மையுடைய ''டிபோலியன்'' என்ற இரசாயன ஆயுதத்தை அமெரிக்க நாடு உபயோகித்ததின் மூலம் அந்த நாடு உலக நாடுகளின் கெட்ட பெயரை சம்பாதித்துக் கொண்டது மட்டுமன்றி அப்போரிலும் தோல்வியை தழுவியது என்ற உண்மையை இச்சந்தர்ப்பத்தில் தங்களுக்கு நினைவு கோர விரும்புகின்றேன்.

காலத்திற்கு காலம் இந்த நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்கள் தங்கள் அரசு உட்பட தமிழர் பிரச்சினை சம்பந்தமாக தீர்வு யோசனைகளை இடை நடுவில் கைவிடுவதும் அதற்கு மாறாக வீழ்ச்சி அடைந்து வரும் பொருளாதாரத்துக்கு மத்தியிலும் தமிழ் மக்களின் சட்டபூர்வமான அபிலாஷைகளை அடக்கி ஒடுக்கும் நோக்குடன் மிகவும் கொடிய ஆயுதங்களை கொள்வனவு செய்வதில் அதிக அக்கறை செலுத்தி வருவதும் தங்களுக்கு நன்றாகத் தெரியும்.

தங்கள் காலம் சென்ற தந்தை உணர்ந்து கொண்டது போன்று தமிழர் பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினையாகும். எனவே இப்பிரச்சினை அரசியல் மூலமே தீர்ககப்படல் வேண்டும். ஆயுதத்தின் மூலம் தீர்த்து விடலாம் என்ற தப்பான எண்ணத்தை தாங்கள் கைவிடவேண் டும். பிரச்சினைகளை பேச்சு வார்த்தைகள் மூலமே தீரக்க் வேண்டுமமேயன்றி பயங்கர ஆயுதங்களை பாவிப்பதன் மூலம் தீர்க்க முடியாது என்ற யதார்த் தத்தை தாங்கள் உணர வேண் டும்.

இதுபோன்ற பயங்கரமானதும், அழிவுகளை ஏற்படுத்தும் முயற்சிகளை தங்கள் அரசு மேற்கொள்வதன் மூலம் இந்நாட்டிற்கு பெரும் அழிவு ஏற்படுவதுடன் சர்வதேச சமூகத்தின் முன் இந்நாடு ஒரு ஒதுக்கப்பட்ட நாடாகவே கருதப்படும் என்ற உண்மையை தாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பாரிய அழிவுகளை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களை உப யோகித்து தமிழ் மக்களின் சட்டபூர்வமான அபிலாஷைகளை அடக் கி ஒடுக்கி விடலாமென்ற கொள்கையை கைவிட்டு நோர்வே நாட்டின் சமாதான முயற்சியை தொடர்வதுடன், ஒரு யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு வடக்கு கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்தி தமிழ் ஈழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான தடையை நீக்கி, அவர்களுடன் உடனடியாக பேச்சுவார்த்தை நடாத்தி யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வரவேண்டிய அவசிய நடவடிக்கையை மேற் கொள்வதே அறிவுடைய செய லாகுமென தங்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகின்றேன்.

❖❖❖❖

## அகில இலங்கை ஆங்கில தின போட்டியில் மட்டக்களப்பு மாவட்டம் முதலிடம்

சென்ற ஆண்டு கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை ரிதியிலாக ஆங்கில தினப் போட்டிகளுக்கான முடிவுகள் இந்த வருடம் நடுப்பகுதியில் வெளியிடப்பட்டுள்ளது. இதில் மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னனிப் பெண்கள் பாடசாலைகளில் ஒன்றான மட்/ புனித சிசிலியா பெண்கள் மகா வித்தியாலயம் சிரேஸ்ட பிரிவில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. **"The Plough and the Stars"** என்னும் தலைப்பிலான ஆங்கில நாடகம் மாகாண மட்டப் போட்டியில் முதலிடத்தைப் பெற்று தேசிய ரிதியிலான போட்டிக்கு தெரிவாகியது பின்னர் சென்ற வருடம் 2000ம் ஆண்டு நடுப்பகுதியில் கொழும்பு நாலந்தா வித்தியாலயத்தில் அகில இலங்கை ரீதியான போட்டிகள் நடைபெற்றது. பல மாகாணங்களுடன் போட்டியிட்டு அகில இலங்கை ரீதியாக முதலிடத்தைத் தட்டிக் கொண்டது இந்த நாடகத்தினை நெறியாழ்கை செய்தவர் திருமதி எலோமா முத்துலிங்கம. இதில் பங்கு பற்றிய மாணவ மாணவிகளுக்கு தேசிய மட்டத்திலான சிறந்த நடிக நடிகைகளுக்கான விருதுகளும் வழங்கப்பட்டுள்ளது. இதில் தேசிய விருதினை உயர்தர வகுப்பு மாணவி செல்வி சுகன்யா முத்துலிங்கம்,க.பொ.த சாதாரணதர வகுப்பு மாணவி செல்வி பிறஷனா மகேந்திரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். சென்ற வருடம் 2000 ம் ஆண்டுக்கான முடிவுகள் இந்த வருடம் நடுப்பகுதியிலேயே வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.



**செல்வி பிறஷனா மகேந்திரன்**
தேசிய விருது பெற்ற மாணவி



**செல்வி சுகன்யா முத்துலிங்கம்**
தேசிய விருது பெற்ற மாணவி



செல்வி. பிறஷனா மகேந்திரன், சேரா சுவீற்றா மவுன்பட்டன், சரண்யா குருபரதாஸ், அனிதா சுபாஷ் ரவீந்திரன், டெலினா ப்பீலிக்ஸ், யாமினி இன்பநாதன், தனுசியா யோகேந்திரன், சுகன்யா முத்துலிங்கம்.

ஆன் முஷந்தா பம்பெக் , லக்ஷினி ஏளாளசிங்கம், அருட் சகோதரி எலிசபெத்(அதிபர்) , திருமதி எலோமா முத்துலிங்கம்(ஆசிரியர் நெறியாள்கை), ஷரளின் டிலிமா, கௌசல்யா இராமலிங்கம்.

## உலகின் கண்களை.........................

*(3ம் பக்க தொடர்ச்சி)*

முறையிட்ட போது அவ்விடத்தை அடைந்த அவர்கள் அப் பைகளை சோதனையிட்டனராம். அப்போது அதற்குள் விமானப் படையினர் அணியும் உடைகளை ஒத்ததான சில உடைகளும் தண்ணீர்ப் போத்தல்கள் மற்றும் சில வீட்டுப் பாவனைப் பொருட்கள் மருந்து வகைகள் என்பன இருந்துள்ளன. இதனையடுத்து இவைகள் அப்பகுதியில் இருந்து வெளியேறிய உல்லாசப் பயணிகள் விட்டுச் சென்றவையாக இருக்கலாம் எனக் கூறி விமானப் படையினர் சென்று விட்டனராம். இதே போன்றே 23ம் திகதி இரவும் இளைஞர்கள் வந்து நின்றபோது அப்பகுதி மக்களில் சிலர் அவர்களுடன் உரையாடியுள்ளனர். அதன் போது மத்திய கிழக்கிற்கு செல்லும் ஒருவரை வழியனுப்ப தாம் வந்ததாக சிங்களத்தில் இளைஞர்கள் கூறியுள்ளனர். ஆனாலும் அவர்கள் சென்றதன் பின் விமானப் படையினரிடம் முறையிடப்பட்ட போது, மீண்டும் மைதானத்திற்கு வந்த விமானப் படையினர், மாத்தறைப் பகுதியில் இருந்து வந்த இளைஞர்கள் களியாட்டத்தில் ஈடுபட்டிருக்கலாம் எனக் கூறிவிட்டு சென்றுள்ளனர் எனத் தனது கட்டுரையில் கூறியுள்ளது.

இத் துணிகரமான தாக்குதலில் ஈடுபட்ட இளைஞர்கள் மின்வெட்டும் நேரத்தில் விமானப் படைத்தளத்திற்குள் நுழைந்த போதிலும், அடுத்த சில மணி நேரங்கள் அருகில் இருந்த வெற்று கட்டிடம் ஒன்றில் தங்கியிருந்துள்ளனர். அதிகாலை 3.30 மணியளவிலேயே முதலாவது தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு இடையிலான பொழுதில் இவ் அணிகள் எந்தவித செயற்பாடுகளில் இறங்கியிருந்தன....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடைக்குச் சென்ற தொழிலாளர்களுக்கு கல்லாறு பொலிஸார் அனுமதி மறுப்பு!

(நமது நிருபர்)

**அம்பாறை மாவட்டத்தில் விவசாய அறுவடைக்காகச் சென்ற மட்டக்களப்பு மாவட்ட வேளாண்மை அறுவடைத் தொழிலாளர்கள் நேற்று கல்லாறு பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.**

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று, பொத்துவில் நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய வயற் பிரதேசங்களுக்கு வேளாண்மை அறுவடைகளை மேற்கொள்ளுவதற்காக பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடு,கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து சென்ற போதே பொலிஸாரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

முழுப்பெயர்,வதிவிட முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பன குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் பிரதேச செயலாளர் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டு சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதிப் பத்திரம் பெற வேண்டும் இவ்வாறு அனுமதிப் பத்திரம் பெற்றவர்களுக்கு மாத்திரம் அறுவடைக்குச் செல்லுவதற்கு அனுமதி வழங்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீமுக்கு ஏறாவூரில் மாலை அணிவித்து அமோக வரவேற்பு!

(நமது நிருபர்)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் நேற்று ஏறாவூருக்கு வருகை தந்திருந்தார்.

பசீர் சேகுதாவூத் எம்.பி. யின் அழைப்பின் பேரில் வந்த இவர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி நிதிகளையும் கட்சி ஆதரவாளர்களையும் சந்தித்து உரையாடினார்.

தற்போது முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்ட பிளவுகள் அரசியல் நெருக்கடிகள் கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்பன குறித்து நேற்று பிற்பகல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டு தெளிவுபடுத்தியுள்ளார்.

இக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத் முன்னாள் பிரதி அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான மொகைதீன் அப்துல் காதர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இவரது வருகையை முன்னிட்டு நேற்று ஏறாவூர் நகரம் விழாக்கோலம் பூண்டு காணப்பட்டது. பச்சை, மஞ்சள் வர்ணக் கொடிகளினால் பிரதான வீதி, மணிக் கூட்டு கோபுரம் என்பன அலங்கரிக்கப் பட்டு காணப்பட்டன. அத்துடன் அவரைக் கௌரவிக்கும் வகையி லான வாசகங்கள் அடங்கிய பதாதைகளும் காணப்பட்டன.

பெருந் தொகையான மக்கள் மாலை அணிவித்து வரவேற்பு செய்ததுடன் கூட்டத்திலும் கலந்து கொண்டனர்.

ஹக்கீம் வருகையை முன்னிட்டு ஏறாவூரில் நேற்று பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுக், காணப்பட்டது.நேற்று பிற்பகல் பிரதான வீதி போக்குவரத்து மறிக்கப்பட்டு உள்வீதி வழியா கவே வாகனங்கள் செல்வதற்கு அனுமதிக் கப்பட்டது.

---

பிரிட்டிஷ்......................

முயற்சி செய்தும் முடியாமல் போய் விட்டதாம் இதனைத் தொடர்ந்து வெளிவிவகார அமைச்சரின் அந்தரங்கச் செயலாளர் லீலா நவரத்தினராஜாவுடன் மணிக்கொரு தடவை தொடர்பு கொண்டும் கிடைக்க முடியாமல் மறுநாள் தொடர்பு கொண்டபோது விசா வழங்குவதில் உதவி செய்ய முடியாதிருப்பதாக தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.பிரன்னர் பிரபு ஒரு தூதுக் குழுவுடன் இலங்கை வர விருந்தார் என்று தெரிகிறது.

---

பொலிஸ் ........................

இந்த பிரதான வீதியில் பொலிஸ் நிலையத்தை தாண்டி சைக்கிளில் சென்று கொண்டிருந்த இந்த இளைஞர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்து அவர்களை சுட்டுக்கொன்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர்கள் கொக்கட்டிச்சோலை அரசடித்தீவைச்சேர்ந்த நவரத்தினராசா சுதர்சன் (23 வயது). ஆரையம்பதி தாளங்குடாவைச் சேர்ந்த வெள்ளைத்தம்பி புவனேந்திரராஜன் (18வயது) என அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர்களிடமிருந்த தேசிய அடையாள அட்டை மூலமே இவர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இவர்களது சடலங்களை காத்தான்குடி பொலிஸார் மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

சுதர்சனது சடலம் அனைத்துலக செஞ்சிலுவைச் குழுவினரால் அரசடித்தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது மற்றய சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# மணிலாவில் தீ விபத்து 70 பேர் பலி!

(மணிலா-18)

பிலிப்பைன்ஸ் மணிலா நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று இடம் பெற்ற தீ விபத்தில் 70 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் அனைவரும் மூச்சுத் திணறியே உயிரிழந்துள்ளனர்.

---

பதுளை..................

கல் வைத்தியசாலையிலும் 35 பேர் அளவை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்து புகையிரதப் பாதை இரட்டை வழி பாதையென்பதால் புகையிரத சேவையில் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என புகையிரத திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பெற்றோல் குண்டு வீச்சில் வியாபாரி காயம்

(க.ஜெகதீஸ்வரன்)

சில்லறைக் கடை வியாபாரி ஒருவர் தனது கடையிலிருந்து வரும் போது இனந் தெரியாதோரால் பெற்றோல் குண்டு வீசப்பட்ட சம்பவம் ஒன்று வெள்ளிக்கிழமை ஏறாவூரில் நடைபெற்றது.

பெற்றோல் குண்டு வீச்சுக்கு இலக்கானவர் பக்கீர் மொஹீதீன் அமீர் இஸ்த்தக் (29) என்ற இளம் வாலிபரே.

காயத்துக்குள்ளானவர் மட்டக்களப்பு அரச போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

---

கட்டுநாயக்காவில்........

எரிந்து கருகிக் கிடந்த விமானியின் உடல் உறுப்புக்கள் பிளாஸ்ரிக் பைகளில் மீட்புப் பணிகளில் ஈடுப்பட்டோரினால் அள்ளிக் கட்டி அனுப்பப்பட்டது. விமானம் விழுந்து பற்றி எரிந்த தீ மற்றும் வீடுகளுக்கும் பரவாமல் தீயணைப்பு படையினர் வந்து தீயை அணைத்தனர்.

இரண்டு ஜெட் விமானங்கள் பறந்து சென்றதாகவும் உக்ரேன் விமானம் உயர எழுந்து பறக்க முடியாமல் விழுந்து நொறுங்கியதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானம் விழுந்ததில் வீடு முற்றாக நாசமாகிவிட்டது மற்றும் மூன்று வீடுகள் சேதமடைந்தன கடந்த மாதம் 24ந் திகதி கட்டுநாயக்கா விமானப் படைத்தாக்குதலில் மிக் 27ரக விமானமொன்று விடுதலைப் புலிகளால் நாசமாக்கப்பட்டது தெரிந்ததே.

கட்டுநாயக்கா தாக்குதலின் பின் மீண்டும் வடக்கிலும் கிழக்கிலும் விமானக் குண்டு வீச்சு தினமும் நடைபெற்று வரும் இச்சமயத்தில் இந்த மிக் 27 ரக போர் விமானம் விழுந்து நொறுக்கியிருக்கிறது. விபத்துக்கான காரணங்கள் தெரியவருவதற்காக கறுப்புப்பெட்டி விபத்து நடந்த இடத்திலிருந்து மீட்கப்பட்டதாக பிற்பகல் கிடைத்த செய்தி தெரிவித்தது.இந்த போர் விமானம் விபத்துக்குள்ளாகி நாசமானது இலங்கை விமானப்படைக்கு மேலும் ஏற்பட்ட பலத்த அடி என்று கருதப்படுகிறது.

---

தாக்குதலுக்கு........................

கத்திலிருந்து விலகி இராணுவத்தினரிடம் சரணடைந்த முதலைக்குடாவைச்சேர்ந்த தில்லைநாயகம் நற்குணம் என்பவரும் தாக்குதல் குழுவில் சென்றதாகவும் அவரே ராசிக்குழுவைச் சேர்ந்த மேகநாதனை சுட்டுக்கொன்றுவிட்டு அவரிமிருந்த ரி.56 ரக துப்பாக்கியையும் எடுத்துச்சென்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 15.3.2001 அன்று நற்குணம் என்ற விடுதலைப புலிகள் இயக்க உறுப்பினர் ஒரு துப்பாக்கியுடன் வவுணதீவு இராணுவ முகாமில் சரணடைந்திருந்தார். அவர் இன்று ராசிக் குழு முக்கிய தலைவர் ஒருவரை சுட்டுவிட்டு இரு துப்பாக்கிகளுடன் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு சென்றுவிட்டதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடத்துவதற்காக பதுங்கியிருந்தபோது இச்சம்பவம் நடைபெற்றதாக ராசிக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவத்தினரும் ராசிக் குழுவினரும் வவுணதீவு இராணுவ முகாமிலிருந்து 2 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள குறிஞ்சாமுனைக்கு வெள்ளியிரவு 8 மணிக்கு சென்று அங்கு பதுங்கியிருந்தனர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் அருகில் இருந்த நற்குணம் என்பவர் ராசிக்குழு உறுப்பினரான மேகநாதன் மீது தாக்குதல் நடத்திவிட்டு அவரிடமிருந்த ஆயுதத்தையும் எடுத்துக் கொண்டு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு தப்பி சென்று விட்டதாக ராசிக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலையடுத்து பதுங்கியிருந்த இராணுவத்தினரும், ராசிக்குழுவினரும் உடனடியாக வவுணதீவு இராணுவ முகாமுக்கு திரும்பினர். பின்னர் காலை 7மணியளவில் குறிஞ்சாமுனைப்பகுதிக்கு சென்ற படையினர் மேகநாதனின் சடலத்தை எடுத்துவந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். அங்கு நடைபெற்ற மரணவிசாரணைகளையடுத்து சடலம் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது.

# இரசாயன ஆயுதக் கொள்வனவை அம்பலப்படுத்த தமிழ் கட்சிகள் தீர்மானம்

(நமது நிருபர்)

இலங்கை அரசு இரசாயன ஆயுதங்கள் கொள்வனவு செய்தது தொடர்பாக கண்டனத் தீர்மானம் ஒன்றை தமிழ் கட்சிப் பிரதிநிதிகள் கூடி நிறைவேற்றியுள்ளனர்.

இது தொடர்பாக ஐ.நாடுகள் அமைப்பு மற்றும் மனித உரிமை அமைப்புக்களின் கவனத்திற்கு கொண்டு வருவதுடன் வெளிநாடுகளின் இலங்கைத் தூதுவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

தமிழர் விடுதலை கூட்டணி தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் உப தலைவர் வி.ஆனந்தசங்கரி தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது அ.இ.த. காங்கிரஸ், ரெலோ, சி.முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.கட்சி, மலையக மக்கள் முன்னணி, ஆகிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# முருங்கனில் ஒருவர் கைது

(வவுனியா நிருபர்)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு தடைசெய்யப்பட்ட பொருட்களை எடுத் துச் செல்ல முற்பட்டதாகக் கூறி மாத்தாண்டன் கணபதிப்பிள்ளை (33) என்பவர் முருங்கன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் தற்போது மன்னார்விசேட விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# விமானம் சரிந்து விழுவதைக் கண்டேன்

**நீர்கொழும்பு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்**

(கொழும்பு)

விமானம் ஒன்று சரிந்து வருவதாக எனது கார் சாரதி தெரிவித்தார் அவர் காட்டிய திசையை உற்று நோக்கிய சமயம் விமானம் ஒன்று சத்தத்துடன் வந்து வீடுகள் மீது விழுந்து எரிந்தது இவ்வாறு விமான விபத்து சம்பவத்தை நேரில் கண்ட நீர் கொழும்பு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அரசரெத்தினம் தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் இருந்து 11.15 மணியளவில் கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த சமயமே இடம் பெற்றதாகவும் விமானம் விழுந்ததும் பெரும் தீப்பிழம்பு தெரிந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

---

விமான.....................

மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடில்லாதப் பிரதேசங்களில் விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விமானத் தாக்குதலால் இப்பிரதேசத்தில் வாழும் பொது மக்கள் உயிராபத்தை எதிர் நோக்கி வருகின்றார்கள் கண்மூடித்தனமாக மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் இத்தகைய தாக்குதல்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் செயலாளர் கதிர்பாரதிதாசன் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் கோரியுள்ளார்.

# ராஜினாமாவுக்கு அமைச்சர்கள் அலவி,மங்கள, ரத்வத்தை விருப்பம்

(நமது நிருபர்)

இராஜினாமா கடிதங்களை ஜனாதிபதியிடம் கையளிக்க சில அமைச்சர்கள் முன் வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்களான அலவி மௌலானா, மங்கள சமரவீர, அனுருத்த ரத்வத்தை ஆகியோரே இவ்வாறு கையளிக்கச் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

பிரதியமைச்சர்கள் மற்றும் அமைச்சரான ரெஜி ரணதுங்கா ஆகியோர் இணக்கம் தெரிவித்ததைத் தொடர்ந்தே இவர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர்.

# ஆளுனரின் கவனத்திற்கு!

(பௌசியா)

காத்தான்குடி நகரசபை ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத் தலைவர் [illegible] தொழிலாளர்கள் [illegible] உரையாடியுள்ளனர்.

பதின் மூன்று ஆண்டுகளாக நிரந்தர நியமனம் இன்றி தொழில் புரிவதாகவும் ஊழியர்களுக்கு சீருடை அங்கிகள் உட்பட பல பொருட்கள் வழங்கவில்லை எனத் தெரிவித்துள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.